இன்றைய காலநிலை



கூடிய வெப்பநிலை 33 c°
குறைந்த வெப்பநிலை 27 c°
வெப்பமான காலநிலை



உலகின் சிறந்த இசையமைப் பாளர்கள் பட்டியலில் இளையராஜா 9 ஆம் இடம்

06



மாயமான மலேசிய விமானம் தலிபானின் கட்டுப்பாட்டிலா?

07



இலங்கை உலகக் கிண்ணம் கைப்பற்றி 18 வருடங்கள்

04


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 32

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 | கதிர்: 113 | வள்ளுவர் ஆண்டு: 2045 | பங்குனி 05, புதன் 19.03.2014


## இலங்கை மீதான பிரேரணை மேலும் வலுவடைகிறது

### திருத்தங்களை மேற்கொள்வதில் சுவிட்ஸர்லாந்தும் மும்முரம்

ஜெனிவா, மார்ச் 19

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் முன்வைக்கப் பட்டுள்ள தீர்மான வரை வின் முறைசாரா பகிரங்கக் கலந் தாய்வில் நேற்று நடைபெற்று முடிந்துள் ளது. அதன்போது சுவிட்ஸர் லாந்து பெறுமதியான மேலும் பல திருத்தங்கள் உள்வாங் கப்பட வேண்டும் என்று வலி யுறுத்தியதுடன், இலங்கை யின் நிலைமைகள் குறித்தும் வாதிட்டது.

இந்தப் பகிரங்கக் கலந்தாய் வில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு உறுப்பு நாடுகளின் பார் வைக்காக அமெரிக்கா உள் ளிட்ட நாடுகளால் விநியோகிக் கப்பட்ட திருத்தப்பட்ட இரண்டா வது தீர்மான வரைவின் உள் ளடக்கம் குறித்து விரிவாக பேசப்பட்டது. அதில் பெரும் பாலான மேற்குலக நாடுகள் தீர்மான திருத்தத்தினை வர வேற்றிருந்ததோடு, பன்னாட்டு விசாரணைக்கு ஆதரவு தெரி வித்தன. சுவிட்ஸர்லாந்து, கனடா, பிரிட்டன், இத்தாலி, ஜேர்மன், இன்னும் பல நாடுக ளின் பிரதிநிதிகள் இலங்கை அரசு மீது சர்வதேச பொறி முறை ஏற்படுத்த வேண்டும் எனும் அர்த்தத்தில் கடும் தர்க் கத்தில் ஈடுபட்டனர்.

43 நாடுகள் பங்கெடுத்திருந்த இக் கலந்தாய்வில் சிவில் அமைப்பினரும் பங்கெடுத்து கருத்துக்களை வழங்கியிருந் தனர். 30க்கும் மேற்பட்ட தமி

21 ஆம் பக்கம் பார்க்க

# நிபந்தனையற்ற பேச்சுக்கு நாம் இப்போதும் தயார்

### சர்வதேசத்தை நோக்கி எம்மைத் தள்ளியது அரசுதான்
### வடக்கு மாகாண உறுப்பினர்கள் சபையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

நிபந்தனையற்ற பேச்சுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயார் என்றால் நாங்களும் ஜனாதிபதியுடன் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்று ஒரு மித்த குரலில் தெரிவித்தனர்.

சர்வதேச தலையீட்டை நாம் கோரவில்லை.பதவிக்கு வந்த அரசுகளே எம்மைச் சர்வதே சத்தை நோக்கித் தள்ளிவிட் டன என்றும் அவர்கள் குறிப் பிட்டனர்.

ஜனாதிபதி எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்று வதாக இல்லை. இந்த நிலை யில் நாம் என்ன செய்யமுடி யும்? என்றும் அவர்கள் கேள்வி யெழுப்பியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் இ.அங்க ஜனின் உரைக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபை அமர்வு நேற்று ஆரம்பமானபோது எதிர்க்கட்சி உறுப்பினர் அங் கஜன் இராமநாதன், அவைத் தலைவரின் அனுமதியுடன் உரையாற்றினார்.

அங்கஜன் இராமநாதன் தனது உரையில்,

"எமது உள்நாட்டு விவகாரங் களைச் சர்வதேச மயப்படுத்து வதன் மூலம் இந்த நாட்டி லுள்ள எவரும் நன்மையடை யப் போவதில்லை. நாம் இளை ஞர்களுடன் பேசி, இளைஞர்க

21 ஆம் பக்கம் பார்க்க

## கைதானோர் புலிகளோடு தொடர்பு உடையோர்

### ஆங்கில ஊடகம் தகவல்

ஜெனீவா, மார்ச் 19

கைது செய்யப்பட்டுள்ள தேசிய சமாதானப் பேரவையின் முக் கிய செயற்பாட்டாளர்களான ருக்ஷி பெர்னான்டோவும், அருட் தந்தை பிரவீன் மகேசனும் தமிழீழ விடுதலைப் புலிகளு டன் நெருக்கமான தொடர்பு களை வைத்திருந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகே

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா தீர்மானம் தேவையற்றது

### சீனத் தூதுவர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 19

இலங்கைக்கு எதிரான தீர்மா னம் ஒன்றைக் கொண்டுவர வேண்டிய அவசியம் உள்ளது என்று நாம் கருதவில்லை. ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக எந்தவொரு தீர்மா னத்தையும் கொண்டுவருவ தற்குத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

தெனியாயவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கொழும்பில் உள்ள

21 ஆம் பக்கம் பார்க்க

## கைதுகளுக்கு எதிராகப் போராட்டம்




யாழ்ப்பாணம், மார்ச் 19

அண்மையில் கைது செய்யப்பட்ட ஜெயக் குமாரி, அவரது மகளான விபூசிகா மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் கைது நடவடிக்கைகளைக் கண்டித்து வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சியான

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபையில் நேற்று 21 தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடமாகாண சபையின் நேற் றைய அமர்வில் காங்கேசன் துறை சிமெந்து ஆலையை மீளச் செயற்படுவதை நிறுத்து தல் மற்றும் இராணுவ வெளி யேற்றம் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக 21 பிரேர ணைகள் நிறைவேற்றப்பட்டன. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராஜாவி னால்கிளிநொச்சியிலுள்ளஇளை

23 ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை நேற்றிரவு விடுதலை செய்தது ரி.ஐ.டி.

கொழும்பு,மார்ச் 19

கிளிநொச்சி தருமபுரம் பகுதி யில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அமைதிபுரம் பங் குத்தந்தை பிரவீன் மகேசன், தென்பகுதியைச் சேர்ந்த மனித உரிமைசெயற்பாட்டாளர் ருக்ஷி பெர்னாண்டோ ஆகியோர் நேற்றிரவு விடுதலை செய்யப் பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

நேற்று ஐ.நா. மனித உரிமை கள் சபை அமர்வில் இலங்கை அரசுசார்பாக அளிக்கப்பட்ட விளக்கம் ஒன்றில், விடுதலைப் புலிகளை மீளக்கட்டியெழுப்பு வதற்கு சிலர் முயற்சித்து வருவ தாகவும் இவ்வாறான நடவடி க்

21 ஆம் பக்கம் பார்க்க

## வாடகைக் கார் மோசடி; பணம் பெற்றவருக்கு பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 19

கொழும்பில் வாடகைக்கு வாக னங்களைப்பெற்று அவற்றை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து விற்பனை செய்த பின் னர் வாகன உரிமையாளர் கள் மூலமாகப் பணம் பறித்து வந்த குற்றச்சாட்டில் கைதான செட்டியார் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார். கடந்த வருடம் யாழ்ப்பாணத்தி லுள்ள பலரிடம் இவ்வாறு

21 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் அதிகாரம் எனக்குண்டு

### ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் திட்டவட்டம்

ஜெனீவா, மார்ச் 19

சர்வதேச மனித உரிமை சார் விடயங்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையின் அங்கீகாரத்துடன் விசாரணை செய்யும் அதிகாரம் தமக்கு உள்ளது என்று தெரிவித்துள் ளார் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை. நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற சிவில் அமைப்புக்களுடனான கருத்துப்பகிர்வின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார் நவிப்பிள்ளை இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் ஐ.நா. அமர்வில் சமர்பிக்கப்பட் டுள்ள தீர்மான வரைபில், இலங்கை மீது ஐ.நா. மனித உரிமை

21 ஆம் பக்கம் பார்க்க


## முன்னாள் போராளி ரி.ஐ.டியினரால் கைது

கிளிநொச்சி,மார்ச் 19

புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட மாற்றுத்திற னாளியான முன்னாள் போராளி ஒருவரை முல்லைத்தீவு உடை யார்கட்டுப் பகுதியில் அவரது வீட்டில்வைத்து பயங்கர வாதத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைதானவர் வெதுப்பகம் ஒன்

21 ஆம் பக்கம் பார்க்க




ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர்.

# பொதுமக்களின் கருத்துகளறிந்து வலி.மேற்கில் செயல் திட்டங்கள்

## நடவடிக்கை எடுக்கிறது பிரதேச சபை

யாழ்ப்பாணம்.மார்ச் 19

மக்கள் கருத்துக்களுடன் வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான வாக்கெடுப்புகள் வலி.மேற்குப் பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஆரம்பமாகியுள்ள இந்தச் செயற்றிட்டம் எதிர்வரும் 27ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பொதுமக்களும் தமது கருத்துக்களை முன்வைக்கக்கூடியவாறு இந்தச் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தமது கருத்துக்களை முன்வைத்த தன் பின்னர், அவற்றில் முதன்மைத் திட்டத்தினை தெரிவு செய்வதற்காக வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அதிகூடிய வாக்கை பெற்ற திட்டம் முதன்மைப்படுத்தப்படவுள்ளது. வலி.மேற்கில் பிரதேச மக்கள் பங்கேற்புடன் அபிவிருத்தித் திட்டங்கள் தயார் செய்யப்படுவதற்கு ஏதுவாகவே இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர், கிராம சேவையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்; பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் துறைசார் வல்லுநர்களின் உதவியுடன் இந்தச் செயற்றிட்டம் நடைபெற்று வருகின்றது. (ந-14-21)

# இலங்கை அரசுக்கு எதிராக சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க், மார்ச் 18

அமெரிக்காவில் உள்ள சிங்களவர்கள் அண்மையில் இலங்கை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்துக்கு முன் ஒன்றுகூடிய அவர்கள் இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “இலங்கையில் கருத்துச் சுதந்திரம் இல்லை', 'பயங்கர வாதத் தடைச்சட்டம் மூர்க்கமானது', போன்ற வாசகங்களை அவர்கள் தாங்கியிருந்தனர்.

ஜெனீவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை ஒட்டியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது. (ந)



யாழ்.பொலிஸ் நிலையம் அமைந்துள்ள மகாத்மா காந்தி வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றுக்கு மண் ஏற்றிப் பறிக்கும் டிப்பர் வாகனம் வீதியில் திடீரெனப் பழுதடைந்ததால் அந்த வழியூடான போக்கு வரத்து சிறிது நேரம் தடைப்பட்டது. (ந-4)

# மாடு திருடிய இருவருக்கு சிறையும், அபராதமும்

யாழ்ப்பாணம், மார்ச் 19

மாட்டைத் திருடிய இருவருக்கு 6 மாதகாலச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்துள்ள நீதிமன்று, திருடப்பட்ட மாட்டைதம் உடமையில் வைத்திருந்த குற்றத்துக்காக மேலும் 6 மாத சிறைத் தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ்.கொட்டடியைச்சேர்ந்த இருவர் வேலணைக்குச் சென்று மேச்சலுக்கு விடப்பட்டிருந்த மாட்டைத் திருடி வாகனத்தில் ஏற்றிச் சென்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட இருவரும் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அதன் போது தம்மீதான குற்றச்சாட்டை இருவரும் ஒப்புக் கொண்டனர்.

அதனையடுத்தே மாடு திருடியதற்காக 6 மாதச்சிறைத் தண்டனையும் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. தவிர திருட்டுப் பொருளைத் தம் உடமையில் வைத்திருந்த குற்றத்துக்காக மேலும் 6 மாதச் சிறைத் தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத் தேதோடு ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (ந-4)

# கொள்கையில்லாதவர் ஹக்கீம் கடுமையாக சாடுகிறார் ரில்வின்

கொழும்பு, மார்ச், 19

அமைச்சர் ஹக்கீம் கொள்கையில்லாதவர். தனது சிறப்புரிமைகளுக்காக அடிக்கடி தன்னை மாற்றிக்கொள்பவர். இப்போது அரசுக்குள் அவருக்கெதிராக சில நெருக்கடிகள் தலைதூக்கியுள்ளன. இதன் காரணமாகவே அரசின் நடவடிக்கைகளை பொது மேடைகளில் விமர்ச்சிக்கின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி.யின் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"நீதியமைச்சர் அமைச்சர் ஹக்கீம் கொள்கையில்லாதவர். தனது சமூகத்திற்கே எதனையும் செய்யாத அவர் இன்று அரசுக்குள் நெருக்கடி யென்றதும் அரசு எதிர்ப்பு கோஷத்தை கையிலெடுத்துள்ளாரே தவிர தான் சார்ந்த சமூக நலத்துக்காக அல்ல.

அவர் உண்மையிலேயே விமர்சிப்பதென்றால் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரென்ற ரீதியில் ஜனாதிபதியிடம் தனது விமர்சனங்களை முன்வைக்கலாமே. அதனை விடுத்து ஏன் பொது மேடைகளில் பேச வேண்டும்?

அவரால் தான் சார்ந்த முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளைக் கூட பெற்றுக்கொடுக்க முடியவில்லை. அது மட்டுமல்லாது இன்று அரசின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் ஹக்கீம் இந்த அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொடுக்க துணை போனார். அது மட்டுமல்லாது சுயாதீன ஆணைக்குழுக்கள் அனைத்தும் இல்லாதொழிக்கப்படுவதற்கும் இந்த சுயாதீன குழுக்களை நியமிக்கும் அதிகாரம் தனிநபரொருவரின் அதிகாரத்திற்கு கீழ் கொண்டு வருவதற்கும் ஜனாதிபதி பதவிக்காலம் இரண்டு தடவைகளுக்கு அதி கரித்துக்கொள்ள முடியும் என்ற சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கும் துணை போனவர் ஹக்கீம்.

இவர் ஒரு சந்தர்ப்பவாதி. அவரது பேச்சுக்களை நம்ப முடியாது."- என்று தெரிவித்துள்ளார். (ந-10)

# நீதிக்காக குரல் கொடுப்பவர்களை அடக்க முயல்கின்றது இராணுவம்

## கைதுகளை வன்மையாகக் கண்டிக்கின்றது யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

யாழ்ப்பாணம், மார்ச் 19

அண்மைக் காலமாக வட பகுதியில் குறிப்பாக வன்னிப் பகுதியில் அரங்கேறி வரும் கைதுகள், சுற்றிவளைப்புகள், தேடுதல்கள் என்பன மக்கள் மத்தியில் அச்ச உயர்வையும், பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடிக்கை மிகவும் கண்டிக்கத்தக்கது என்று தெரிவித்துள்ளது யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு.

கிளிநொச்சி தருமபுரத்தில் கைது செய்யப்பட்ட ஜெயகுமாரி மற்றும் அவரது மகளான சிறுமி விபூசிகா மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான பிரவீன் மகேசன், ருக்ஷி பெர்னாண்டோ ஆகியோரின் கைது தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

சில நாள்களுக்கு முன்னர் தருமபுரத்தில் கைது செய்யப்பட்ட ஜெயகுமாரி என்ற தாயும் விபூசிகா என்ற அவரது மகளும் காணமற்போனவர்களின் துயருறும் உறவுகளின் குறியீடுகள். அவர்களது குரலை மௌனிக்கச் செய்யவே இந்தக் கைது நடவடிக்கை என்று எல்லோருக்கும் தெரியும்.

காணாமற்போனவர்கள் பற்றிய விவரங்கள் சேர்க்கும் பணியில் ஈடுபட்ட பிரவீன் மகேசன் அடிகளும், ருக்ஷி பெர்னாண்டோ என்ற மனித உரிமை ஆர்வலரும் கைது செய்யப்பட்டுள்ளமையை மக்களை அச்சுறுத்தும் செயற்பாடாகவே நாம் பார்க்கின்றோம்.

காணாமற்போனோர் குறித்து இனியாரும் மூச்சு விடக் கூடாது என்ற செய்தி இதுபோன்ற சுற்றிவளைப்புகள், கைதுகளால் தரப்பட்டுள்ளது.

யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு இதுபோன்ற சுற்றிவளைப்புகளையும் கைதுகளையும் உடன்நிறுத்தி மக்கள் அமைதியாக வாழ வழி செய்ய வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

இதுபோன்ற சுற்றிவளைப்புகள், கைதுகளுடன் காணாமற் போனோர் விடயம் தொடர்புபட்டுள்ளதால் அண்மையில் அரசு ஏற்படுத்திய காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் இதயசுத்தித் தன்மையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இதுபோன்ற செயற்பாடுகள் நிலைமையை மேலும் மோசமாக்கவே வழிவகுக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது. (ந)

# தமிழர்களின் நூறு ஏக்கர் நிலம் இராணுவக் குடும்பங்களுக்கு

## திரைமறைவு நடவடிக்கைகள் வவுனியாவில்; மாகாண சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வவுனியா பாவற்குளத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான சுமார் நூறு ஏக்கர் காணிகளில் இராணுவத்தின் குடும்பங்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ள வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் அதற்கான ஆதாரங்களையும் வட மாகாண சபை அமர்வின் போது காண்பித்தனர்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய 7ஆவது அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவினால் முன்மொழியப்பட்ட பிரேரணை தொடர்பான விவாதத்தின் போதே இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட பிரேரணையில், வவுனியா மாவட்டத்தில் வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரதேசத்துக்குட்பட்ட பாவற்குளம் யூனிற்றில் அமைந்துள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான நூறு ஏக்கருக்கு மேலான காணியை அரசு கையகப்படுத்தி வவுனியா தெற்குப் பிரதேச செயலகத்தின் ஊடாக படையினர் குடும்பங்களையோ அல்லது வேறு எவரையுமோ குடியேற்றுவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டுமென வவுனியா மாவட்ட அரச அதிபரை இந்தச் சபை கோருகின்றது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் தொடர்பான விவாதத்தின் போதே, இராணுவத்தின் 600 குடும்பங்களைக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது தொடர்பில் குற்றஞ்சாட்டினர். வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினர்கள் இ.இந்திரரசா, அமைச்சர் ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரே ஆதாரங்களுடன் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

"குறித்த பகுதியில் போருக்கு முன்னர் தமிழ்மக்கள் வாழ்ந்து வந்தனர். போரின் பின்னர் அவர்கள் வெளியேறியுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் தமிழ் - சிங்கள முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அந்த ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்குடனேயே குறித்த சிங்களக் குடியேற்றம் திட்ட மிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும் குறித்த பகுதியில் பிரதான வீதியோரமாக காட்டுப் பிரதேசம் அப்படியே இருக்க, உள்ளுக்குள் வீதிகள் அமைத்து பொதுக்கிணறுகள் வெட்டி குடியேற்றத்துக்குரிய நடவடிக்கைகள் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அங்கு இராணுவ முகாமும் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த இராணுவ முகாமிலிருந்தவர்களிடம்கேட்ட போது, அனுராதபுரத்திற்கு அப்பாலுள்ள 180 குடும்பங்களில் 120 குடும்பங்களை முதற்கட்டமாகவும் எஞ்சிய 420 குடும்பங்களை பின்னரும் குடியேற்றப் போவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த காணி வவுனியா செட்டிக் குளம் பிரதேசத்தில் உள்ளடங்குகின்ற போதும், செட்டிக்குளம் பிரதேச செயலரின் அனுமதி பெறப்படாது, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலரின் அனுமதியோடு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வவுனியா மாவட்ட எதிர்கட்சி உறுப்பினர் உறுப்பினர் ஜெயத் திலக,

குறித்த காணியில் தமிழ் மக்கள் தாங்கள் இருந்தமைக்கான உறுதியைக் காண்பித்தால் விடுவிப்பதாக அரச அதிபர் தெரிவித்திருக்கின்றார் என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சத்தியலிங்கம்,

ஓர் பொறுப்புள்ள அரச அதிகாரியின் செயலா இது. நாம் இது பற்றிக் கேள்வியெழுப்பியதும் இவ்வாறு தெரிவிக்கின்றார். இல்லாவிடின் என்ன நடந்திருக்கும்? என்று கேள்வியெழுப்பினார்.

அத்துடன் ஜி.ரி.லிங்கநாதன் இதுகுறித்துக் கூறுகையில், முதலமைச்சருக்கு கீழேதான் காணி அதிகாரங்கள் இருக்கின்றன. எனவே முதலமைச்சர் இந்த விடயத்தில் துணிந்து களமிறங்கி தடுத்து நிறுத்த வேண்டும் - என்று கோரிக்கை விடுத்தார். (ந-5)

# தருமபுரத்தில் விடுதலைப் புலிகள் என்பது வெறும் பூச்சாண்டி அவர்கள் சுட்டிருந்தால் குறி தவறியிருக்காது எனவும் விளக்கம்

## வடக்குமாகாணசபையின் சோபை இழந்த ஏழாவது அமர்வு

தொகுப்பு: தி.அமுதன்

விடுதலைப் புலிகள் சுட்டிருந்தால், கிளிநொச்சியில் பொலிஸ்காரர் தப்பியிருப்பாரா என்று எதிர்கட்சியினர் மனச்சாட்சியை தொட்டுச் சொல்லட்டும் என்று ஆளுங்கட்சி உறுப்பினர் ரவிகரன் சவால் விடுத்தார். வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட நாடகமே நடக்கிறது. வடக்கு மாகாணசபை அமர்வு கொஞ்சம் சூடாகியது. இருப்பினும் அமர்வு தொடர்ந்து களைகட்டவில்லை. அடிக்கடி காரசாரமான விவாதங்களை நடத்தும் சிவாஜிலிங்கம் அவைக்கு நேற்று வராததால் அவை சோபையிழந்தே வழமை போன்று தீர்மானங்களை நிறைவேற்றியது.

வடக்கு மாகாணசபையின் ஏழாவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுக் காலை 9.38 மணிக்கு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமானது.

நேற்றைய அமர்வைப் பார்வையிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா பங்கெடுத்திருந்தார். எதிர்கட்சித் தலைவர் கமலேந்திரன் அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

அமர்வின் ஆரம்பத்திலேயே உறுப்பினர்களின் உரைகளை ஒழுங்குபடுத்துவதற்காக, அவைத் தலைவர் சகல உறுப்பினர்களும் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் முதலில் அமைச்சர்களின் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் போது அமைச்சர் ஐங்கரநேசனால், காங்கேசன்துறையில் சிமெந்து உற்பத்தியை கைவிட வேண்டும் என்ற பிரேரணை முன்வைக்கப்பட்டது. அதனை ஆரம்பிப்பதால் ஏற்படும் சூழல் பாதிப்புக்களைச் சுட்டிக்காட்டி அதனை அவர் முன்மொழிந்தார்.

இதன் போது எழுந்த ஆளுங்கட்சி உறுப்பினர் சர்வேஸ்வரன், சூழல் மாசடைவதை நவீன முறையில் தடுக்கலாம் என்ற திருத்தத்தை உள்ளடக்கி வழிமொழிவதாகச் சொன்னார். ஆனால் முதலமைச்சரோ அமைச்சரின் பிரேரணை எந்த மாற்றமும் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

இதன் பின்னர் கடந்த மாத அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட அவையின் நடைமுறைக் கோவை அங்கீகாரத்துக்காக விடப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது.

இதன் பின்னர் நியதிச் சட்டத்தை அவையில் முதலமைச்சர் சமர்ப்பித்தார். நியதிச் சட்டம் அவசர தேவையாக இருப்பினும், அதனை ஆராய்ச்சி இல்லாமல் அவசரப்பட்டு முன்வைக்க முடியாது என்று காலம் தாழ்த்தி அவைக்கு வந்தற்கு விளக்கம் கொடுத்தார்.

இதன் பின்னர் எதிர்கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பேசுவதற்கான வாய்ப்புக் கேட்டு, அவைத் தலைவரிடம் விண்ணப்பித்திருந்ததற்கு அமைய அவருக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அங்கஜனின் உரை அவையில் தூங்கிக் கிடந்த உறுப்பினர்களை எழுப்பி விட்டது.

அங்கஜன் ஆங்கிலத்திலேயே பேசினார். தனது உரையை உலகம் கேட்க வேண்டும் என்பதற்காக ஆங்கிலத்தில் பேசுவதாகத் தொடங்கினார். உள்ளூரில் பேசித்தீர்க்க வேண்டிய விடயங்களை சர்வதேசத்துக் கொண்டு சென்றது தொடர்பில் கூட்டமைப்பைத் தாக்கிப் பேசியிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் முதலமைச்சரும் ஆங்கிலத்தில் உரையாற்றினார். வழமைக்கு மாறாக முதலமைச்சர் கொஞ்சம் சூடாகவே பதிலளித்தார்.

அதன் பின்னர் எழுந்த சிவமோகன், அனைத்துலகமும் சேர்ந்தே எமது சுதந்திர போராட்டத்தை அழித்தது என்ற உண்மையையும் உரைத்துக் கொண்டு, கிளிநொச்சி தருமபுரத்தில் இடம்பெற்ற சம்பவம் திட்டமிட்ட செயல் என்றும் சாடினார். இந்தச் சம்பவம் நாளை நமக்கும் நடக்கலாம் என்று குண்டைத் தூக்கியும் போட்டு விட்டுப் போனார்.

இலங்கை எங்களது நாடு. எங்களுக்கும் தேசிய உணர்வு இருக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களிலிருந்து மாறுபட்ட கருத்தை முன்வைத்தார். அத்துடன் எங்கள் உரிமைகளை எங்களுக்குத் தந்தால் சர்வதேசம் ஏன் வரப்போகின்றது என்ற உண்மையையும் உரைத்தார்.

வெலிஓயாவில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான உறுதிக் காணிகளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே சிங்கள மக்களுக்கு வழங்குகின்றார். ஜனாதிபதியே காணியைக் கொள்ளையடிக்கும் (மாப்ஃபியா) நிலையிருக்கையில் நாம் எங்கு செல்வது என்று சர்வேஸ்வரன் கேள்வியைத் தொடுத்தார்.

தொடர்ந்தும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அங்கஜனுக்கு பதிலடி கொடுத்தனர். இறுதியில் கஜதீபன், இந்த விளக்கத்துடன் அங்கஜன் மனம் மாறியிருப்பார். அவரது சம்மதத்துடன் உரையை பதிவேட்டிலிருந்து நீக்கி விடுவோம் என்று சொல்ல, அவையில் சிரிப்பொலி எழுந்தது.

இதன் பின்னர் வாய்ப்புக்காக அடிக்கடி எழுவதும் அமர்வதுமாக இருந்த எதிர்கட்சி உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், முதலமைச்சர் பேசியதையே எல்லாரும் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு நல்ல சூடு போட்டார். அத்துடன் எல்லாவற்றுக்கும் வரிசையாக ஆதாரங்களைக் கேட்டு, அதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்களிடம் வாங்கிக் கட்டியும் கொண்டார்.

இதன் பின்னர் எழுந்த ரவிகரன், உரை நிகழ்த்திய எதிர்கட்சி உறுப்பினர் அங்கஜனிடம் தான் ஒன்றை மட்டும் கேட்பதாகத் தெரிவித்தார். அவர் அதற்கு மன்சாட்சியின் படி உண்மையைச் சொல்ல வேண்டும் என்று பீடிகையுடன் தொடங்கினார். கிளிநொச்சியில் புலிகள்தானே சுட்டது என்று சொல்கிறீர்கள்? உண்மையிலேயே புலி சுட்டிருந்தால் அந்தப் பொலிஸ் உயிருடன் தப்பியிருப்பாரா? என்று ஒரு கேள்வியைப் போட்டார். அவையில் நிசப்தம் நிலவியது.

இதன் பின்னர் உரையாற்றிய அங்கஜன், தான் எல்லோரது கருத்துக்களையும் உள்வாங்கியிருப்பதாகவும், தனது தலைமைக்கு தெரியப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.. இதன் போது எழுந்த பசுபதிப்பிள்ளை ஏதோ சொல்ல முற்பட அவைத் தலைவர் அவரை இருக்குமாறு சொல்லவும், அவர் அதனையும் மீறி ஏதோ சொன்னார். இருப்பினும் அவைத் தலைவர் அவரது ஒலிவாங்கியை நிறுத்திவிட்டார்.

இந்தச் சூடான விவாதத்துடன், அமைச்சரவைக்கான ஆலோசனைக் குழுக்களின் பெயர்ப் பட்டியல் அவையில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தேநீர் இடைவேளைக்காக அமர்வு 15 நிமிடங்கள் வரை நிறுத்தப்பட்டது.

இதன் பின்னர் அமர்வு மீளவும் ஆரம்பமானதும் உறுப்பினர்களின் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் போது நந்திக்கடல் பகுதி ஆழமாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை ரவிகரனால் முன்மொழியப்பட்டது. இதனை மத்திய அரசு செய்ய வேண்டும் என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். இதன் போது கடற்றொழில் அமைச்சர் டெனீஸ்வரன், இது எங்களுக்குள் வருகின்றது. இது தொடர்பில் 20 ஆம் திகதி முல்லைத்தீவில் கூட்டம் ஒன்று நடத்தப்படும். அதில் கடற்றொழில் தலைவர்களைக் கலந்துகொள்ளச் சொல்லுங்கள்.

எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தெரியும் தானே என்று அமைச்சர் தொடங்க முன்னரே, அதுதான் உங்களிட்ட கேட்காம மத்திய அமைச்சிட்ட கேட்டிருக்கின்றன் என்றார் ரவிகரன். இதன் பின்னர் குணசீலனினால் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

போதனா வைத்தியசாலை இருக்கும் மாகாணத்தில் மாகாண பொது வைத்தியசாலை அமைக்க முடியாது என்ற சுகாதார அமைச்சின் சட்டம் இருக்கத்தக்கதாகவே, தான் ஒரு பிரேரணையை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார். யாழ்.போதனா வைத்தியசாலை இருக்கத்தக்கதாகவே, வவுனியா ஆதார வைத்தியசாலையை மாகாண பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்த வேண்டும் என்று கோரினார்.

ஏனைய இரு மாகாணங்களில் இவ்வாறு இருப்பதாக ஆதாரத்தை முன்வைத்த அவர், அதனால் நாமும் முயற்சிப்போம் என்று குறிப்பிட்டார். இதன் பின்னர் மிக முக்கிய விடயத்தைப் போட்டுடைத்தார்.

கட்சி உட் பூசல், அமைச்சர்கள் உறுப்பினர்களுக்கிடையிலான தொடர்பாடல் இன்மை மற்றும் நடைமுறைச் சிக்கல் பலவற்றை அவையில் நேரடியாவே தெரிவித்தார். மாவட்டத்தின் விழாக்களுக்கு யாரும் போகலாம். அதைப் பற்றி நாம் கேட்கவில்லை. ஆனால் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடும் போது மாவட்டத்தின் சகல மாகாணசபை உறுப்பினர்களையும் அழைக்க வேண்டும் என்றார்.

தற்போதே மக்கள் மத்தியிலிருந்து எங்களது குறைப்பாடுகள் வெளிப்படத் தொடங்கியுள்ளன என்பதையும் இதன் பாரதூரத்தையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதன் பின்னர் மீண்டும் ஒரு சர்ச்சை தொடங்கியது. உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியை எல்லோருக்கும் சமனாகப் பங்கிட வேண்டும் என்று. முதலமைச்சருக்கு 6 மில்லியனும், அமைச்சர்களுக்கு 4 மில்லியனும், உறுப்பினர்களுக்கு 2.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறில்லாமல் எல்லோருக்கும் ஒரே தொகை வழங்கப்பட வேண்டும் என்று அவையில் வாதிட்டார் சர்வேஸ்வரன். இருப்பினும் அதனை அவைத் தலைவர் சமாளித்து நகர்த்த முற்பட்ட போதும், சர்வேஸ்வரன் விடாப்பிடியாக இருந்ததால், முதலமைச்சர் முடிவெடுத்து அறிவிப்பார் என்று விடயப் பரப்பை முடிவுக்கு கொண்டு வந்தார்.

இதன் பின்னர் வவுனியாவில் இராணுவக் குடும்பங்களுக்கு காணி கொடுப்பது தொடர்பான விவாதம் அவையில் சூடாகவே நகர்ந்து கொண்டிருந்தது.

இதன் பின்னர் லிங்கநாதன் குறித்த விடயத்துடன் தொடர்புடைய விடயங்களை பற்றிப் பேச எழுந்தார். அவர் அவையில் ஆச்சரியமளிக்கும் ஒரு விடயத்தைச் சொன்னார். தான் இனிமேல் பிரேரணை கொண்டு வர மாட்டார் எனவும் கொண்டு வந்த ஆறு பிரேரணைக்கும் நடவடிக்கையில்லை என்றும் குறிப்பிட்டார். அத்துடன் பிரேரணைகள் புத்தகத்தில நல்லா தான் இருக்கு என்று நக்கலாக உண்மையைச் சொல்லிவிட்டு விடயப் பரப்பினுள் நகர்ந்தார். அத்துடன் காணி அதிகாரம் எங்களிடம் இருக்கின்றது. துணிந்து இறங்குங்கள் என்று முதலமைச்சருக்கு தூண்டுதல் கொடுத்தார். இராணுவத்திற்கான குடியேற்றம் அங்கு குழப்பங்களை ஏற்படுத்தக் கூடாதென்பதற்காக அவர் அக்கறையுடன் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அஸ்மின், முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேரும் வாய்ப்பை தவறவிட்டு சந்தர்ப்பவாத அரசியல் செய்வதாகச் சாடினார். அத்துடன் கூட்டமைப்புடன் சேருவதற்கான சந்தர்ப்பம்கனிந்து வருவதாக அவர்கள் தெரிவித்திருப்பதானது தேர்தலுக்கான கோஷமாக மட்டும் இருக்கக் கூடாது என்று அவர் சாட்டையடி கொடுத்தார்.

அஸ்மின் வடக்கின் சமூகச் சீர்கேடுகள் தொடர்பில் தனது தெளிவான பிரேரணையை முன்வைத்தார். இதன் போது பெரும்பாலான குற்றச்சாட்டுக்களை இராணுவம் மீதே சுமத்தினார். அத்துடன் போருக்குப் பின்னரான சூழலில், வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஈராக் கைவிட வடக்கிலேயே சமூக சீர்கேடுகள் அதிகளவில் அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டார்.

இதன் போது குறுக்கிட்ட எதிர்கட்சி உறுப்பினர் ரிப்கான், இராணுவம் மீது குற்றம் சாட்டுவதை விட எங்கள் பிள்ளைகளையும் ஒழுங்காக வளர்க்க வேண்டும் என்று தார்ப்பரியத்தை உணர்த்தினார். மற்றைய எதிர்கட்சி உறுப்பினரான தவநாதன், ஏனைய நாடுகளில் போரின் பின்னரான நிலையை விட வடக்கின் நிலைமை மோசம் இல்லை என்றும், அது எந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதையும் கேட்டார்.

இதற்கு கொஞ்சம் சூடாகவே பதிலளித்த அஸ்மின், அண்மையில் அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில், தவநாதன் சார்ந்திருக்கும் கட்சி (ஈ.பி.டி.பி) வடக்கில் கப்பம், கொலை, கொள்ளையில் ஈடுபட்டது என்பதைச் சுட்டிக்காட்டி விட்டு அமைதியாக அமர்ந்தார். இதற்கு தவநாதன் நான் என்னவோ கேட்க அவர் என்னவோ சொல்கின்றார். நான் இங்கு கட்சி பற்றிப் பேசவில்லை என்று சொன்னதும், அஸ்மின் தான் தவறான நோக்கோடு சொல்ல வில்லை என்று தெரிவித்து மன்னிப்புக் கோரி தனது பெருந்தன்மையை வெளிப்படுத்தினார்.

இறுதியாக பசுபதிப்பிள்ளையின் பிரேரணைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. நேரமும் சென்று அவையினர் பசியிலிருந்ததால் என்னவோ, நான்கு பிரேரணைகளையும் வாசித்து முடித்த பின்னர் தான் வழிமொழிந்தனர்.

இதில் கிளிநொச்சி தொழில் நுட்ப கல்வி நிறுவகத்தை மாகாணசபை பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்தார். இதன் போது இது தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் கணினிப் பயிற்சி, ஆங்கிலப் பயிற்சி என்று ஆயிரக் கணக்கானவர்களுக்கு வழங்கியதாகக் குறிப்பிட்டார். அத்துடன் அமைச்சர் குருகுலராஜா, உறுப்பினர் அரியரட்ணம் ஆகியோர் அதன் தலைவர்களாக இருந்தனர் என்று கோர்த்தும் விட்டார்.

ஆனால் தற்போது அங்கு எதுவும் நடைபெறுவதில்லை என்றும், மாகாணசபை பொறுப்பெடுத்து, புலிகள் இருந்த காலத்தில் கொடுத்த பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அவையிலிருந்தவர்கள் ஐயா, எந்தப் பயிற்சியை என்று சொல்லுங்கோ என்று நக்கலாகக் கேள்வியெழுப்பினர்.

இதன் பின்னர் கொக்கிளாய் கடல்நீரேரியில் கரைவலைப்பாடு தொடர்பில் ரவிகரனால் அவசர பிரேரணை முன்வைக்கப்பட்டது. அவைத் தலைவருடன் இழுபறிப்பட்டே அந்தப் பிரேரணை அவர் சமர்ப்பித்தார். இதன் பின்னர் அடுத்த அமர்வுக்கான கூட்டத் திகதியை அறிவிப்பதில் இழுபறிப்பட்டாலும் கடைசியில் ஏப்ரல் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து அவை அமர்வு முடிவுக்கு வந்தது.

# போயா தினத்தன்று சாராய விற்பனை; பெண்ணுக்கு அபராதம்

போயா தினத்தன்று சாராயம் விற்பனை செய்த கைதடியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு சாவகச்சேரி நீதி மன்றில் நேற்று 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

போயா தினத்தன்று சிவில் உடையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தருக்குச் சாராயம் விற்பனைசெய்தமைதொடர்பில்பொலிஸார் பெண்ணுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல்செய்தனர். வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை அனுமதிப் பத்திரமின்றி பனை மரம் தறித்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இருவருக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

# செவ்விளநீருக்கு பெரும் தட்டுப்பாடு

கொழும்புத்துறை, மார்ச் 19

யாழ்.குடாநாட்டில் செவ்விளநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. பெரும் குவியலாக வைத்து விற்பனை செய்யப் பட்டுவந்த இடங்களில்தற்போது சிறு தொகையி லேயே செவ்விளநீர் காணப் படுகிறது.

அதே சமயம் அதன் விலையும் 60 ரூபா முதல் 70 ரூபா வரை அதிகரித்துள்ளது. தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலையால் செவ்விளநீரைப் பருகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதும் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணமாகும்.

இதேவேளை உள்ளூரில் உள்ள செவ்விளநீர் மரங்களில் இளநீர் குறைந்துள்ளமையும், தென்னிலங்கையில் இருந்து இங்கு செவ்விளநீர் எடுத்து வரப்படுவது குறைவடைந்தமையும் தட்டுப்பாட்டுக்கு காரணமென விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் நாடு முழுவதும் வெப்பமான காலநிலை நிலவுவதால் பொல்காவல, தம்புள்ள, குருநாகல் போன்ற இடங்களில் சேகரிக்கப்படும் செவ்விளநீர் நாட்டின் பல இடங்களுக்கும் அனுப்பப்படுவதால் இந்த பற்றாக்குறை நிலவுவதாகக் கூறப்படுகிறது. (ஓ-135)

# தொடரும் கைதுகள் குறித்து சபையில் கேள்விக் கணை

## ஆவேசமாக தொடுத்தார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, மார்ச் 19

வடக்கில் கடந்த சில நாள்களாக முன்னெடுக்கப்படும் இராணுவச் சுற்றிவளைப்புகளாலும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் கைது வேட்டையாலும் மக்கள் பெரும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர். ஒரு தேசிய இனம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், பாதுகாப்பு வேண்டி அவ்வினம் ஐ.நா. செல்வதில் என்ன தவறு இருக்கின்றது என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நாடாளுமன்றில் நேற்று நடை பெற்ற மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவரது எரிபொருள் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் அரசுக்கு ஆதாவு திரட்டுவதற்காக மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் 10 பேர் அங்கு சென்றுள்ளனர். சுயாதீனமாகச் செயற்படக்கூடிய ஓர் அமைப்பு இவ்வாறு சார்பாகச் செயற்பட்டால் எப்படி அதன் மீது நம்பிக்கை வரும்?

சக்தி மிக்கதொரு சுயாதீனக் குழுவாக மனித உரிமைகள் ஆணைக் குழு மாற்றப்படல் அவசியம். வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றபோது பிரசாரத்துக்கு வந்துவிட்டு வவுனியாவிலிருந்து திரும்பிய நிரூபன் என்பவர் காணாமல் போனார். கடந்த 12ஆம் திகதி அவரின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது. அடையாள அட்டை, சைக்கிள் சாவி ஆகியவற்றை கொண்டு அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். கடந்த 13ஆம் திகதி ஜெயகுமாரி என்ற தாயும், அவரது மகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அது சாதாரண கைது அல்ல. ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவம் வீட்டைச் சுற்றி வளைக்க, பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் அவர்களை கைது செய்து பல மணித்தியாலங்கள் விசாரணை நடத்தியுள்ளனர். கணவனையும், மகனையும் இழந்த நிலையில் வாடும் தாய் பூஸா முகாமுக்கும், படிக்கவேண்டிய சிறுமி விபூசிகா சிறுவர் இல்லத்துக்கும் மாற்றப்பட்டுவளனர். இவர்களது கைதுகளுக்கு பொலிஸார் கூறும் காரணம் முட்டாள்தனமாக இருக்கின்றது. இவர்களது கைது தொடர்பில் உண்மைகளை அறிவதற்காகச் சென்ற மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவரையும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். குடும்பம் குடும்பமாக கைதுசெய்யப்படுகின்றனர். எவரேனும் ஒருவர் ஏதேனுமொரு குற்றச்சாட்டில் ஈடுபட்டிருந்தால் ஏன் குடும்பம் குடும்பமாகக் கைது செய்ய வேண்டும்? - என்று தெரிவித்துள்ளார். (ற-சி)




ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

சுழிபுரம் ஸ்ரீ வீரபத்திர சுவாமி உடனுறை ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய

**வருடாந்த பொங்கல் விழா**

★ 18.03.2014 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் விளக்கு வைத்தல் நிகழ்வுடன் வருடாந்த பொங்கல் விழா கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது.

★ தொடர்ந்து எதிர்வரும் 25.03.2014 செவ்வாய்க் கிழமை முதலாம் பொங்கலும், அடுத்து வரும் 01.04.2014 செவ்வாய்க் கிழமை இரண்டாம் பொங்கல் விழாவும் நடைபெற விருக்கின்றது என்பதனை அம்பாளின் அடியார்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.


**குறிப்பு:**

வியாபாரம் செய்யும் அன்பர்கள் தங்களுடைய வியாபா ரம் செய்யும் இடங்களை எதிர்வரும் 23.03.2014 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு ஆலயத்துக்கு வந்து பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தேவஸ்தான பரிபாலன சபையினர்,
சுழிபுரம் ஸ்ரீ வீரபத்திர சுவாமி உடனுறை
ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலயம்.

(30377) (10.6)


**வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 20.02.2014 இறைபத மடைந்த

அமரர்

**செல்லையா இராசரத்தினம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.03.2014) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 22.03.2014 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்.

(30383) (10)


**வேலையாள் தேவை**

**பரணி கிறீம் ஹவுஸ்**
கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.

றோல்ஸ், வடை, பற்றிக்ஸ், பூந்திலட்டு, கட்லட், கேசரி, மஸ்கற், ருசியம், செய்யக் கூடியவர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

Tel: 077 918 6284


**உடன் தகவல் தரவும்**



நவாலி வடக்கு, ஊற்றுக்குழியில் வசிக் கும் 4 பிள்ளைகளின் தந்தையான எனது கணவர் **வேலாயுதம் ரவிக்குமார்** கடந்த 14.10.2013 இல் இருந்து வேலைக்கு சென் றவர் மீள திரும்பவில்லை. இவரைப் பற்றி அறிந்தவர்கள் எனது 077 956 4403 எனும் தொலைபேசிக்கு உடன் அறியத் தரவும்.

தகவல்:
ஊற்றுக்குழி, நவாலி வடக்கு.
ரவிக்குமார் கலைமகள் (மனைவி)

(30375) (10.6)

**மரண அறிவித்தல்**

**வைத்திலிங்கம் சுந்தரலிங்கம்**
(Royal Ceylon Airforce - Retired officer, Uthayan-Manager, Gjanam Studio - Manager)



யாழ்ப்பாணம் அரியாலை 42 விபுலானந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் (18.03.2014) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- சிவயோகம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், சிவதர்சினி, சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கேசரன், லெஸ்லி ஆகியோரின் அன்பு மாமனும், கஸ்மினி (கீர்த்தனா), விக்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2014) புதன்கிழமை பிற்பகல் மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.42, விபுலானந்தர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்.

(30380) (10)

**கண்ணீர் அஞ்சலி**

எமது சங்கத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் திரு. வை. கார்த்திகேசு அவர்களின் அன்பு மகன் கா. நிரூபன் (விஞ்ஞான ஆசிரியர் வ/ நேரியகுளம் மகா வித்தியாலயம்) அகால மரணமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
வலி. கிழக்கு பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய்.

**வட இலங்கை சுதேச வைத்தியசாலை இயக்குநர் சபைக் கூட்டம்**

காலம்:21/03/2014 வெள்ளிக்கிழமை 2.00 மணி
இடம் :188 B மானிப்பாய் வீதி, யாழ்ப் பாணம்
இயக்குநர் சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

செயலாளர்
வட இலங்கை சுதேச வைத்திய சாலை


**தேவை**

தவிடு தொகையாகத் - தேவை
(Rice mill)வைத்திருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். 0771807672

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

4 மாதம் நிரம்பிய DASCHOUND நாய்க்குட்டி
PARYO,DHL ஊசி போடப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. சபாபதி வீதி, கொக்குவில்.
T.P 0775456126


**காணவில்லை**



அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த **கைலாசபிள்ளைகுமரன் (சித்த சுவாதீனமற்றவர்)** என்பவரை 16.03.2014 இல் இருந்து காணவில்லை. இவர்பற்றிய தகவல் தெரிந்தவர்கள்தொடர்பு கொள்ளவும்.

T.P: 071 866 7624, 077 360 9005.

(45853) (10)

**மரண அறிவித்தல்**

**மயில்வாகனம் சரஸ்வதி**

கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சரஸ்வதி 17-03-2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், சித்திரா (ஆசிரியை கிளி/ இந்துக் கல்லூரி), கணேசமூர்த்தி (நோர்வே), சுபத்திரா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான பொன்னில்லம் பொன்னையா, பத்தினி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-03-2014 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிழவிதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
தகவல்
மயில்வாகனம் (கணவர்)

**மரண அறிவித்தல்**

**திருமதி சிவாம்பிகை சொக்கலிங்கம்**



காரைநகர், சின்னாலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவாம்பிகை சொக்கலிங்கம் நேற்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (C.T.O)- இராசம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சம் பந்தர் கண்டியைச் சேர்ந்த கார்த்திகேசு தெய் வானை தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற சொக்கலிங்கத்தின் அன்பு மனைவியும், சுதாகரன், தனஞ்சயன், சிற்சபேசன், சிவேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், சிவதர்சனி, யாழ்மொழி, தர்ஷிகா, தர்மினி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ் சென்ற வர்களான வாமதேவன், சிவதாசன் மற்றும் சிவபாலன், சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2013) வியாழக் கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 9.00 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னாலடி, காரைநகர்.
தகவல்: குடும்பத்தினர்.

(சி/12760) (10)

**மரண அறிவித்தல்**



**கந்தையா சிவராசா**

நல்லூர் நாயன்மார்கட்டைப் பிறப்பிட மாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா 13.03.2014 வியாழக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பூரணம் தம்பதியரின் இளைய மகனும், சந்திரலீலா, மனோகரன், காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் மங்கையர்க்கரசி, குணாகரன், தேவராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலிங்கம், கனகம்மா, இராஜேஸ்வரி, லோகநாதன், காலஞ்சென்ற பத்மராணி மற்றும் பாலமுரளி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. மகாலிங்கம் (மைத்துனர்)
T.P: 077 386 6992 (இலங்கை)
0044 7926 000045 (லண்டன்)

(30382) (10)

# வெங்காய விதை கொள்வனவு; ஏமாற்றமடைந்த விவசாயிகள்


**இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் இந்த வெங்காய விதைகள் எதிர்மாறாக யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்ததை அடுத்து பம்பாய் வெங்காயச் செய்கையில் புதிய அனுபவத்தைப் பெற வேண்டி ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.**

அச்சுவேலி, மார்ச் 19
வெங்காய விதை கொள்வனவில் ஏற்பட்ட தவறு விவசாயிகள் பலரை பாரம்பரிய செய்கையில் ஈடுபட வைத்துள்ளது.
உண்மை வேதாள வெங்காய விதை என்று கொள்வனவு செய்து மேடை அமைத்து காத்திருந்த விவசாயிகளுக்கு வெங்காயம் முளைத்து வரும் போது தான் அது உண்மை வேதாள விதை அல்ல; பம்பாய் வெங்காய விதை என்று தெரிய வந்தது.
உண்மை வேதாள வெங்காய விதை ஒரு கிலோ ஏழாயிரம் ரூபாவுக்கும், பம்பாய் வெங்காய விதை மூவாயிரத்து 500 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.
இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் இந்த வெங்காய விதைகள் எதிர்மாறாக யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்ததை அடுத்து பம்பாய் வெங்காயச் செய்கையில் புதிய அனுபவத்தைப் பெற வேண்டி ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.
விதை மாறுதலாக விநியோகிக்கப்பட்டதால் வடமராட்சி, தென்மராட்சி , வலிகாமம் கிழக்கு பகுதியில் விவசாயிகள் சிலர் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.
குறித்த வெங்காய விதை இனத்தை தவறுதலாக மாறி விநியோகித்ததற்கு பொறுப்பான வர்த்தகர் வெங்காய விதைக்கு மேலதிகமாக பெற்றுக் கொண்ட பணத்தைத் திருப்பி வழங்கியதுடன் எதிர் பாராமல் நேர்ந்த தவறுக்கு பரிகாரமாக வேதாள வெங் காய உண்மை விதையை மானிய விலையில் வழங்கு வதற்கு ஏற்பாடுகளை மேற் கொண்டு சம்பந்தப்பட்ட விவ சாயிகளோடு சமாதானம் செய்து கொண்டதாக கூறப்படுகின்றது. (வ-11)

## ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, மார்ச் 19
ஆசிரிய கலாசாலைகளில் இரண்டு வருட கால ஆசிரியர் பயிற்சிக்கு ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
2013.12.31 ஆம் திகதி ஆகக் குறைந்தது மூன்று மாத காலம் ஆசிரியர் சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை பணிப்பாளர், ஆசிரிய கல்வி நிர்வாகப் பிரிவு, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
மேலதிக விவரங்களை 2014. 3.14 ஆம் திகதிய வர்த்த மானியில் பார்வையிடலாம். (வ-11)

## படி வாகனம் மோதி வயோதிபர் காயம்



கோப்புப்படம்

தென்மராட்சி, மார்ச் 19
ஏ-9 வீதியில் சைக்கிளில் பயணித்த வயோதிபரை வேகமாக வந்த படி வாகனம் மோதிக் காயப்படுத்தியது.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மிருசுவில் மருத்துவ மனைக்கு அருகில் இடம்பெற்றது.
மிருசுவில் வடக்கைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (வயது- 72) என்பவர் காயமடைந்த நிலையில் கொடிகாமம் பிரதேச மருத்துவ மனை அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் குறிப்பிட்ட கால இடை வெளிக்குள் மிருசுவில் மருத்துவமனைக்கு அருகில் ஒரே இடத்தில் இடம் பெற்ற நான்காவது வீதி விபத்துச் சம்பவம் என்பது குறிப்பிடத் தக்கது.
இதேவேளை நேற்று முன்தினம் இரவு வீதி விபத்தில் சிக்கிக் காயமடைந்த நிலையில் அல்லாரை வடக்கைச் சேர்ந்த முருகேசு யோகராசா (வயது- 56) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## புலோலி தெற்கில் திருடர் தொல்லை

**இரவு வேளைகளில் துணிகரமாக திருட்டு நடவடிக்கைகளில் திருடர்கள் ஈடுபடுகின்றனர்**

நெல்லியடி, மார்ச் 19
புலோலி தெற்குப் பகுதியில் அமைந்துள்ள உபயகதிர்காமம் மற்றும் புற்றளைக் கிராமப் பகுதிகளில் அண்மைக் காலமாக தொடர்ச்சியாகத் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.
கடந்த வியாழக்கிழமை புற்றளைப் பகுதி பெருந்தெருவிலுள்ள வீடொன்றிலும், உபய கதிர்காம ஆலயத்திலும் நீர் இறைக்கும் மோட்டர்கள் களவாடப்பட்டுள்ளன. அத்துடன் அண்மைக் காலமாக இப்பகுதிகளில் 20 இற்கும் மேற்பட்ட ஆடுகள் களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் பலமுறைப்பாடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதனால் எந்தவித பயனும் கிட்டவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
இரவு வேளைகளில் துணிகரமாக திருட்டு நடவடிக்கைகளில் திரு டர்கள் ஈடுபடுவது தெரிந்துள்ள போதும் திருடர்களின் தாக்குதல் பயத்தால் வீட்டின் உரிமையாளர்கள் அச்ச நிலையில் வீட் டுக்கு வெளியில் வருவதைத் தவிர்ப்பதாகக் கூறுகின்றனர்.
எனவே அந்தப் பகுதியில் நடைபெறும் திருட்டுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் அந் தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)




பிடிக்கப்பட்ட முதலை

## அச்சுவேலி தெற்கில் பிடிபட்டது 5 அடி முதலை

அச்சுவேலி, மார்ச் 19
அச்சுவேலி தெற்கில் இளைஞர்களால் பிடிக்கப்பட்ட 5 அடி நீளமான முதலை ஒன்றை அச்சுவேலி பொலிஸார் பொறுப்பேற்று அதனை வன விலங்கு திணைக்களத்திடம் கையளித்தனர்.
தொண்டமானாறு குடாக்கடல் நீரேரியில் அச்சுவேலி தெற்கு முழக்கன் பகுதியில் வைத்து 5 அடி நீளமான முதலை பிடிக்கப்பட்டது. பிடிக்கப்பட்ட முதலையை பெருமளவான பொது மக்கள் பார்வையிட் டனர்.
அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து பொலிஸார் அங்கு விரைந்து வந்து முதலையைப் பொறுப்பேற்று எடுத்துச்சென்றனர். பின்னர் முதலை வன விலங்கு காப்பக அதிகாரிகளிடம் கைய ளிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. குடாக்கடல் நீரேரியில் மேலும் முதலைகள் இருக்கலாம். கடும் வறட்சி நிலையால் நீர்வற்றி வருவதால் உணவு தேடி முதலைகள் நீரேரியை விட்டு வெளியில் வரக் கூடும் என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

## நெடுந்தீவில் முதன்முறையாக பறவைக் காவடி



நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழாவில் விநாயகர் தேரில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் நெடுந்தீவில் முதன் முறையாக பக்தர் ஒருவர் பறவைக் காவடி எடுத்து வந்த காட்சியையும் காணலாம். (ஒ-7)

## புங்குடுதீவில் கும்பாபிஷேகம்

புங்குடுதீவு, இரண்டாம் வட்டாரம் காட்டுப் புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதிவைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.
இன்று காலை 9.42 மணி தொடக்கம் முற்பகல் 11.34 வரையான சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேக நிகழ்வு இடம்பெறும்.
அருளாசிகளை பிரம்ம ஸ்ரீ த.சந்திரசேகரசர்மா, சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள், சிவஸ்ரீ நாகேந்திரம் அருணோதயக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.
தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மாட்டுத் திருடன் விளக்கமறியலில்

தென்மராட்சி, மார்ச் 19
வரணி குடமியன் பகுதியில் மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்த 32 ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டைத் திருடிச் சென்றதாகச் சந்தேகிக்கப்பட்ட நபர் தலைமறைவாக இருந்து வந்துள்ளார்.
சந்தேக நபரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-9)

## யுவதியை கடத்தியவருக்கு மறியல்

தென்மராட்சி, மார்ச் 19
வீட்டில் தனித்திருந்த 17 வயது யுவதியைக் கடத்திச் சென்று வேறொரு இடத்தில் தடுத்து வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றத்தால் நேற்று முன் தினம் திங்கட்கிழமை உத் தரவிடப்பட்டது.
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட யுவதியின் பெற்றோர் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் யுவதியை மீட்டதுடன் நபரையும் கைது செய்தனர்.
வரணி நாவற்கட்டைச் சேர்ந்த குறித்த நபருக்கு எதிராக பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-9)

# இசைத்துறையில் ஆர்வமுடைய மாணவருக்கு உரிய பயிற்சிகள் வழங்குவதற்கு உதவுக

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்துக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்**

தென்மராட்சி,மார்ச் 19
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தால் கல்வி வளர்ச்சிக்கென வருடாந்தம் நிதி உதவி வழங்கப்பட்டு வரும் நிலையில் இசைத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கவும் மன்றம் உதவ முன்வர வேண்டும். அதன் மூலம் கலை உலகுக்கு திறமைமிக்க மாணவர்களைக் கொண்டுவருதல் வேண்டும். இவ்வாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 35 ஆவது ஆண்டுநிறைவுவிழாவுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்ம ராட்சி வலயக் கல்விப் பணிப்பா ளர் சு.கிருஷ்ணகுமார் வர்த்தக சமூகத்தினரைக் கேட்டுக் கொண்டார். அங்கு அவர் மேலும் கூறுகையில்;
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளால் நடத்தப்படும் இசை நிகழ்வுகளுக்கான இசைக் கருவிகளை பயிற்றுவிப் பதற்காக வெளியிலிருந்து பணம் கொடுத்து கலைஞர் களை பயன்படுத்த வேண்டியுள்ளது.
இவ்வாறான இசைக் கருவி கள் ‘வேள்ட் விஷன்’ நிறுவனத்தினரால் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றை மாணவர்களுக்கு இலவசமாகவோ அல்லது சிறுதொகைக் கொடுப்பனவுடனேயோ கற்றுக் கொடுத்துப் பயிற்றுவிக்க துறைசார் கலைஞர்களின் உதவியைப் பெற்றுத்தர முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.
இதற்குப் பதிலளித்த வணிகர் மன்றத்தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் “மாணவ சமூகத்தை இசை உலகில் மிளிரச் செய்வதற்கான வலயக் கல்விப் பணிப்பாளரின் கோரிக்கை எம் மால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தாக இருந்த போதிலும், வர்த் தகர்களின் இன்றைய நிலை யைக் கருத்தில் கொண்டு தற் போது இதற்கான ஒப்புதலை வழங்க இயலாதுள்ளது. இந்த விடயம் குறித்து மன்றம் பரி சீலனை செய்யும் என்றும் கூறினார். (வ-9)

## இந்தியாவில் 6.5 கோடி அடிமைகள்

புதுடில்லி,மார்ச் 19

120 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில் 6.5 கோடி மக்கள் தற்போதும் அடிமைகளாக வேலை செய்து வருவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலகத்தில் வாழும் மக்களின் நிலை மற்றும் வேலைக்காக நடைபெற்றுவரும் ஆள் கடத்தல் போன்றவற்றைக் கண் காணிக்கும் அமெரிக்காவின் 'டிப்ஸ்' சஞ்சிகை வெளியிட்டுள்ள 2013 ஆம் ஆண்டறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்தியாவில் சுமார் ஆறரைக் கோடி மக்கள் வறுமை, குடும்பக்கடன் போன்ற காரணங்களினால் நவீன காலத்து அடிமைகளாக வேலை செய்து வருகின்றனர். மற்றும் சிலர் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

தரகர்களின் மூலமாக உள்நாட்டில் ஆள்கடத்தல் ரகசியமாக நடைபெற்று வருவதாகவும் அவ்வாறு கடத்தப்படும் ஆண் - பெண் இருபாலாரும் பல்வேறு பணிகளில் நவீன காலத்து அடிமைகளாகப் பணி செய்து வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)


## உலகின் சிறந்த இசையமைப்பாளர்கள் பட்டியலில் இளையராஜா 9 ஆம் இடம்

லண்டன்,மார்ச் 19

உலகின் சிறந்த 25 இசையமைப்பாளர்கள் பட்டியலில் 9ஆவது இடத்தை இளையராஜா பிடித்துள்ளார்.

உலகளவில் பிரசித்தி பெற்ற சினிமா இணையத்தளமான 'ரேஸ்ற் ஒவ் சினிமா' உலகின் தலைசிறந்த 25 இசையமைப்பாளர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இந்தியாவில் இருந்து இளையராஜாவின் பெயர் மட்டுமே இடம்பெற்றுள்ளது. 25 பேர்களில் இளையராஜா 9ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறார்.



இதில் இத்தாலியைச் சேர்ந்த மொர்ரிகோன் முதல் இடத்தையும், ஆஸ்திரேலியாவில் பிறந்த அமெரிக்க இசையமைப்பாளர் மேக்ஸ் ஸ்டைனர் 2ஆவது இடத்தையும், அமெரிக்க இசையமைப்பாளர் ஜான் வில்லியம்ஸ் 3ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, ஆங்கில மொழிகளில் 45,000க்கும் அதிக பாடல்கள் கொடுத்து, 950க்கும் மேற்பட்ட படங்களில் இசைப்பணியாற்றியுள்ள இசைஞானி இளையராஜா இந்தப் பட்டியலில் 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

சிறந்த இசைக்கோர்ப்பு, இசை ஒருங்கிணைப்பு, பாடகர், பாடல் ஆசிரியர் ஆகிய பிரிவில் இளையராஜா சிறப்பான பணியை வழங்கியிருப்பதாக ரேஸ்ற் ஒவ் சினிமா இணையத்தளம் பாராட்டியுள்ளது. (து)

## பெருந்துறை சிப்காட் வளாகத்தில் விஷவாயு தாக்கி ஏழு பேர் சாவு

சென்னை,மார்ச் 19

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் வளாகத்தில் உள்ள ஆலை ஒன்றில், விஷவாயு தாக்கி 7 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக ஈரோடு மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் கூறும்போது, பெருந்துறை சிப்காட்டில் உள்ள கே.பி.ஆர். என்ற சாய ஆலையில் இந்த விபத்து ஏற்பட்டது.

அந்த ஆலையில் மோட்டார் குழாயைச் சரி செய்வதற்காகத் தொழிலாளி ஒருவர் முதலில் இறங்கியிருக்கிறார். அவர் மயங்கி விழுந்ததும் அவரை மீட்க மற்றவர்கள் முயற்சி செய்தனர். அப்போது, அவரைக் காப்பாற்ற முயற்சி செய்தவர்களையும் விஷ வாயு தாக்கியதால் அவர்கள் இறந்தனர் என்று கூறியுள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் பிரேதப் பரிசோதனைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிப்காட் வளாகத்தில் 7 பேரைப் பலிகொண்ட இந்த விஷ வாயு விபத்து தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். (து)

## கோவையில் பிரசாரத்தை ஆரம்பிக்கிறார் கருணாநிதி

சென்னை,மார்ச் 19

மக்களவைத் தேர்தலை ஒட்டி தி.மு.க தலைவர் கருணாநிதி மேற்கொள்ளவிருக்கும் பிரசாரப் பயணத்துக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அதில், ஏப்ரல் 5ஆம் திகதி தொடங்கி மே 21ஆம் திகதி வரை கருணாநிதி பிரசாரம் மேற்கொள்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது. கோவையில் பிரசாரத்தைத் தொடங்குகிறார் கருணாநிதி.

இது தொடர்பாக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்: ஏப்ரல் 5ஆம் திகதி கோயம்பத்தூர், 6ஆம் திகதி திருப்பூர் மற்றும் ஈரோடு, 7ஆம் திகதி சேலம், 10ஆம் திகதி புதுச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் ஆகிய தொகுதிகளிலும், 11ஆம் திகதி மயிலாடுதுறை மற்றும் திருவாரூரிலும், 12ஆம் திகதி தஞ்சாவூரிலும், திருச்சியிலும், 13ஆம் திகதி துவரங்குறிச்சி மற்றும் மதுரையிலும், 16ஆம் திகதி வேலூர், ஸ்ரீபெரும்புதூர் தொகுதிகளிலும், 17ஆம் திகதி காஞ்சிபுரம் மாவட்டம், 19ஆம் திகதி திருவள்ளூர் மற்றும் வடசென்னை, 20ஆம் திகதி தென் சென்னை என பிரசாரம் செய்கிறார். கடைசியாக ஏப்ரல் 21இல் மத்தியச் சென்னையில் கருணாநிதி பிரசாரத்தை முடிக்கிறார். இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## கன்னியாகுமரியில் உதயகுமார் போட்டி

சென்னை,மார்ச் 19

ஆம் ஆத்மி கட்சியின் 7ஆவது வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. 10 மாநிலங்கள் ஒரு யூனியன் பிரதேசத்துக்கான 26 வேட்பாளர்கள் இந்தப் பட்டியலில் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

கூடங்குளம் அணு உலை எதிர்ப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமாருக்குக் கன்னியாகுமரித் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உதயகுமார் தவிர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் போட்டியிடும் பிற வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் விவரம் வருமாறு;

தூத்துக்குடி- எஸ்.புஷ்பராயன், திருநெல்வேலி- ஜேசுராஜ், கோவை- பொன்சந்திரன், ஈரோடு- குமாரசாமி, சேலம்- சதீஷ் குமார், மத்திய சென்னை- ஜெ.பிரபாகர், திருப்பூர்- ஆர்.சக்கரவர்த்தி ராஜகோபால கிருஷ்ணன், புதுச்சேரி- வி.ரங்கராஜன்

அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்க போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் சுப. உதயகுமார் ஆம் ஆத்மி கட்சியில் பெப்ரவரி இறுதியில் இணைந்தார். அப்போது அவர், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்துக் கட்சித் தலைமை முடிவு செய்யும் என்று தெரிவித்திருந்தார். (து)



# மாயமான மலேசிய விமானம் தலிபானின் கட்டுப்பாட்டிலா?

## இங்கிலாந்துப் பத்திரிகை பரபரப்புத் தகவல்




லண்டன்,மார்ச் 19

மாயமான மலேசிய விமானம் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளவடகிழக்கு பாகிஸ்தானில் நுழைந்திருக்கக்கூடும் என்று இங்கிலாந்து நாளிதழ் ஒன்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.

இறுதியாக மார்ச் 8ஆம் திகதி காலை 8.11 மணியளவில் இங்கிலாந்து நிறுவனத்தின் இன்மார்சாட் செயற்கைக்கோளில் அந்த விமானத்தின் சமிக்ஞை பதிவாகியுள்ளது. அதன்படி தாய்லாந்து முதல் கசகஸ்தான் எல்லை வரையோ அல்லது இந்தோனேஷியா முதல் தென் இந்தியப்பெருங்கடல் வரையோ விமானம் பறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இந்நிலையில் செயற்கைக் கோள் தகவலை ஆதாரமாக வைத்து லண்டனில் இருந்து வெளியாகும் 'தி இன்டிபெண்டன்ட்' நாளிதழ் பரபரப்புத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

இன்மார்சாட் செயற்கைக் கோளில் விமானத்தின் சிக்னல் பதிவானபோது அந்த விமானம் வானில் பறந்திருக்க வாய்ப்பில்லை. தரையில்தான் இருந்திருக்க வேண்டும் என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதன்படி ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய வடகிழக்கு பாகிஸ்தானில் விமானம் தரையிறங்கி இருக்கக் கூடும். ஆப்கானிஸ்தானில் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளும் வடகிழக்கு பாகிஸ்தான் பகுதிகளும் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அந்தப் பகுதிகளில் விமானம் தரையிறக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

மாயமான மலேசியன் எயார் லைன்ஸ் விமானம் போயிங் 777 ரகத்தைச் சேர்ந்தது. மிகப் பெரிய விமானமான அதனைத் தரையிறக்க குறைந்தபட்சம் 5,000 அடி ஓடுபாதை தேவை என்று 'தி இன்டிபெண்டன்ட்' நாளிதழ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, காணாமற்போன மலேசிய விமானத்திற்கும், தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென தலிபான் அமைப்பு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## காணாமற்போன விமானத்தை தனது பகுதியில் தேடும் சீனா



பீஜிங்,மார்ச் 19

காணாமற்போன மலேசிய விமானத்தை, சீனா, தனது நிலப்பரப்புக்குள் தேடும் முயற்சியைத் தொடங்கியிருக்கிறது.

பத்து நாள்களுக்கும் முன்னர் காணாமற்போன இந்த விமானத்தில் பயணம் செய்த சீனப் பயணிகளின்பின்னணி குறித்து தீர ஆராயப்பட்டதாகவும், அவர்களில் யாருக்கும் விமானக் கடத்தலிலோ அல்லது பயங்கரவாதத்தாக்குதலிலோ தொடர்பு இருக்கும் என்று நம்புவதற்கான ஆதாரம் இல்லை என்றும், மலேசியாவுக்கான சீனத் தூதர் ஹுவாங் ஹுய்க்காங் தெரிவித்தார்.

இந்த விமானம் கோலாலம்பூரிலிருந்து பீஜிங் சென்று கொண்டிருந்தபோது, புறப்பட்ட சுமார் 45 நிமிடங்களுக்கெல்லாம் ராடர் தொடர்பை இழந்தது.

அதைத் தேடும் பணியில் இப்போது 26 நாடுகள் ஈடுபட்டிருக்கின்றன.

மலேசியாவுக்கு வடக்கே ஆசியாவின் சில பகுதிகளிலும், தெற்கே இந்தியப் பெருங்கடல் பகுதியிலும் இதைத் தேடும் வேலைகள் நடந்து வருகின்றன.

பல நாடுகள் , இந்த விமானம் தங்கள் வான்பாதைக்குள் வந்திருக்கும் என்பதை நிராகரித்திருக்கின்றன. (த)

## விபத்திலிருந்து தப்பியது அமெரிக்காவின் விமானம்

நியூயோர்க்,மார்ச் 19

அமெரிக்காவின் ஆர்லண்டோ நகரில் இருந்து அட்லாண்டாவுக்குப் பயணித்த டெல்டா எயார்லைன்ஸ் விமானம் பெரும் விபத்திலிருந்து தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்டா எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் நேற்று முன் தினம் 179 பயணிகளுடன் பயணித்துக்கொண்டிருந்த போது நடுவானில் விமானத்தின் இறக்கையின் பெரும்பகுதி தனியாகக் கழன்று கீழே வீழ்ந்துள்ளது.

இதை அறிந்து கொண்ட விமானி, வெகு சாமர்த்தியமாக விமானத்தை செலுத்தியபடி அட்லாண்டா விமான நிலையக் கட்டுப்பாட்டு அறையைத் தொடர்பு கொண்டார்.

சம்பவத்தை விளக்கிக் கூறி. தனது விமானம் அவசரமாகத் தரையிறங்க அனுமதி வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து, அதிகாரிகள் விரைவாகச் செயல்பட்டு, ஓடுபாதையை வெறுமைப்படுத்தி அந்த விமானம் அவசரமாகத் தரையிறங்க அனுமதியளித்தனர்.

முன் எச்சரிக்கை நடவடிக்கையாக ஓடுபாதையின் இரு மருங்கிலும் நோயாளர் காவு வாகனங்களையும், தீயணைப்பு வாகனத்தையும் தயார் நிலையில் நிறுத்தி வைத்தனர்.

ஒரு இறக்கையை இழந்து தரையிறங்கிய விமானத்தை இரவு 7.30 மணியளவில் திறமையாகத் தரையிறக்கிய அந்த விமானி, பயணிகள் இறங்கும் இடத்தில் பத்திரமாக நிறுத்தியதும் விமான நிலைய ஊழியர்கள் பாராட்டியுள்ளனர்.

அவரது சாதுரியத்தால் 179 பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் 6 பேர் காயங்களின்றிக் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

பறக்கும் போது அந்த விமானத்தின் இறக்கை கழன்று வீழ்ந்தது எப்படி? என்பது தொடர்பாக டெல்டா எயார்லைன்ஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (த)



அமெரிக்காவின் பல நகரங்களிலும் கடந்த சில நாள்களாகக் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகின்றது. இதனால் இங்கு போக்குவரத்து உட்பட மக்களின் அன்றாடப் பணிகள் பாதிப்படைந்துள்ளன. (த)

## ஜப்பானில் கப்பல்கள் விபத்து


ரோக்கொயோ,மார்ச் 19

ஜப்பானில் நேற்று இரண்டு சரக்குக் கப்பல்கள் நேற்று மோதி விபத்துக்குள்ளாகின. இதில் 9 சீனக்குழு உறுப்பினர்கள் காணாமற் போயுள்ளனர்.

இது குறித்து ஜப்பானியக் கடற்படையினர் தெரிவித்துள்ளதாவது:-

12,630 தொன் எடையை ஏற்றிக் கொண்டு பனாமா கொடி ஏந்தி வந்த சரக்குக் கப்பலும் கொரிய நாட்டுக் கப்பலும் மோதி கடலில் மூழ்கியன. நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த விபத்தில் சீனக் குழு உறுப்பினர்கள் 9 பேர் காணாமற் போயுள்ளனர். இதனை அடுத்து ரோந்துக் கப்பல் மற்றும் ஹெலிகொப்டர்களில் தேடுதல் பணி நடந்து வருகிறது. 20 சீன குழு உறுப்பினர்கள் சென்ற இந்தக் கப்பலில் 11பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## விமானியின் வீட்டில் இலங்கை உட்பட 5 நாட்டு ஓடுதளங்களின் மென்பொருள்



கோலாலம்பூர்,மார்ச் 19

காணாமற்போன மலேசிய விமானத்தின் விமானி ஒருவருடைய வீட்டை சோதனையிட்டபோது கண்டுபிடிக்கப்பட்ட விமானப் பறப்பு ஒப்பாக்கியில் இலங்கை உள்ளிட்ட முக்கிய விமான நிலையங்களின் ஓடுதளங்கள் உள்ளமை தெரிய வந்துள்ளது.

உலகின் முன்னணி விமான நிலையங்களின் விமான ஓடுதள மாதிரிகளை உள்ளடக்கிய மென்பொருள் குறித்த விமானியின் விமானப் பறப்பு ஒப்பாக்கியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளின் விமான ஓடுபாதைகளும் இந்திய விமான நிலையங்கள் மூன்றின் ஓடுபாதைகளும் இவற்றுள் அடங்குகின்றன.

அமெரிக்க இராணுவத் தளமான டீகோ கார்சியாவின் விமான ஓடுதளமும் குறித்த மென்பொருளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் என மலேசிய அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி அந்நாட்டு தினசரி பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தலைமை விமானியான சஹாரி அஹமட் ஷாவின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இந்த மென்பெருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் அதிகாரிகள் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (த)

## வெனிசுலா விமான சேவையை முற்றாக நிறுத்தியுள்ளது கனடா




மொன்றியல்,மார்ச் 19

கனடாவின் எயார் கனடா விமான நிறுவனம் வெனிசுலாவுக்கான விமான சேவையை நிறுத்தியுள்ளது.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் நிலவி வரும் பொருளாதாரப் பற்றாக்குறையால் வேலையில்லாத் திண்டாட்டாம் தலைவிரித்தாடுவதுடன், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாகத் தினந்தோறும் நடைபெறும் போராட்டங்களால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள் ளது.

இதனால் அயல்நாட்டு விமான நிறுவனங்களுக்கு வெனிசுலா அரசு அளிக்க வேண்டிய கடன் நிலுவையை 3.3 பில்லியன் டொலர் தொகையைத் திரும்ப பெறுவதற்கே திண்டாடி வருகின்றன.

இந்நிலையில் பொதுமக்களின் போராட்டங்களினால் தங்களுடைய செயற்பாடுகளுக்கான பாதுகாப்பு குறைந்துள்ளதால் விமான சேவைகளைத் தொடரப்போவதில்லை என்று எயார் கனடா நிறுவனம் தங்களது இணையத்தளத்தில் தகவல் வெளியிட்டுள்ளது. மேலும் இவர்களது கடைசி விமானம் கடந்த ஞாயிறன்று வெனிசுலாவில் இருந்து புறப் பட்டது.

இது குறித்து வெனிசுலாவின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ வெளியிட்ட அறிக்கையில், தங்கள் நாட்டுக்கு விமான சேவைகளைக் குறைக்கும் அல்லது நிறுத்தி வைக்கும் நிறுவனங்கள் கடுமையான நடவடிக்கைகளை எதிர் கொள்ள நேரிடும் என்றும், வெனி சுலாவுக்கான தங்களது சேவையை நிறுத்தும் விமான நிறுவனங்களுக்குத் தான் ஆட்சியில் இருக்கும்வரை மறு அனுமதி அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்துள்ளார். (த)

## ஈரான் அணு உலையை தாக்க மேற்குலக நாடுகள் சதியாம்

தெஹ்ரான்,மார்ச் 19

ஈரானில் அணு உலையைத் தகர்க்க மேற்குலக நாடுகள் சதி செய்திருப்பதாக அந்நாட்டு மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


அணு உலை பாதுகாப்புப் பொறுப்பாளரான அஸ்கர் ஜரீன் கூறும்போது, அணு உலைக்கு வாங்கப்பட்ட குழாய்களில் சில கோளாறுகள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்ததால் அவற்றை அணு உலையில் பொருத்தாமல் விட்டுவிட்டனர். இதனால் அணு உலைக்கு நேர இருந்த ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. குழாய்களைச் சரிவரக் கவனிக்காமல் ஒப்பந்ததாரர் வாங்கியுள்ளார். இந்தச் சதியில் மேற்கத்திய நாடுகளின் உளவுத்துறைக்குத் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கி றோம்" என்று அவர் கூறி னார். (த)

# கொக்குவில் இந்துக் கல்லூரியில் புகழ்பூத்த தமிழ் ஆசிரியையாக, பகுதித் தலைவியாக பிரதி அதிபராக 26 வருட சேவை நிறைவில் ஓய்வினைப்பெறும்

# திருமதி ரதி சந்திரநாதன் அவர்களின்

# அறுபதாவது அகவை நிறைவில் சேவை நலன் பாராட்டும்

# பிறந்தநாள் வாழ்த்தும் -19.03.2014



Mrs.Rathie Chandranathan
Deputy Principal

### அல்லும் பகலும் பாடுபட்டவர்

**திருமதி ரதி சந்திரநாதன்** கடமை கண்ணியம் கட்டுப்பாடு நிறைந்தவர். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டவர். மாணவச் செல்வங்களின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தவர். கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமான் மீது மிகவும் பக்தி உள்ளவர். இவர் இந்தக் கல்லூரியில் கல்விகற்று ஆசிரியையாகி இந்தக் கல்லூரிலேயே நீண்டகாலமாக பணியாற்றினார். இவர் தனது ஓய்வு காலத்திலே குடும்பத்துடன் சந்தோஷமாக சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானை வணங்கி அவரின் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து நல்ஆசிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

சிவஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்,பிரதமகுரு
ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய

### மகிழ்ச்சியும் நிறைவும் மலரட்டும்

எமது கல்லூரியில் ஆசிரியராய், பாட இணைப்பாளராய், பகுதித் தலைவியாய், பிரதி அதிபராய், பல்பரிமாண நிலையில் நின்று கால் நூற்றாண்டு காலம் சேவையாற்றி, சேவையின் நிறைவில் ஒய்வு பெற்றுக்கொள்ளும், திருமதி ரதி சந்திரநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வெய்துகின்றேன். இந்தக் கல்லூரியிலே தமிழ் மொழி, வரலாறு, புவியியல் பாடங்களைக் கற்பித்ததன் மூலம் சிறந்த செழுமைமிக்க ஆசிரியையாகத் திகழ்ந்ததோடு, ஐந்து அதிபர்களின் கீழ் சேவையாற்றிய அனுபவ முதிர்ச்சி பெற்ற ஒருவராகவும் விளங்கியுள்ளார். தரம் 6 இல் இருந்து க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் வரை காலம் நேரம் பார்க்காமல் உழைத்தவர். காரியங்களைக் கச்சிதமாக முடிக்கும் ஆற்றல் மிக்கவர். எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்துடன் மாணவர் மத்தியிலும் சக ஆசிரியர்கள் மத்தி யிலும் தனித்துவமான இடத்தைப் பிடித்துக்கொண்டவர். தமிழ் மன்றத்தின் பொறுப்பாசிரியராக இருந்து "தேமதுரம்" என்னும் மலரினை வெளியிட்டு மன்றிற்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்தவர். எனது கடமைக் காலத்தில் பிரதி அதிபராக இருந்து தனது கடமையை மேற் கொண்டவர். இந்தக் கல்லூரியிலே கற்று இந்தக் கல்லூரியிலே நீண்டகாலம் சேவையாற்றும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்தற்கரியது. அத்தகு வாய்ப்பினைப் பெற்றுக் கொண்ட ஆசிரியை அவர்கள் சேவையில் இருந்து ஒய்வுபெறுதல் என்பது கல்லூரிக்கு பேரிழப்பாக அமைந்த போதும் அவர்களின் ஒய்வுகாலம் மகிழ்ச்சியும் நிறைவும் கொண்டதாக அமைய எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வே. ஞானகாந்தன், அதிபர்.
கொக்குவில் இந்துக் கல்லூரி.

### தன்னலங்கருதாத் தாயவள்

ஆசிரியை திருமதி ரதி சந்திரநாதன் கடந்த 33ஆண்டுகள் கல்விப்பணியாற்றி இன்று இளைப்பாறுகின்றார். இவர் தனது கல்விப்பணியின் இறுதி இருபத்தாறு ஆண்டுகள் தொடர்ச்சியாக கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக, பகுதித் தலைவியாக, பிரதி அதிபராக, சேவையாற்றியுள்ளார். இவர் சுமார் பத்து ஆண்டுகள் இக் கல்லூரியிலேயே கல்வி பயின்ற பழைய மாணவியுமாவார். கொக்குவில் இந்து கல்லூரி ஒரு கலவன் பாடசாலை என்ற வகையில் பெண் பிள்ளைகளின் ஒழுக்கக்கட்டுப்பாட்டுக்கு நல்வழிகாட்டி நெறிப்படுத்திய ஆசிரியையாக இவர் விளங்கினார். இவர் தரம் 6 முதல் 11வரை தமிழ் மொழி கற்பிப்பதிலும், உயர்தர வகுப்பில் புவியியல் கற்பிப்பதிலும் சிறந்த ஆசிரியையாகத் திகழ்ந்தவர். இவர் தனது கற்பித்தற் பணியுடன் இணைச் செயற்பாடுகளிலும் சிறப்பாகச் செயற்பட்டவர். குறிப்பாக எனது அதிபர் பதவிக் காலத்தில் தமிழ் மன்றத்தின் பொறுப்பாசிரியையாக இருந்து தமிழ்த்தினப் போட்டிகளுக்கு மாணவரைத் தயார்படுத்தியதுடன் கல்லூரியின் வருடாந்த தமிழ்த்தின நிகழ்வையும் சிறப்பாக நடத்திய பெருமைக்குரியவர். இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் இன்று நல்ல நிலையில் உள்ளதை எண்ணிப் பெருமைப்பட்டுக்கொள்வார். இவரது இளைப்பாறல் கல்லூரிக்கும், மாணவகளுக்கும் பேரிழப்பாக அமையவிருப்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

இவரது ஒய்வு கால வாழ்க்கை நலமாகவும், சிறப்பாகவும் அமைய இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்

பொ.கமலநாதன், ஓய்வுநிலை அதிபர்.

### கொக்குவில் இந்துவின் தவப்புதல்வி

ஆசிரியை திருமதி ரதி சந்திரநாதன் இளைப்பாறுகிறார் என்பதை நம்பவே முடியவில்லை. அன்று கல்லூரியிலே எனது மாணவியாகத் துள்ளித்திரிந்த திருமதி ரதிபோலவே ஆசிரியராகப் பணி ஏற்றபோதும் துடிதுடிப்பாகச் செயற்பட்டார். மாணவர் நலனிலும் ஒழுக்கத்திலும் மிகுந்த அக்கறை காட்டியவர். மாணவியாகவும், ஆசிரியராவும் இருந்த காலத்தை உற்றுப்பார்க்கும்போது ஒரு உண்மை புலப்படுகிறது. விசுவாசமாக நடப்பதிலும், நேர்மையாகக் கடமையாற்றுவதிலும், எதனையும் ஏற்றுச் சமாளிப்பதிலும் அவருக்கு நிகர் அவரே. கொக்குவில் இந்துக் கல்லூரி பெற்ற தவப்புதல்விகளில் திருமதி ரதி குறிப்பிடத்தக்கவர். கல்லூரி மீது அளவற்ற அன்பும், விசுவாசமும் கொண்ட சந்திரநாதன் தன் மனைவி கல்லூரியில் கடமை செய்யப் பின்புலமாக நின்று ஆதரவு நல்கியவர். திருமதி ரதி இளைப்பாறினாலும் தொடர்ந்து அவர்கள் தம் சேவையை எமது கல்லூரிக்கும் தமிழ் உலகத்திற்கும் செய்வாரென நம்பி, வாழ்த்தி அவருக்கு நல்லாசிகள் கூறுகின்றேன்.

இ.மகேந்திரன்,ஓய்வு நிலை அதிபர்,

### திருமதி ரதி சந்திரநாதன்

BA.Dip.in Edu. SLTS-I

பிரதி அதிபர்

| | |
|---|---|
| பிறந்த திகதி | : 1954.03.19 |
| ஆரம்பக்கல்வி | : யா/கொக்குவில் மேற்கு C.C.T.M.S |
| இடைநிலை உயர்கல்வி | : யா/கொக்குவில் இந்துக் கல்லூரி |
| பட்டப்படிப்பு | : பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பட்டப்பின் படிப்பு | : யாழ். பல்கலைக்கழகம் |

சேவை விபரம்

| | |
|---|---|
| வ/நெடுங்கேணி மகாவித்தியாலயம் | - 15.02.1982 -13.04.1989 |
| யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி | -14.04.1989 - 18.03.2014 |

பதவிகள்

பகுதித் தலைவர் : யா/கொக்குவில் இந்துக் கல்லூரி -2005-2012

பிரதி அதிபர்: யா/கொக்குவில் இந்துக் கல்லூரி -02.01.2013 -18.03.2014

### கொக்குவில் இந்துவின் சொத்து

திருமதி ரதி சந்திரநாதன் அவர்கள் தனது ஆசிரிய சேவைக் காலத்தின் முழுமையையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிறைவு செய்தவர். ரதி ரீச்சர் என்று எல்லோராலும் அன்புடனும், மதிப்புடனும் அழைக்கப்பட்ட ஆசிரியை கொக்குவில் இந்துவே தனது மூச்சுக் காற்று என்று வாழ்பவர். கூர்மையான கண்கள், நிதானமான நடை, கணீரென்றகுரல், தெளிந்த சிந்தனை, நேர்மையான செயற்பாடு என்பன அவரது சிறப்பியல்புகள். சக ஆசிரியர்களுடன் அன்புடன் பழகுவதிலும், மாணவர்களுடன் கண்டிப்புடன் கூடிய கரிசனையுடன் பழகுவதிலும் வல்லவர். கொக்குவில் இந்துக் கல்லூரியின் சமூகத்தை தன் சமூகமாக நேசிப்பவர். பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் முன்னின்று உழைப்பவர். கடமை உணர்வும், அர்ப்பணிப்பும், தியாக உணர்வும் கொண்ட துடிப்பு மிக்க ஆசிரியையாகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றிய இவரது ஒய்வு பாடசாலையில் ஒரு பெரிய வெற்றிடத்தை ஏற் படுத்தப் போகிறது. ஆசிரியை மட்டுமன்றி அவரது குடும்பத்தினரும் கொக்குவில் இந்துவை தமது குடும்பப் பாடசாலையாக சிந்தித்து செயற்படுபவர்கள். அவரது ஓய்வுகாலம் சிறப்புற அமைந்து அவர் மேலும் பல ஆண்டுகள் நோய்நொடியின்றி வாழ பாடசாலை சார்பில் வாழ்த்துகிறேன்.

எஸ்.கண்ணதாசன், சிரேஷ்ட விரிவுரையாளர்,
செயலாளர்,பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.
கொக்குவில் இந்துக் கல்லூரி.

### கால் நூற்றாண்டு தடம் பதித்தவர்.

ஆசிரியை திருமதி ரதி சந்திரநாதன் நீண்டகாலமாக கொக்குவில் இந்துக்கல்லூரியில் மாணவியாக, ஆசிரியராக, பிரதி அதிபராக விளங்கி இன்றுடன் ஓய்வு பெறுகின்றார்.

இவர் ஆரம்பத்தில் இருந்து துடிப்பு மிக்க ஆசிரியராக விளங்கியவர். உயர்தர வகுப்பில் புவியியலையும், இடைநிலை வகுப்பில் தமிழ் பாடத்தையும் திறமையாக கற்பித்து வந்தார். கல்லூரியில் தமிழ்மன்ற பொறுப்பாசிரியராக இருந்து 'தேமதுரம்' என்ற சஞ்சிகையை வெளியிட்டு மாணவர்களுக்கு இடையே தமிழ்ப் பற்றை வளர்த்தவர். இதைவிட வைத்திய கலாநிதி இராஜச்சந்திரன் பேச்சுப்போட்டியை தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் நடத்தி மாணவர்களுக்கு இடையே பேச்சு ஆற்றலை வளர்த்தவர்.

தமது சேவை நிறைவுக் காலத்தில்

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று''

என்ற வள்ளுவர் வாக்குக்கேற்ப திருமதி ரதி சந்திரநாதன் புகழோடு தோன்றி சிறந்த பணிகளால் மேலும் புகழ்பெற்று நிறைந்த புகழோடு விடைபெறுவது மகிழ்வையும் நிறைவையும் தருகின்றது. அவரின் குடும்பம் சிறக்கவும், நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

மு.வேலாயுதபிள்ளை, தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

### கற்பித்தலில் ஒரு கலங்கரை விளக்கு

கற்பித்தல் செயன்முறை என்பது ஒரு கலையாகும். அத்தகைய கலைத்துவம் எல்லோருக்கும் கிடைத்திருப்பதில்லை. மாணவர்களை அறிந்து அவர்களது உள்ளத்திற்குள் பிரவேசிக்கும் போது தான் கற்றல் செயற்பாடு வினைத்திறன் உடையதாகின்றது. அந்த வகையில் தமிழ் ஆசிரியையாகவும்,பகுதித்தலைவியாகவும் 26ஆண்டுகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அளப்பெரும் பணியாற்றி சேவை நிறைவில் ஓய்வுபெற்றுக்கொள்ளும் திருமதி ரதி சந்திரநாதன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதிலே பெரு மகிழ்ச்சிய டைகிறேன். யாழ்ப்பாண கல்வி வலயத்தில் சிறப்புறு கல்லூரியாக விளங்கும் இந்தக் கல்லூரியில் தமிழ்ப் பாடத்தில் உயர்நிலை வெளியீடுகளை வெளிப்படுத்தி புதிய மாற்றத்தை உருவாக்கிய ஆசிரியர் அவர்கள் குடும்ப சுக நலத்துடன் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எஸ். உதயகுமார்,
யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்.

### கொக்குவில் இந்துவின் ஒளி விளக்கு

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவியாக, ஆசிரியராக, மேற்பார்வையாளராக, உதவி அதிபராக, பிரதி அதிபராக சேவையாற்றி 32 வருடங்கள் ஆசிரியையாக சேவையில் இருந்து திருமதி ரதி சந்திரநாதன் ஓய்வுபெறுகின்றார். 1982ஆம் ஆண்டு நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் தமது ஆசிரியப் பணியை ஆரம்பித்து 1989இல் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று 26 ஆண்டுகள் இக் கல்லூரியில் மகத்தான சேவையைப் புரிந்துள்ளார். இக் கல்லூரியில் தமிழ் மன்றம், தமிழ்மொழித்தினப் போட்டி, முகாமைத்துவக்குழு, ஒழுக்காற்றுக்குழு, நூற்றாண்டு விழாக் குழு, போன்றவற்றில் அங்கத்துவம் வகித்து முன்னின்று செயற்பட்டவர். எல்லோருடனும் சிறந்த தொடர் பாடலைப் பேணி சமூகமட்டத்தில் குடும்பத்துடன் சென்று உணர்வைப் பகிர்ந்து கொள்வது தனிப்பண்பாகும். இவரது ஓய்வு காலத்தில் சமூகம் சார்ந்த பணிகளில் ஈடுபட வாழ்த்துகின்றேன்.

அ.அகிலதாஸ், கோட்டக்கல்விப்
பணிப்பாளர்,நல்லூர்.

### சமூகத்தை அறிந்த ஆசிரியர்

திருமதி ரதி சந்திரநாதன் அவர்கள் மாணவராக, ஆசிரியராக, உதவிஅதிபராக கொக்குவில் இந்துவில் தனது வாழ்வின் பெரும்பகுதியைச் செலவிட்டவர். இவர் சமூகத் தொடர்பினைக் கொண்ட ஆசிரியராக மிளிர்ந்தமை கல்லூரிக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. கல்லூரியின் சமூக உறவினை வளர்ப்பதில் முன்னின்று உழைத்தவர். இவர் போன்ற ஆசிரியர்கள் இளைப்பாறுதல் அல்லது இடமாற்றப்படுதல் கல்லூரிக்கு பேரிழப்பினை ஏற்படுத்துகின்றது.

இவர் ஓய்வு காலத்திலும் தனது சேவையினை அனுபவத்தினை கல்விச் சமூகத்திற்கு வழங்க வேண்டுமென வேண்டுவதோடு நீடூழி காலம் நலமாக வாழ வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

அ.பஞ்சலிங்கம், முன்னாள் அதிபர்.

### கருமத்தில் கண்ணாயிருந்த சேவையாளர்

இன்றைய நாளில் மணிவிழா நாயகியாக விளங்கும் திருமதி ரதி சந்திரநாதன் அவர்களை வாழ்த்துகின்ற வாய்ப்பு எனக்கு கிடைத்ததை இட்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

அவர் தமிழ்ப்பாட ஆசிரியராக, பாட இணைப்பாளராக, பகுதித்த்லைவியாக, பிரதி அதிபராக கடமையாற்றிய காலத்தில் க.பொ.த. (சா/த) பொதுப் பரீட்சையின் தமிழ் மொழி பாட பிரதம மதிப்பீட்டாளராக பல தடவைகள் கடமை யாற்றியதுடன், அப்பரீட்சையில் தமது கல்லூரி மாணவர்கள் A சித்தி பெறத்தக்கவகையில் கற்பித்தும் உள்ளார். அத்துடன் மாணவர் ஒழுக்கத்தில் கண்டிப்புடன் கூடிய அரவணைப்பைக் காட்டி நல்வழிப்படுத்தியுள்ளார். தமிழ்த்தின போட்டிகளின் போது மாணவர்களை இனங்கண்டு உரிய போட்டிகளில் பங்கேற்கவைத்து, வெற்றிகளை ஈட்டி கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவ்வளவு சேவைக்கு மத்தியிலும் சிறந்த ஒரு குடும்பத் தலைவியாக செயற்பட்டு தமது பிள்ளைகள் கல்வியில் உயர்வடைந்து நன்நிலை பெறவும் வைத்துள்ளார். என்பது வெள்ளிடைமலை தமது ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புடனும் சுகநலத்துடனும் வாழ்ந்து மேலும் நற்பேறுகள் பெற்று இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறைவனின் நல்லருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

ஜெ. குமாரதேவன், தலைவர்,
ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

★★★★★★பாடசாலை ச் சமூகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.★★★★★★

# மூங்கிலாறு பகுதியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் பூநகரியைச் சேர்ந்த 3 குடும்பங்களுடையவை

## உறவினர்கள் இனம் காட்டினர்

கிளிநொச்சி, மார்ச் 19

முல்லைத்தீவு, மூங்கிலாறுப் பகுதியில் புதைக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி மீட்கப்பட்ட 9 எலும்புக்கூடுகளும் பூநகரியைச் சேர்ந்த 3 குடும்பங்களின் உறுப்பினர்களது என அடையாளம் காணப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, மூங்கிலாறுப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி காணியை உழுத போது அங்கு பிளாஸ்ரிக் பாய்களினால் சுற்றப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. சம்பவம் குறித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து மறுநாள் அங்கு 9 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

அதன்போது ஒருவரது அடையாளஅட்டையும் மீட்கப்பட்டிருந்தது. இவ்வாறான தகவல்களைக் கொண்டு இடம்பெற்ற விசாரணைகளில் கடந்த 2009 ஆம் ஆண்டு விசுவமடுகுளத்தை அண்மித்த பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல்களே அங்கு புதைக்கப்பட்டதாக தெரியவந்தது. இது குறித்து அப்போது தமிழர் புனர்வாழ்வு பணியாளராக இருந்த ஒருவரும் சாட்சியமளித்திருந்தார். மீட்கப்பட்ட அடையாள அட்டைக்குரிய நபர் கோரக்கன்கட்டு, பரந்தனைச் சேர்ந்த திருச்செல்வம் ரமேஸ்வரன் என்பவர் ஆவார்.

இவருடன் இவரது மனைவியான ரமேஸ்வரன் கௌசல்யா, இவர்களது உறவினர்களான செல்வாபுரம் பூநகரியைச் சேர்ந்த கந்தசாமி பவளராணி மற்றும் இவரது பிள்ளைகளான கந்தசாமி கஸ்தூரி, கந்தசாமி ரஜிவ்காந்த் ஆகியோரும் இதே பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு குடும்பமான துரையப்பா பூரணலிங்கம், அவரது மனைவியான பூரணலிங்கம் புஸ்பவதி, இவர்களது மகள்களான பூரணலிங்கம் கலாவதனி, பூரணலிங்கம் மேனகா, மகனான பூரணலிங்கம் கஜீபன் ஆகியோரே ஒரே நாளில் உயிரிழந்ததாக தெரியவருகிறது. இவர்களில் ஒருவரது எச்சங்கள் அந்தப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருக்கலாம் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து ஷெல் தாக்குதலில் காயமடைந்து உயிர் தப்பியவர்கள் வழங்கிய தகவல்களின்படி 2008 ஆம் ஆண்டில் தாம் பூநகரியில் இருந்து இடம் பெயர்ந்து புளியம்பொக்கணையிலும் அங்கிருந்து இடம் பெயர்ந்து கண்ணகை நகரிலும் வசித்ததாகவும், 2009.01.31 ஆம் திகதி இரவு 7 மணியளவில் இடம்பெற்ற எறிகணை வீச்சில் தாம் இருந்த குடிசைகள் சேதமடைந்தன என்றும் அதன்போதே இவர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவித்தனர். தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ-55)

## குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்

வவுனியா, மார்ச் 19

ஐரோப்பிய நாட்டின் நிதி உதவியுடன் வவுனியா நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் இடம்பெற்றது.

குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்துவதற்காக சுமார் 450 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், வவுனியா நகர சபை எல்லைக்குட்பட்ட மக்கள் கோடை காலங்களில் எதிர்நோக்கும் குடிதண்ணீர் நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு ஆறுகள் மற்றும் குளங்கள் மூலம் சேகரிக்கப்படும் நீரை நீர்த்தாங்கிகளில் சேமித்து குழாய்கள் மூலமாக சகல வீடுகளுக்கும் வழங்குவதெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கென குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீர் வழங்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடப்பு ஆண்டிலேயே முன்னெடுக்கப்படுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. (க-402)

## ஆஸிக்கு அனுப்புவதாகக் கூறி பணம் கறந்த ஆசாமி மாயம்

வவுனியா, மார்ச் 19

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறி அவர்களிடம் இருந்து பணம் அறவிட்டு வந்த ஒருவர் தலைமறைவாகியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் தென்பகுதியைச் சேர்ந்த ஒருவர் இளைஞர்களைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார். நம்பகத்தன்மையான சில வார்த்தைகளைக் கூறி ஆஸ்திரேலியாவில் இரண்டு வருட வேலைக்கான வீசா பெற்றுத்தருவதாக ஏமாற்றி குறித்த நபர் மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிடுமாறு தெரிவித்த நபர் ஒரு குறிப்பிட்ட தொகை சேர்ந்ததும் அந்தப் பணத்தைச் சுருட்டிக்கொண்டு தலைமறைவாகியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ-421)

## புத்துவெட்டுவானில் யானைத் தொல்லை

கிளிநொச்சி, மார்ச் 19

துணுக்காய் புத்துவெட்டுவான் கிராமத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு காட்டு யானைக் கூட்டம் ஒன்று புகுந்ததால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

புத்துவெட்டுவான் கிராமத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் பெரும்பாலான குடும்பங்கள் ஈடுபட்டுள்ள நிலையில் காட்டுயானைகள் அவற்றை நாசம் செய்துள்ளன. யானைகளை விரட்டுவதற்காக ஒளியேற்றி ஒலியெழுப்பிய போதும் அவை அங்கிருந்து அகலவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஏற்கெனவே நீண்ட நாள்களாக குறித்த யானைக்கூட்டம் பகல் இரவு வேறுபாடின்றி கிராமங்களுக்குள் நுழைவதாகவும் பயன்தரு பயிர்களை நாசம் செய்வதுடன் மக்களையும் அச்சுறுத்துகின்றன எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து அநுராதபுரத்தில் உள்ள வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு மக்கள் தெரியப்படுத்தியுள்ளனர். எனினும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (ஐ-18)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கணக்காய்வு நடவடிக்கைகள்

முல்லைத்தீவு, மார்ச் 19

வடக்கு மாகாண கணக்காய்வுத்திணைக்களத்தினர் முல்லைத்தீவு மாவட்டத்தில் கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்கள் கடந்த 11 ஆம், 12 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கல்வித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியவற்றில் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சில திணைக்களங்களின் கணக்குப் பேணலில் தவறுகள் இடம்பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இது தொடர்பான விசாரணைகளைத் தாம் வெகு விரைவில் நடத்த இருப்பதாகவும் அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர்.

இந்தக் கணக்காய்வு நடவடிக்கை இனி வரும் காலங்களில் தொடர்ந்து இடம்பெறும் எனவும் கண்டுபிடிக்கப்படும் தவறுகள் தவறு செய்தவர்கள் மூலமாகவே சீர்செய்யப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (க-288)

# முல்லைத்தீவு மாற்றுத் திறனாளிகள் 20 பேருக்கு மருத்துவச் சான்றிதழ்கள்

## சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக

முல்லைத்தீவு, மார்ச் 19

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் 210 பேருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனின் ஏற்பாட்டில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக வளாகத்தில் கடந்த 14,15 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையின் பின்னர் இவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.




மாற்றுத் திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும் போது.

மருத்துவப் பரிசோதனைகளை கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தைச் சேர்ந்த பரீட்சகர்களும், கொழும்பைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களும் மேற்கொண்டனர்.

இந்த இரண்டு தினங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பரிசோதனைகளின் போது தகுதியான 210 பேருக்கு மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் அரச அதிபரின் ஏற்பாட்டில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ந.தசரதன் தலைமையில் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர்களின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-9)



கட்டட நிதி அன்பளிப்பின் போது

## விளையாட்டுக் கழகத்துக்கு கட்டட நிதி அன்பளிப்பு

வவுனியா, மார்ச் 19

வவுனியா கோவில்புதுக்குளம் றொக்கற் விளையாட்டு கழகத்தின் கட்டட புனரமைப்புக்காக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள 39 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கான விளம்பர பதாகைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் வவுனியா உப நகரபிதாவும், கோயில்குளம் இளைஞர் கழக ஸ்தாபகருமான க.சந்திரகுலசிங்கம் இவற்றை வழங்கினார்.

39 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி விளையாட்டு விழாவும் கலை நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன. இவற்றுக்கென விளம்பரப் பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளன. (ஐ -402)

## தமிழ் மக்களை பாதுகாக்க சர்வதேசம் உதவவேண்டும்

### சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

வவுனியா, மார்ச் 19

போர் ஓய்ந்து ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ள சூழலிலும் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவற்றைத் தடுப்பதற்கு சர்வதேசமே குரல்கொடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன். நெடுங்கேணி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களது காணிகள் திட்டமிட்ட வகையில் அபகரிக்கப்படுகின்றன. எமது பிரதேசத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இதனால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்படுகிறது. அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க அரசு முயற்சியெடுக்கவில்லை. போரின் போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட எமது உறவுகளில் பலருக்கு என்ன ஆனதென்றே தெரியாதுள்ளது. வன்னியில் இடம்பெற்ற போரின்போது அரசு சர்வதேச சட்ட நெறிமுறைகளை மீறிச் செயற்பட்டுள்ளது என்று சர்வதேச நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன. இவ்வாறிருக்க உரிமைக்காகப் போராடிய ஓர் இனம் இன்று தனது அடையாளத்தைக் காப்பாற்ற முடியாத அளவுக்கு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது.

இலங்கை அரசு நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற் போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழு போன்றவை தமிழ் மக்களுக்கு நம்பிக்கையற்ற வகையிலேயே செயற்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவே தமிழ் மக்கள் தீர்வுக்காக சர்வதேசத்தை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தமிழ் மக்களது உரிமைகளைப் பாதுகாத்து தீர்வை எட்டித்தருவதற்கு சர்வதேசம் துணைநிற்க வேண்டும். அத்துடன் பறிக்கப்படும் தமிழர்களது காணிகளை மீளப் பெற்றுக்கொடுத்து சிங்கள குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தி மக்களுக்கு இயல்புவாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கவும் அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் தேவராஜா, வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-402)

19 MAR 2014
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களை கையறு நிலைக்கு தள்ளும் உத்தி அரங்கேறுகிறது!

மனித உரிமைகள் எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் கட்டத்திலும் பேணப்பட வேண்டியவை. அதற்காகக் குரல் கொடுத்து வந்த மனித உரிமை செயற்பாட்டாளர்களை-மனித உரிமைகள் ஆர்வலர் ருக்ஷி பெர்னாண்டோ, மனித உரிமைகள் ஆர்வலர் அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகிய இருவரையும் இலங்கை அரசு கைது செய்துள்ளது.

மனித உரிமை மீறல் எங்கு நடைபெற்றாலும், அதனை யார் செய்தாலும், அதில் உள்ள உண்மை, பொய்யைக் கண்டறியும் உரிமை அவர்களுக்கு உண்டு. மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்போரை, செயற்படுவோரைக் கைது செய்வதால் மனித உரிமைகளை நிலைநாட்ட முடியாது-

அவர்களைக் கைது செய்வது மனித உரிமைகளை மதிக்காத ஒரு செயற்பாடு. மற்றவர்கள் அவ்வாறு செய்யக்கூடாது என்று எச்சரிக்கும் மறைமுக வழியாகவும் அதனைக் கொள்ளலாம்.

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த திருமதி ஜெயகுமாரி, அவரது மகள் விபுசிகா ஆகியோர் கைது செய்யப்பட்டமை குறித்து நிலைமையை நேரில் கண்டு விசாரிப்பதற்குச் சென்றிருந்ததாலேயே இந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்பது தகவல்.

அவர்கள் விசேட தடுப்புக்காவல் சட்டத்தின் பிரகாரமே கைது செய்யப்பட்டார்கள் என்றும், விசாரிக்கப்படுகிறார்கள் என்றும் அரச தரப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் சமூகங்களுக்கு இடையே, ஸ்திரமற்ற நிலைமையை உண்டாக்க முனைந்தமை, பிரிவினை வாதத்தை ஊக்குவிக்கும் வகையில் செயற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்கள் விசாரிக்கப்படுவதாகவும் அரச தரப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் இந்தச் செயற்பாடு அனைத்துலக நாடுகள் பலவற்றை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தி உள்ளது. அதன் பால் எழுந்துள்ள பிரதிபலன்கள் குறித்த விவரங்கள் உடனடியாக (இப்பத்தி எழுதப்படும் வரை) வெளியாகவில்லை.

ஆனால், இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம், இந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை பொலிஸார் தடுத்து வைத்துள்ளமை குறித்து தனது கரிசனையை வெளிப்படுத்தி உள்ளது. மேலும், கிளிநொச்சி மாவட்டம், தருமபுரத்தைச் சேர்ந்த தாய் பாலேந்திரன் ஜெயகுமாரியும், அவ ரது பதின்மூன்று வயதான மகள் விபூசிகாவும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் குற்றவாளி ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்ததாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் - அரச - தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதன் பின்னர் அந்த விவகாரம் மூடப்பட்டு, புதிதாக மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது, இத்தகைய நடவடிக்கைகள் திட்டமிட்ட முறையில் தொடரும் என்று எதிர்வு கூறுவதாகவே உள்ளது எனலாம்.

அரசின் இந்த உத்தி, அல்லது வியூகம் தமிழ் மக்களைக் கையறு நிலைக்குத் தள்ளும் தன்மை கொண்டது!

### அஸ்தமனத்தை நோக்கிய பயணத்தில்

# சோனியாவின் காங்கிரஸ் கட்சி

சேரலாதன்



திருமதி சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி கடுமையான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. நடைபெற்று முடிந்த கடந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் வெற்றியீட்டி மத்தியில் ஆட்சி அமைத்த அந்தக் கட்சி தற்போது மதிப்பை இழந்து செல்லாக் காசான நிலையில் காட்சியளிக்கின்றமை அந்தக் கட்சியின் ஆதரவாளர்களிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் இவற்றுள் காந்தி குடும்பத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பும், பிரதமர் பதவியில் அமர்ந்திருக்கும் மன்மோகன் சிங்கின் பல வீனமும் முக்கியமானவையெனக் கூறப்படுகின்றன.

இத்தாலியப் பெண்ணான சோனியா இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் ஒரு போதுமே அமரமுடியாது என்றாலும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற வகையில் அவரே ஆட்சியை நடத்தி வருகின்றார். தமக்கு மிகவும் நெருக்கமான விசுவாசி என்பதாலேயே மன்மோகன்சிங்கை அவர் பிரதமர் பதவியில் அமர்த்தியுள்ளார். பிரதமரும் சோனியாவின் கட்டளைகளைச் சிர மேற்கொண்டு தவறாது நிறைவேற்றி வருகின்றார். இதனால் எது சரி, எது பிழை என்று கூறும் நிலையில் அவர் இல்லை. மேலும் காங்கிரஸ் ஆட்சியில் ஊழல்கள் நிறைந்துள்ளதாக மக்கள் குறைகூறி வருகின்ற போதிலும் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் பிரதமர் தமது மனச்சாட்சிக்கு விரோதமாக அவற்றையெல்லாம் புறமொதுக்கி வருகின்றார். பொருளாதார நிபுணரான மன்மோகன் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். தனிப்பட்ட ரீதியில் கறைபடாதவர் என்ற நல்ல பெயரும் இவருக்கு உண்டு. ஆனால் இவரைச் சார்ந்தவர்கள் புரியும் ஊழல்களுக்கு இவரை நோக்கியே சுட்டு விரல்கள் நீளுகின்றன.

தாம் இனிமேல் பிரதமர் பதவியில் அமரப் போவதில்லையென இவர் வெளிப்படையாக அறிவித்துள்ள நிலையில் சோனியாவின் இளைய புதல்வரான ராகுல் இந்தப் பதவி மீது கண் வைத்துள்ளார். தாமே காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளர் என்றும் அறிவித்து விட்டார். ஆனால் அரசியல் நிலவரங்களைப் பார்க்கும் போது இவர் எதிர்க்கட்சித் தலைவராகத் தானும் வருவாரா என்பதும் கேள்விக் குறியாகவே மாறி விட்டது.

அண்மையில் வட இந்திய மாநிலங்களில் இடம்பெற்ற நான்கு சட்ட சபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி பெரும் பின்னடைவுகளைச் சந்தித்தது. தலைநகர் புதுடில்லியில் அந்தக் கட்சியால் மூன்றாவது இடத்துக்கே வர முடிந்தது. இதனால் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைப்பதில் ஏனைய கட்சிகள் ஆர்வம் காட்டவில்லை. தமிழ் நாட்டில் அதன் நிலை பரிதாபத்திலும் பரிதாபமாகக் காட்சி தருகின்றது. நடைபெற்று முடிந்த தேர்தல்களில் அதனுடன் கூட்டணி அமைத்து மத்திய ஆட்சியிலும் பங்கு கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் கட்சியை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. வேண்டத்தகாத விருந்தினரை நடத்துவது போன்றதொரு நிலையே அங்கு காணப்படுகின்றது. முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான கட்சியும், தமிழ் நாட்டில் பத்துச் சதவீத வாக்கு வங்கியைக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் நடிகர் விஜயகாந்த் தலைமையிலான கட்சியும் காங்கிரஸை உதறித் தள்ளிவிட்டன. தமி[illegible] நாட்டிலுள்ள [illegible] இல[illegible] உணா[illegible]வாளர்க[illegible] [illegible]ரஸ் கட்சியை வேரறுப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு படுதோல்வியைத் தமிழ் நாட்டில் அடைவதைத் தவிர அந்தக் கட்சிக்கு வேறு வழியே இல்லை.

ஏனைய தென் மாநிலங்களிலும் இந்த நிலைதான் காணப்படுகின்றது. காங்கிரஸ் கட்சி பெரும் செல்வாக்குப் பெற்ற ஆந்திராவில் தெலுங்கானா பிரச்சினையால் அந்தக் கட்சிக்குப் பெரியளவில் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன. கேரளா, கர்நாடகாவிலும் ஆதரவு கிடைப்பதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை.

வட மாநிலங்களைப் பொறுத்தவரை பாரதீய ஜனதாக் கட்சியே இதுவரை முன்னிலை பெற்றுத் திகழ்கின்றது. இறுதி நேரத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்களும் தென்படவில்லை. பாரதீய ஜனதாக் கட்சி மதவாதத்தைக் கொண்டுள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள போதிலும் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் எண்பதுசத வீதமானவர்கள் இந்துக்கள் என்பதால் அந்தக் கட்சியின் செல்வாக்கில் வீழ்ச்சி ஏற்படாது எனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களையும் சேர்ந்த மாநிலக் கட் சிகள் பாரதீய ஜனதா வுடன் கூட்டு அமைப் பதில் பெரும் ஆர்வம் கொண்டுள்ளன. ஆனால் மிகப் பழைய பெருமைவாய்ந்த காங்கிரஸ் கட்சி தேடுவார் எவரும் இல்லாத நிலையில் தனித்துப் போய் பரிதாபமாகக் காணப்படுகின்றது.



இதற்குப் பல காரணங்களைக் கூற முடியும். சோனியா என்னதான் இந்தியப் பெண்களைப் போன்று சேலை அணிந்து ஹிந்தி மொழியில் பேசினாலும் அவர் ஓர் அந்நிய நாட்டைச் சேர்ந்தவர் என்ற தோற்றம் இன்னமும் இந்திய மக்களின் மனங்களில் காணப் படுகின்றது. மேலும் ஹிந்தி மொழி பேசும் ஒருவர் நீண்ட காலமாகப் பிரதமர் பதவியில் அமர்ந்து கொள்ளாமை இந்தியாவின் பெரும்பான்மை மக்களை ஹிந்தி மொழி பேசும் மக்களின் மனங்களில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாகவும், பெரும்பான்மை ஹிந்தி மொழி பேசும் ஒருவர் பிரதமராகவும் பதவியில் அமர்ந்து கொள்வது இந்தியாவின் எழுதப்படாத ஒரு சம்பிரதாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது, ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் இது இடம்பெறவில்லை. இதனால் ஹிந்தி மொழி பேசுவோரின் வெறுப்பு காங்கிரஸ் கட்சியிடம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேலும் காங்கிரஸ் ஆட்சியில் நாட்டின் பொருளாதாரத்தையே சீர் குலைத்து விடும் அளவுக்குப் பெரும் ஊழல்கள் இடம் பெற்றுள்ளன. ஜீ இரண்டு அலை வரிசையை ஒதுக்கி வழங்கியதில் கோடி கணக்கான ரூபாய் அளவுக்கு ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. பொதுநல வாய விளையாட்டுப் போட்டிகளுக்கென அரங்கங்கள் அமைத்ததிலும் பெரும் ஊழல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப் பட்டது.

இவை இரண்டிலும் தொடர்புடையதாகத் தெரிவித்து இரண்டு மத்திய அமைச்சர்கள் கைது செய்யப்பட்ட துடன் வழக்கு விசாரணைகளும் இடம் பெற்று வருகின்றன. இதனை விட வேறு பல ஊழல் சம்பவங்களும் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் எதிர்காலமே சோதனைகள் நிறைந்த வையாக மாறிவிடக் கூடிய ஏதுநிலை கள் அதிகளவில் காணப்படுகின்றன. மேலும் தொடர்ந்து தனியொரு குடும்பத்தின் ஆட்சிக்குள் காங்கிரஸ் கட்சி சிறைப் பட்டுக் கிடப்பதும் இதன் செல்வாக்கைப் பெரி தும் பாதித்துள்ளது.

ஆகவே இனியாவது துதி பாடிக் கொண்டிருக்கும் போலியான நபர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டுத் தகுதியானவர்களின் கைகளில் கட்சியின் பொறுப்புக்கள் ஒப்படைக் கத் தவறும் பட்சத்தில் காங்கிரஸ் கட்சியின் அஸ்தமனத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

# வளங்கள் நிறைந்த ஒட்டுசுட்டான் பிரதேசம்







" ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் வளமாகக் காணப்படும் முத்து ஐயன்கட்டு குளமும், சுமார் 47 இற்கும் மேலான சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் இங்கு அமைந்துள்ளன. இங்கு அமைந்துள்ள சிறிய மலைகள் தற்போது அழிக்கப்பட்டு வருகின்றன.

இ.தனபாலசிங்கம்

கிழக்கே வங்காள விரிகுடாக் கடல், கிளிநொச்சி மாவட்டம், தெற்கே, வவுனியா மாவட்டம், தென்கிழக்கே, திருகோணமலை - அனுராதபுரம் மாவட்டங்கள், மேற்கில் மன்னார் மாவட்டம் ஆகியவற்றை எல்லையாகக் கொண்டு விளங்குவது முல்லைத்தீவு மாவட்டமாகும்.

மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல் ஆகிய நான்கு நிலங்களுள் குறிஞ்சி தவிர்ந்த ஏனைய மூன்று நிலங்களையும் தன்னகத்தே கொண்டு இந்த மாவட்டம் விளங்குகின்றது. வாவெட்டிமலை, செம்மலை, குருந்தூர்மலை, உவர் மலை, தட்டாமலை, ஒதியமலை, தட்டையர்மலை ஆகிய மலைகளின் பெயர் கொண்ட கிராமங்கள் இருக்கின்ற போதிலும் இங்கு பெரிய மலைகளோ அன்றி மலைத் தொடர்களோ அமைந்திருக்கவில்லை.

இயற்கையான கடல் வளம் நிறைந்த நெய்தல் நிலமும், அந்த நிலத்துக்கேயுரிய மக்களும் இங்கு அமையப் பெற்றுள்ளமை சிறப்பு அம்சங்களாகும். குளமும், சிற்றாறுகளும், வற்றாத நீரூற்றுக்களும் கொண்டதாக மருத நிலவளத்துடன் காணப்படுகிறது இந்த மாவட்டம். இங்கு உழவுத் தொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்ட உழவர்களும், தனித்துவப் பண்புடன் வாழ்ந்து வருகின்றனர். கடலோரம் தவிர்ந்த ஏனைய இடமெங்கும் இடைக்கிடையே பாலை, முதிரை ஆகிய பெருமரங்களைக் கொண்ட காடுகள் காணப்படுகின்றன.

தமிழர், முஸ்லிம்கள் என்று ஈரின மக்கள் வாழும் இந்த மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும் இந்த நிலை காணப்படுகின்றது. மாங்குளத்திலிருந்து திருமுறிகண்டி வரையுள்ள பிரதேசத்தில் அண்மைக் காலமாக பெரும்பான்மையின மக்களின் குடியேற்றங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

முல்லைத்தீவின் நடுநாயகமாக விளங்குவது ஒட்டுசுட்டான் பிரதேசமாகும். கிழக்கில் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு, கரைச்சி ஆகிய பிரதேசங்களும், மேற்கில் துணுக்காய்ப் பிரதேசமும், தெற்கில் வவுனியா வடக்குப் பிரதேசமும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் எல்லைகளாகும். வன்னிக் குறுநில மன்னர்களோடு குறிப்பாக பண்டாரவன்னியனோடு தொடர்புபட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களும் இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ளன. ஆங்கிலேயத் தளபதி வோன்றிபேக் 1803 இல் பண்டாரவன்னியனைத் தோற்கடித்த இடமான கற்சிலைமடுவும், பண்டாரவன்னியனது காதலியான குருவிச்சை நாச்சியார் பிறந்து வளர்ந்த இடமான காதலியார் சமளங்குளமும், குருவிச்சை நாச்சியார் நினைவாக அவரது பெயர் தாங்கிய குருவிச்சை ஆறும் இங்கு காணப்படுகின்றன. பண்டாரவன்னியனின் படையிலிருந்த பெண் யானை இறந்த இடம் "கரிபட்ட முறிப்பு" என்றும், ஆண்யானை இறந்த இடம் மணவாளன் பட்ட முறிப்பு என்றும் அழைக்கப்படுகின்றன. பண்டாரவன்னியனைத் தோற்கடித்தமைக்காக கப்ரின் வோன் றிபேக்குக்கு அரசு வழங்கிய பண்டாரக்குளம், பண்டையவன்னி மன்னனின் இராசதானியாக விளங்கிய வாவெட்டிமலை போன்றவையும் இவற்றுள் அடங்கும் சிலவாகும்.

அடியவர்களின் உள்ளத்தில் நீங்காத இடம் பிடித்துள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் ஒட்டுசுட்டானில்தான் அமைந்துள்ளது.

ஒலுமடுக் கிராமத்துக்கு வடக்கே அமைந்துள்ள மம்மில் பிள்ளையார் ஆலயமும் இவ்வாறே பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

ஒட்டுசுட்டானிலிருந்து கற்சிலைமடு ஊடாக புதுக்குடியிருப்புக்குச் செல்லும் வீதியைக் குறுக்கறுக்கும் இடத்தில் கெருடகவானால்உருவாக்கப்பட்ட கெருடமடு தீர்த்தக்கரை அமைந்துள்ளது.

வருடாவருடம் ஆடி அமாவாசை தினத்தன்று இங்கு நீர் பெருகுவதும்அற்புதம் நிறைந்த நிகழ்வாகும்.

மேலும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் வளமாகக் காணப்படும் முத்து ஐயன்கட்டு குளமும், சுமார் 47 இற்கும் மேலான சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் இங்கு அமைந்துள்ளன. இங்கு அமைந்துள்ள சிறிய மலைகள் தற்போது அழிக்கப்பட்டு வருகின்றன்.

மேலும் இங்கே கன்னியர்கேணி என்கிற குளமும் உண்டு. இது கன்னிப் பெண்கள் குளிப்பதற்கான பிரத்தியேக இடமாகக் கருதப்படுகிறது.

## தவக்காலச் சிந்தனை



### இறைவன் விரும்பும் நோன்பு

அந்தக் காலத்தில் யோவானின் சீடர்கள் இயேசுவிடம் வந்து "நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பிருக்க உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பிருப்பதில்லை என்றனர்" அதற்கு இயேசு அவர்களை நோக்கி "மணமகன் தங்களோடு இருக்கும் வரை மண விருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டு பிரிய வேண்டிய காலம் வரும். அப்பொழுது அவர்கள் நோன்பிருப்பார்கள்" என்றார்.

சதுசேயர், பரிசேயர்களுக்கு, நாங்கள் நன்றி கூற வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் அவர்கள் அவர் மீதிருந்த பொறாமையினாலும் காழ்ப்புணர்ச்சியினாலும் அவரைக் கேள்விகளால் குடைந்து எடுத்தனர். ஆனால் அதற்கான பதில்கள் "ஞானத்தைத் தேடுபவனுக்கு விருந்தாய் அமைந்தன" இங்கே இறைமகன் என்ன கூறுகின்றார்? பரலோகத்தில் நோன்போ, ஒறுத்தலோ, கிடையாதாம். அங்கே மோட்ச நாயகனோடு இருக்கலாம். ஆக இப்பொழுது இறைமகனோடு சீடர்கள் இருப்பதால் அவர்கள் மகிமையோடு இருக்கின்றார்கள். மகிமையில் திளைக்கும்போது எப்படிச் சீடர்களால் நோன்பிருக்க முடியும்?

ஆனால் இறை ஐக்கியத்தை இழந்திருப்பவர்கள் இறைவனின் மகிமையை, உறவை இழக்கின்றபோது தான் இழந்த உறவைப் புதுப்பிக்க நோன்பு இருப்பது அவசியமாகின்றது.

*சகோ. விமல், செ.தா.*

## வாசகர் திருமுகம்

### யாரிடம் போய் முறையிடுவது?

நான் ஒரு ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர். எனது பிள்ளைகளும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்வி கற்கின்றனர். இங்கு ஏராளமான பெண் பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. வீதிகளில் உள்ள பல சந்திகளில் காலை, மாலை நேரங்களில் இளைஞர்கள் கூடி நிற்பதுடன் மதில்களில் மேல் ஏறியிருந்து, வியாபாரமே நடக்காத கடைகளைத் திறந்து வைத்து அதற்குள் இருந்து விரசமான பாடல்களை ஒலிக்கச் செய்து மாணவிகளுக்கு இடைஞ்சல் கொடுகின்றனர்.

பாடசாலை நேரங்களில் மோட்டார் சைக்கிள்களில் வந்து பெண் பிள்ளைகள் மீது அங்க சேட்டை செய்வதும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்வதுமாக உள்ளனர்.

பாடசாலையை அண்டியும் பாதையோரங்களிலும், ஒட்டோக்களை நிறுத்தி வைத்து அதற்குள் இருந்து கொண்டு அசிங்கமான அநாகரிகமான வார்த்தைகளைப் பாவிப்பதும் பாடல்கள் பாடுவதுமாகவுள்ளனர்.

கட்டுப்பாடுகள் குறைந்தமையால் இவர்கள் இவ்வாறு அட்டகாசம் புரிகின்றனர்.

நீதிமன்றங்களாவது இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பது என் போன்ற பல பெற்றோரின் பணிவான கோரிக்கையாகும். நாலாயிரம் நல்ல மரங்கள் வளர வேண்டுமாயின் நாலு கெட்ட மரங்களைத் தறிப்பது பாவமல்ல.

*உமாமகேஸ்வரி.*

### கை கூடுமா? "ஓய்வூதியர்களுக்கான வீடமைப்புத் திட்டம்"

அர்ப்பணிப்பான சேவையோடு அரச சேவையை நிறைவு செய்தவர்கள் பலர். அரச நிதியை எள்ளளவும் சூறையாடாமல், தேசிய நலன் கருதி யாவுமே சிவன் சொத்து என்று வாழ்ந்தவர்கள் மேலும் பலர். இன, மத, மொழி, நிறவேற்றுமைகளைக் கருதாது கடமையாற்றிய பெருந்தகைகள் மேலும் பலர். இடப் பெயர்வுகள் வந்த போதும், இரவு பகல் பாராது, 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதைத் தாரக மந்திரமாக உச்சரித்து மனிதருள்ளும் தேவராக வாழ்ந்தவர்கள் இன்னும் பலர்.

இந்த நிலையில், நாற்பது வருடங்கள் (1972 - 2012) அரசசேவையில் கடமையாற்றிய போதும் வீடு ஒன்றைச் சொந்தமாகக் கட்டிக் கொள்ளவோ, வாங்கவோ முடியாத நிலையில் வாடகை வீட்டிலே வாழ்ந்து வருகின்றேன்.

என் போன்றவர்கள் இந்த நாட்டிலே வாழ்ந்து நிறைவு செய்வதற்காக, அரச ஓய்வூதியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆவன புரியும் வண்ணம் பணிவோடு கேட்டுக் கொள் கின்றேன். நல்லூர் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய சங்கம் இதனை முன்னெடுப்பதாக.

*கே. சிவஞானராஜா, கொக்குவில்.*

## அருளாசிச் செய்தி



*வைரவர்அடியார்களுக்கு,*

புங்குடுதீவுகாட்டுப்புலம் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அரசடி ஸ்ரீ ஆதிவைரவர்சுவாமிக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. சைவநெறி தழைத்தோங்கி நிற்கின்ற புங்குடுதீவு காட்டுப் புலம்பதியில் காவல் தெய்வமாகிய வைரவப் பெருமான் ஆதிவைரவராக எழுந்தருளியிருந்து பக்தர்குறைகளை நீக்கி காத்தருளி வருகின்றார். தடைகளை எல்லாம் தகர்தெறியும் தயாபதியாகிய வைரவப் பெருமானை வணங்குவதன் மூலம் எங்கள் இடையூறுகள் எல்லாம் நீங்கப் பெறுகின்றன. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகம் இன்று இத்தலத்தில் நடைபெறுவது இத்தலத்திற்கும், ஊர்மக்களுக்கும் புனிதத்தை தருவதாகும். கும்பாபிஷேக கிரியை நிகழ்வுகளை கண்டும், மந்திர மங்கள ஒலிகளை கேட்டும் தரிசித்தல் கோடி புண்ணியத்தை தருவதாகும். மனித வாழ்வை மேல்நிலை அடையச் செய்வது ஆலய வழிபாடாகும். மன ஒருமைப்பாட்டோடு வழிபடுவதற்கு தகுந்த இடமும் அதுவே. இதனாலேயே எம் முன்னோர்கள் ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''எனவும் ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''எனவும் கூறியுள்ளனர். இதனை நன்குணர்ந்து அமைக்கப்பட்ட இவ் ஆலயத்தினுடைய கும்பாபிஷேகத்தில் தம்மை அர்ப்பணித்து பணியாற்றிய ஆலய பரிபாலனசபையினரையும் ஊர்மக்களையும் இறைவன் ஆசிர்வதிப்பாராக! கும்பாபிஷேகத்தை சிறப்பித்து நூல் வெளியிடும் நூலாசிரியரையும் வாழ்த்துகின்றோம்.

இக்கும்பாபிஷேகத்தை தரிசித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக!

*''என்றும் வேண்டும் இன்ப அன்பு''*

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

## நல்லாசிகள் பெறுவோமாக



பேரருளும் பெருவளமும் மிக்கதாய், ஊர்ச்சிறப்பும், உயர் வரலாறும் கொண்ட ஞான பூமியாய் விளங்கும் புங்குடுதீவில் காட்டுப்புலம்பதி அருள்மிகு ஞானவைரவப் பெருமானின் பிரதிஷ்ட மஹாகும்பாபிஷேகம் நடைபெற பரம்பொருளின் திருவருள் கைகூடியுள்ளது. இணையில்லா இந்து மரபில் ஒற்றுமையின் உயர்வை உணர்த்தும் பண்பாய் இவ்வூர் அடியவர்களும் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் மெய்யன்பர்களுமாய் ஒன்று கூடிய தெய்வீகத் திருப்பணியின் வெளிப்பாடாய் பொலிவுறும் இவ்வாலயம் மஹாகும்பாபிஷேகம் காண இருப்பது இறைசக்தியின் அருட்பிரவாகமாகும்.

உலகாளும் பரம்பொருளாம் சிவபெருமானின் திரு அம்சமாய் சிவன் காளி ஐக்கியத்தின் வெளிப்பாடாய் எட்டு மடங்கு அதிகரித்த சக்தியாய் அவதாரம் செய்தவர்தான் வைரவப் பெருமான் என்று இந்து புராணங்கள் வைரவரின் வரலாற்றை செப்பி நிற்கின்றன. அவரது அபரிமிதமான சக்தியின் வெளிப்பாடாகவே அவரை காவல் தெய்வமாக சிவபிரான் நியமித்தார் எனவும் சொல்லப்படுகிறது. அத்தகைய தெய்வமாம் வைரவப் பெருமான் ஊரையும் , உறவுகளையும் காத்தருளும் அற்புத இறைவனாய் புங்குடுதீவில் எழுந்தருளி இருக்கிறார் எனும்போது இவ்வூர் மண் பெற்ற பெரும் பாக்கியமாகும். சூல வைரவர் என்றும் அழைக்கப்படும் இந்தப் பெருமான் அஷ்டதிக்கிலிருந்தும் வரும் எந்தவித ஆபத்துக்களையும் களைந்து அனுக்கிரகித்து அனைவரையும் காக்கும் கண்கண்ட கடவுளாய் திருவுருவம் தாங்கி இக்கோயிலில் குடியிருந்து குறை தீர்க்கும் பெருமானாய் அருள் பூக்கும் இந்தக் குடமுழுக்கு விழா சிறப்புற அனைத்து அடியார்களும் ஒத்துழைத்து எம்பெருமான் , எமைக்காக்கும் ஞான வைரவப் பெருமானின் அருள் பெற்று இஷ்டசித்திகள் பெற்று வாழ எனது நல்லாசிகள்.

*'அன்பே சிவம்'*

மந்திரகிரியாசுரபி சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் J.P.
*(அகில இலங்கை சமாதான நீதவான்)*

## அனைவருக்கும் திருவருள் கிடைக்கட்டும்



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் காட்டுப்புலம்பதிஅரசடி ஸ்ரீ ஆதி பைரவர்ஆலயம் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறத் திருவருள்மிகு வைரவப் பெருமான் அனுக்கிரகிப்பாராக.

கும்பாபிஷேகம் என்பது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தெய்வ விக்கிரகங்களிலே ஆசாரியர்மந்திரம், கிரியை பாவனை மூலம் திருவருள் சக்தியை எழுந்தருளப் பண்ணுவதாகும். தொடச்சியான பல கிரியைகளை தன்னகத்தே கொண்டு மஹாகும்பாபிஷேகம், மண்டல பூர்த்தி வரைக்கும் நீண்டு செல்கிறது. சிற்பாசாரியன் கைவண்ணத்தால் சிறப்புற சிற்பாசாஸ்திர விதியை அனுசரித்து பக்தர்களின் பெரும்பொருட் செலவில் திருப்பணி நிறைவெய்திய பின் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தில் அருள் பாலித்துவரும் ஸ்ரீ வைரவப் பெருமானது மஹாகும்பாபிஷேகம் பக்தர்களின் பெரும்முயற்சியால் நிறைவெய்தியிருப்பது பெரும்பாக்கியம். இதில் பெரும் முயற்சி செய்து வரும் ஸ்தானிகர் வேணுகோபாலசர்மா உட்பட அனைவரும் இக்கும்பாபிஷேகத்தின் பயனாக சிறப்புற வாழ்வார்களாக.

- சிவஸ்ரீ தாணு.மகாதேவக்குருக்கள்

## ஆசியுரை




புங்குடுதீவு காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதி வைரவப் பெருமானுக்கு பஞ்ச குண்ட பக்ஷ நூதனப்பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் பங்குனித்திங்கள் 5 ஆம் நாள் (19.03.2014) புதன்கிழமை நடைபெறவுள்ளதையிட்டுமிக்க மகிழ்ச்சியடைகின்றோம். ஆணவத்தையழித்து இறை தத்துவத்தை உணர்த்தி தேவர்களைத் தீயசக்தியிலிருந்து காத்தருளிய வைரவப் பெருமானின் திருவருட் பெருமைகளைப் புராணங்கள் சிறப்பாகப் போற்றுகின்றன. தீயவைகளிலிருந்து அடியவர்களை பாதுகாத்தருளும் கண்கண்ட தெய்வம் வைரவப்பெருமான். இக் காரணத்தினாலேயே சிவபூமி என போற்றப்படும் எமது நாட்டில் கிராமம் தோறும் வைரவப் பெருமானுக்கு கோயில்கள் எழுப்பி மக்கள் பக்தி உணர்வுடன் வழிபாடியற்றி வருகின்றனர்.

அத்தகைய ஆலயங்களில் ஒன்றாகிய இவ்வாலயத்தில் ஆலய பரிபாலன சபையினரும் திருப்பணிச் சபையினரும் உள் ஊரிலும் வெளியூர்களிலும் வாழும் அடியவர்களும் ஒன்றிணைந்து ஆலய திருப்பணிக் கைங்கரியத்தில் ஈடுபட்டதன் பயனாய் சிற்பகலைஞர்களது உன்னதமான கலைப்படைப்பின் வெளிப்பாடாக ஆலயம் புதுப் பொலிவு பெற்று திகழ்வது அனைவரது உள்ளங்களையும் கவர்வதாக உள்ளது. சப்த தீவுகளில் ஒன்றென திகழும் புங்குடுதீவில் பெருமைக்கு அணி சேர்க்கும் வகையில் சிறந்து விளங்கும் சுந்தர விமானங்களும் ஆலய கட்டட அமைப்பும் விளங்குகின்றன.

மஹாகும்பாபிஷேகத்தின் பயனாய் தெய்வீக சாந்நித்தியம் நிறைந்துள்ள இவ்வாலயத்தில் எம் பெருமானின் நித்தியநைமித்தியங்கள் குறைவின்றி தொடர்ந்தும் நடைபெற அடியவர்கள் தொடர்ந்தும் ஆலய பரிபாலன்சபையினருக்கு உதவுவது இன்றிமையாதது ஆகும். இக் கும்பாபிஷேகம் ஆலயத்தில் நிகழும் வழிபாடுகளுக்கும் பிரார்த்தனைகளுக்கும் வழிவகுப்பதாகுக என வாழ்த்தி எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீ ஆதி வைரவப் பெருமானின் திருப்பாதங்களைப் போற்றுவோமாக!

ப.கோபாலகிருஷ்ண ஐயர், இலக்கிய கலாநிதி,
வாழ்நாள் பேராசிரியர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# அரசடி ஸ்ரீ ஆதிவைரவ

# மஹா கும்பாபிஷே

## வைரவப் பெருமானின் அருளாசி கிடைக்கட்டும்



புங்குடுதீவில் யக்ஞவிருட்சம் எனப் போற்றப்படும் அரச மரத்தை தல விருட்சமாக கொண்டு ஸ்ரீ ஆதிவைரவப் பெருமான் எம்மையெல்லாம் காத்து அருளாட்சி புரிகின்றார். எத்தனையோ வருடங்களுக்குப் பின் எவ்வளவோ இடர்களுக்குப் பின் எம்பெருமான் புதுப் பொலிவோடு காட்சி தருவது மனதுக்கு நிறைவைத் தருகின்றது. அரசடி ஸ்ரீ ஆதிவைரவர்ஆலய மஹா கும்பாபிஷேகம் பலரது சிறப்பான பங்களிப்போடு இன்று நிறைவேறியுள்ளது. இக்குடமுழுக்கு நிகழ்வினையொட்டி கும்பாபிஷேக மலர்வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். வைரவர் வழிபாடு எங்கும் பரவியிருந்தாலும் அதன் விழுது கிராமங்களிலேயே உள்ளது. எமது ஊர் மக்கள் வைரவப்பெருமான் மீது கொண்ட பக்திக்கும் பற்றுக்கும் அக்கோயிலே சான்றாக அமைகின்றது. வைரவப் பெருமானின் அருளாளும் நிர்வாக சபையினது அயரா முயற்சியினாலும் எமது ஆலயம் இன்று மிகவும் அழகான தோற்றப் பொலிவோடு கம்பீரமாக காட்சி தருகின்றது.

எமது மக்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்தாலும் அவர்களது மனங்களிலே தம் ஊர்க் கோயில்களை நினைத்த வண்ணமே உள்ளார்கள். அவர்களது எண்ணங்கள் இன்று செயலுருவம் கொண்டு எம்பிரானது கும்பாபிஷேகம் நிறைவடைந்துள்ளது. இவ் ஆலயத்திற்கு இன்னும் பல தேவைகள் உள்ளன. அவ்விடயத்திலும் அவர்கள் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் எனக் கேட்டு ஆதி வைரவர்ஆலய மஹா கும்பாபிஷேகத்துக்கு மனதாலும், வாக்காலும், உடலாலும் உதவிய உள்ளங்களுக்கு நன்றிகளைக் கூறி அனைவரும் வைரவப் பெருமானது அருளாசி பெற்று சிறப்புற்று வாழ ஆசீர்வதிக்கின்றேன்.

-பிரம்மஸ்ரீ சோ.வேணுகோபால் சர்மா, ஆலய பரம்பரைபூசகர்.

## ஆதிவைரவர் அருள்ஒளி பிரகாசிக்கட்டும்



இந்து சமுத்திரம் ஈன்றெடுத்த முத்தென மிளிரும் ஈழமணித் திருநாட்டின் கலங்கரை விளக்காகத் திகழும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சப்த தீவுகளின் நடுநாயமாக விளங்குவது புங்குடுதீவாகும். இன்பத்தமிழ் மொழியும் பண்பாடும் கலாசார விழுமியங்களும் கொண்டு விளங்கும் இத்தீவில் ஆன்மீகவாதிகள், இலக்கிய சிந்தனையாளர்கள், தமிழ் அறிஞர்கள், சைவச்சான்றோர்கள், தர்மசீலர்கள் எனப் பிறந்து வாழ்ந்த இச்சிவபூமியில் காட்டுப்புலம் எனும் பதியில் ஆதி வைரவப் பெருமானை ஆதிக்குடிமக்கள் போற்றி பூசித்து வந்துள்ளார்கள். போர்த்துக்கேயர் இலங்கையை கைப்பற்றிய போது சைவ ஆலயங்களுக்கும் வழிபாடுகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட வைரவ வழிபாடு மேலோங்கிக் காணப்பட்டது.

இவ்வாலய வைரவர் வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதற்கு ஆலயத்துக்கான நாமமும் ஆலயத்தின் தலவிருட்சமான அரசமரத்தின் அடிச்சுற்றுவட்டம் 35அடிக்கு மேலாகவும் கிளைகள் அகன்று பரந்து இருந்தமையும் சான்றாகும். அந்தக் காலகட்டத்தில் சித்தவைத்தியத்தில் பெயர் பெற்றிருந்த வைரவன் என்பவரின் வருகையைத் தொடர்ந்து காட்டுப்புலத்தில் அரசமரம் இருந்த பகுதியில் வைரவர் வழிபாடு மேம்பாடடைந்து அப்பொழுது வைரவருக்கான படையல்கள், வேள்விகள், குளிர்த்தி என ஆரம்பிக்கப்பட்ட வணக்கம் பின் குடிசைக் கோயிலாகவும் பின் சிற்றாலயமாகவும் கட்டப்பட்டு விஷேட உற்சவங்கள் நடைபெற்று வந்தன. 1991ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் ஆலயம் பாதிக்கப்பட்டமையால் இவ்வாலயத்தை மீளப்புனரமைப்புச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பயனாக 2011ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பரிபாலனசபையின் பெருமுயற்சியினால் புலம்பெயர்ந்த எமது உறவுகளினதும் உள்ளூர் அன்பர்களினதும் உதவிகளினால் வைரவருக்கு அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக வைரவரும் மற்றும் பிள்ளையார், முருகன் ஆலயங்களும் அமைக்கப்பட்டு தெய்வங்கள் வைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுவதோடு உற்சவ மூர்த்தியான வைரவசுவாமி சிவன் உமையம்மை, மாணிக்கவாசகர், சண்டேஸ்வரர் ஆகிய சுவாமிகளும் வைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுவதோடு, ஆலயத்துக்குப் புதிதாக அமைக்கப்பட்ட அழகிய வசந்தமண்டபம், சுந்தரமணிக்கோபுரம் என்பவற்றுக்கும் இன்று கும்பாபிஷேகப் பெருவிழா மிகவும் உணர்வுபூர்வமாகவும் பக்திநிலையிலும் நடைபெறுகின்றது.


இக்காண்பதற்கரிய கும்பாபிஷேக விழாவைத் தரிசிக்கும் அடியார்கள் எல்லோருக்கும் ஆதிவைரவரின் திருவருள் என்றும் குறைவின்றி நிறைவாகக் கிடைக்கப்பெற்று நிறைவான செல்வங்கள் பொருந்த இனிதே மண்ணில் நல்ல வண்ணம் வாழ எம்பெருமானின் பாதாரவிந்தங்களைத் தொழுது நிற்கின்றேன்.

நா.சுந்தரராசா,செயலாளர்,
ஆலய பரிபாலனசபை.

(39615)(2.3.6)

## ஊர் மக்களின் காவல்தெ

இந்துக்களின் கிராமிய தெய்வ வழிபாட்டில் வைரவர் வழி
தொன்மை வாய்ந்தது. காவல் தெய்வமாகப் போற்றப்படும்



ஊர்தோறும் கோயில் கொண்டு அடிய
பாலிக்கின்றார். புங்குடுதீவு 2ஆம் வட்டார
அரசடி ஸ்ரீ ஆதிவைர வப்பெரு
தெய்வமாக விளங்கு வதோடு பஞ்சகு
பிரதிஷ்டா மஹா கும்பாபி ஷேக நிகழ்வு இ
அவ்வூர் மக்களின் சுபீட் சத்திற்கும் அருள்
ஆதாரமாக அமைகின்றது.

இவ்வாறு அருள்பாலித்து வரும்
பெருமானின் துணையோடும், அருளோடும் இன்று பக்
எம்பெருமானுக்கு எடுக்கும் இம் மஹாகும்பாபிஷேகப் பெ
அனைத்தும் சிறப்புற அமையவும், அதை ஒட்டி வெளியிடப்
மலரும் இனிதே மலர்ந்திடவும் எனது மனமார்ந்த வாழ்
வித்துக்கொள்கின்றேன்.

சுந்தரம்
அரச அதிபர்/ மாவட்டச் செயலர், யாழ்ப்



## காட்டுப்புலம் அமர்
## குடநீராடி அருள்

காட்டுப்புலம்பதி அரசடி ஆதிவைரவரே கு
காவல் மூர்த்தியே சப்ததீவுகளின் மூத்த நா
குடநீராடி அருள்வாய்
ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ
அம்சமாய் எழுந்தேஅரசடியில் உறைபவரே குடநீராடி அருள்
கேட்ட வரமருளும் கிராமிய தெய்வமே குடநீராடி அருள்வா
கேடெல்லாம் அகல புங்கை நகர் வளம்பெற குடநீராடி அரு
நாட்டமுடன் நாய்மீதமர்ந்தருளும் நாயகரே கு
நாடும் வரமமெலாம் தரும் காட்டுப்புலம் அமர்

மதுரகவி காரை.எம்.பி
(பணிப்பாளர், சைத்தமிழ் பல்



## எல்லோரும் எ
## இறையருளை வேண்


சிவபூமி எனதிருமூலரால் சிறப்பிக்க
திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் த
நகரின் தென்மேற்கே உள்ள சப்ததீவுகளில்
எனப் போற்றப்படுவது புங்குடுதீவாகும். பு
பகுதியில் 2 ஆம் வட்டாரத்தில் காட்டு
இடத்தில் இற்றைக்கு இரண்டரை நூற்றாண்டுகளுக்கு
பெற்றதே திருமரம் எனத் திகழும் அரசமரத்தை தலவிருட்சமா
பாலிக்கும் அரசடி ஸ்ரீ ஆதிவைரவர் ஆலயமாகும்.

தெய்வ மூர்த்தங்களிலே கிராமப் பண்பாட்டுடனும்
வியலுடனும் இணைந்திருக்கும் தெய்வம் வைரவப் பெ
பெருமான் மீதான பக்தியும் பற்றும் எல்லா இடங்களிலும்
கிராமப் புறங்களில் அது விழுதெறிந்து ஆழ வேரூன்றி வி
இயற்கையிலேயே இறைவனைக் கண்டவர்கள் இந்துக்கள். அ
அரசு, வேம்பு, புளி, இலுப்பை, மருது போன்ற விருட்சங்
சூலத்தை நாட்டி ஏழை, எளியோருக்கும் எளிய முறையிலே
வைரவர்வழிபாடு அமைந்துள்ளது. அந்தவகையில் அரசம
கொட்டகையில் உருவாக்கம் பெற்ற ஆதிவைரவப் பெருமான்
இலட்சம் ரூபா செலவில் பாரியகட்டட வசதிகளுடன் புது
விளங்குவது எம்பெருமானின் இறை சக்தியை எடுத்தி
பணியில் இணைந்த ஆலய பரிபாலன சபையினர் திருப்பணிக
நல்கியோர், திருக்குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழாவைத்
சிவாச்சாரியப் பெருமக்கள் அனைவரையும் வாழ்த்தி அற்புதங்
ஆதிவைரவரின் பொற்பாதங்களைப் பணிந்து இன்பமே
வாழவும் இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

*சுபமங்கலம்*

*''காலன் மார்பிற் கான்மலர்நீட்டிய*
*சீலன் கோயிற் திறமிக்கதோள்களைச்*
*சூலமேற்றுஞ் சூழல் விழிச் சேத்திர*
*பாலன் பொற்பாதம் பற்றிப் பணிவோம்'' - திருவாவடுது*

சோ.பத்மருபன், கிராமஅலுவலர் J/31, J/25



# புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் – காட்டுப்புலம்பதி
# வைரவர் ஆலயம் பஞ்சகுண்டபக்ஷ நூதன பிரதிஷ்டா
# ஷேகம் – 19.03.2014

## காவல்தெய்வம்

டில் வைரவர் வழி பாடானது மிகவும்
ப் போற்றப்படும் வைரவப்பெருமான்
கொண்டு அடியவர்களுக்கு அருள்
தீவு 2ஆம் வட்டாரம் காட்டுப்புலம்பதி
ப்பெரு... ...வ்வூர் மக்களின் குல
வதோடு பஞ்சகுண்டபக்ஷ நூதன
பி ஷேக நிகழ்வு இன்று நடைபெறுவது
சத்திற்கும் அருள்வெளிப்பாட்டிற்கும்
து.
லித்து வரும் ஸ்ரீஆதி வைரவப்
டும் இன்று பக்தர்கள் கூடி நின்று
ம்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வுகள்
ட்டி வெளியிடப்படும் கும்பாபிஷேக
மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரி

சுந்தரம் அருமைநாயகம்,
செயலர், யாழ்ப்பாண மாவட்டம்.

## லம் அமர்ந்தவரே
## டி அருள்வாய்

ஆதிவைரவரே குடநீராடி அருள்வாய்
வுகளின் மூத்த நாயகரே

வர் ஆடாதாரோவென்ற ஆதிசிவனார்
ர குடநீராடி அருள்வாய்
டநீராடி அருள்வாய்
ற குடநீராடி அருள்வாய்
ரே கு... ...ருள்வாய்
அமர்... ...குடநீராடி அருள்வாய்
கவி காரை.எம்.பி.அருளானந்தன்
சைத்தமிழ் பண்பாட்டுக்கழகம்)

## லோரும் வாழ
## ள வேண்டுவோம்

லரால் சிறப்பிக்கப்படும் ஈழமணித்
சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்.
ள சப்ததீவுகளில் "பொன்கொடுதீவு"
ங்குடுதீவாகும். புங்குடுதீவின் மையப்
டாரத்தில் காட்டுப்புலம் என்கின்ற
றாண்டுகளுக்கு முன்பாக தோற்றம்
தை தலவிருட்சமாகக் கொண்டு அருள்
மாகும்.
ண்பாட்டுடனும் மண்சார்ந்த வாழ்
ம் வைரவப் பெருமான். வைரவப்
லா இடங்களிலும் பரவியிருந்தாலும்
ழ வேரூன்றி விருட்சமாகி நிற்கிறது.
கள் இந்துக்கள். அந்த வகையில் ஆல்,
பான்ற விருட்சங்களின் கீழே வைரவ
ளிய முறையிலே வழிபடக்கூடியவாறு
வகையில் அரசமரத்தின் கீழே ஓலைக்
வரவப பெருமான் ஆலயம் இன்று பல
வசதிகளுடன், புதுப்பொலிவு பெற்று
த்தியை எடுத்தியம்புகின்றது. இறை
யினர் திருப்பணிகள் சிறப்புற நிதியுதவி
சாந்தி விழாவைத் திறம்பட நடத்திய
வாழ்த்தி அற்புதங்கள் நிறைந்த அரசடி
ரிந்து இன்பமே சூழவும் எல்லோரும்
றன்.
கலம்

" - திருவாவடுதுறைப் புராணம்
J/31, J/25

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



புங்குடுதீவு காட்டுப்புலம்பதி அரசடி ஆதி வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்த மடைகிறேன். ஆதியும் அந்தமும் இல்லாப் பரம்பொருளை வைரவப் பெருமானாக வழிபாடு செய்தனர்கள் எம் மூதாதையர். சைவச் சான்றோர் வாழ்ந்த புண்ணிய பூமி புங்குடுதீவு. எனக்கு அறிவுதந்த நல்லாசான்கள் அமரர் க.சிவராமலிங்கம், ஆசிரியர், வித்துவான் ஆறுமுகம் போன்ற பெருமக்கள் இவ்வூர் மகிமையை அடிக்கடி சொல்லிப் பெருமைப்படுவார்கள். சைவ மேன்மையைக்காத்த புங்குடுதீவு மண்ணில் ஆதிக்கோயிலாக விளங்கும் வைரவப் பெருமானின் ஆலயத்தை மிகக் கவனமாகப் பாதுகாத்து வரும் பக்தர்கள் போற்றுதலுக்குரியவர்கள் காலத்துக்குக் காலம் திருப்பணிகளை நிறைவேற்றி செம்மையாகப் பரிபாலித்து வருவது அறிந்து வாழ்த்துகிறேன். போரின் அனர்த்தங்களால் புங்குடுதீவு மக்கள் பலர் புலம்பெயர்ந்து பலவூர்களிலும், பல நாடுகளிலும் குடிபெயர்ந்து வாழ்ந்தாலும் தங்கள் கிராமத்துக் கோயில்கள் மீதும், பாடசாலைகள் மீதும் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தை யான் நன்கு அறிவேன். இத்திருக்கோயில் சிறக்கத் திருப்பணியில் ஈடுபட்ட அன்பர்களுக்கும் மலர் வெளி யீடு செய்து ஆவணப்படுத்தும் நா.சுந்தரராசா (கிராம அலுவலர்) அவர்களுக்கும் எனது உள்ளம் நிறைந்த ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் கூறி நிறைவு செய்கிறேன்.

கலாநிதி. ஆறுதிருமுகன், தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## அருள் நிறைவாகக் கிடைக்கட்டும்



புங்குடுதீவு காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன். புங்குடுதீவின் மையப்பகுதியில் அமைந்துள்ளதும் புங்குடுதீவின் பல பாகங்களில் அமைந்துள்ள பல வைரவ ஆலயங்களுக்கு மூத்ததும் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்டதும் இதன் சிறப்புக்கு முக்கிய காரணமாகும். அத்துடன் இதன் அருகில் அமைந்துள்ள அரசமரம் இவ் ஆலயத்தின் நீண்ட கால வரலாற்றுக்கு ஆதாரமாக அமைந்துள்ளது. இவ்வாலயத்தைப்பற்றிய வரலாறுகள் பல்வேறு வரலாற்றுக் கதைகளில் இடம்பிடிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாலயத்தை அண்டி மக்கள் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையில் உலகம் முழுவதும் சிதறிக்கிடக்கின்ற போதும் வைரவப் பெருமானின் அருளால் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சீரும் சிறப்புமாக வாழ்கின்றார் கள். தற்போது உள்ளூரில் வாழ்வோரும் வெளிநாடுகளில் வாழ்வோரும் இணைந்து இவ்வாலயத்தின் திருப்பணி வேலைகளை ஆரம்பித்து மகாகும்பாபிஷேகத்தை நடத்துதல் மகிழ்வுக்குரிய செய்தியாகும். இவ்வாறு வரலாற்று சிறப்புமிக்க இவ் ஆலயத்தின் கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவுற்று வைரவப் பெருமானின் ஆசி நிறைவாக கிடைக்கப்பெற்று எமது தீவகமும் அதன்பால் பற்றுக் கொண்ட அனைத்து மக்களும் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

இ.இளங்கோவன் ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்.

## ஸ்ரீ ஆதி வைரவப்பெருமான் அருள் வழங்குவாராக



ஈழ மணித்திருநாட்டின் வடபால் யாழ் இசைத்து பரிசு பெற்ற யாழ்ப்பாணத்தின் அருகே உள்ள சப்த தீவகங்களிலே பொன் கொழிக்கும் தீவு புங்குடுதீவு, அங்கே அழகு தமிழ் பேசும் இன்னிசைவிளங்க, கலையாத கல்வியும் குறையாத செல்வமும் குவிந்து கிடக்க மாந்தர் யாவரும் மானிடம் தழைக்க வாழ்வர். ஆன்மீகம் தழைக்க ஆலயம் பல அமைத்து வாழ்வதில் வழிபாடு இயற்றலில் தாழ்விலா மக்கள் கூட்டம் மகிழ்வுடன் வாழும் இத் திருப்பதியின் கண்ணே நடுநாயகமாய் பல நூற்றாண்டு பழம் பெரும் பதியாய் விளங்குவது, புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தில் காட்டுப்புலம் பதியில் அரசடி விருட்சத்தில் ஸ்ரீ ஆதி வைரவப்பெருமானாக விளங்கும் ஆலயம் ஆகும். குறுகிய காலத்தில் பல சித்திர வடிவ அமைப்புக்கள் கொண்ட எல்லா மூர்த்தி தலம் விருட்சத்துடன் விளங்கும் ஆலயமாக அமைத்து இவ்வாயலத் திற்கு கும்பாபிஷேகம் செய்ய அயராது பாடுபட்டு பல இடங்களில் சென்ற திருப் பணி வேலைகளை சிறப்பாக செய்யவேண்டும் என்று பண உதவியாகவும் பொருள் உதவியாகவும் வேண்டி இந்த ஆலயத்தை திறம்பட கட்டியமைத்த நிர்வாக சபையினருக்கும் ஆலய புனரமைப்பு திறம்பட நடைபெற வேண்டும் என்று எல்லா விதமான உதவிகளையும் செய்த உள்ளூர், வெளியூர் மக்களுக்கும் அனைவருக்கும் காட்டுப்புலம் பகுதியின் அரசடியில் ஆட்சிபுரியும் ஸ்ரீ ஆதி வைரவப்பெருமானின் அருள் ஆசிகள் கிடைக்கப்பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றேன்.

வவுனியா வேப்பங்குளம் அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
பூசகரும் நிர்வாகியுமான அறநெறிச்செல்வி கு. ஜெயராணி (சாமிஅம்மா)

## கும்பாபிஷேகம் சிறக்கட்டும்



புங்குடுதீவு 2ஆம் வட்டாரம் காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதிவைரவக் கடவுளுக்கு மஹாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்திவிழா இன்று மிகவும் சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்திருப்பதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். சிவமூர்த்தங்களுள் வைரவப் பெருமானுக்குத் தனிப்பெருஞ்சிறப்புண்டு. யாழ்ப்பாண மாவட்டத்தில் வைரவர் வழிபாடு மிகவும் பிரசித்தி பெற்றுவிளங்குவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சிறியகோயிலாக இருந்த புங்குடுதீவு அரசடி ஸ்ரீ ஆதிவைரவர் ஆலயம் இன்று பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சிதருவது எம் எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இத்தெய்வீகத்திருப்பணிக்கு உள்ளூர் மக்கள் மட்டுமன்றி புலம்பெயர் நாடுகளில் வாழும் அன்பர்களும் நிதி நல்கியிருப்பது திருவருட் செயலாகவே எண்ணுகின்றேன்.

இத்திருப்பணிகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் ஆலய பரிபாலனசபையினரையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இந்தப் பெருஞ்சாந்தி விழாவைத் தொடர்ந்து எங்கள் நாட்டில் நிரந்தரமான சாந்தியும் சமாதானமும் நிலவ ஸ்ரீ ஆதி வைரவக் கடவுளின் பொன்னார் திருவடிகளைப் பயபக்தியுடன் இறைஞ்சி இத்தெய்வீக பணியில் ஈடுபட்டுவரும் அனைவரையும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

பேராசிரியர், டாக்டர் மா.வேதநாதன், தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

## வரலாற்றுச் சிறப்புமிக்க வைரவர்



திருமூலரால் சிவபூமி என்றழைக்கப்பட்ட ஈழத்திருநாட்டின் வடபால் சப்ததீவுகள் விளங்குகின்றன. இச் சப்த தீவுகளின் நடுநாயகமாக இருப்பது 'புங்குடுதீவு' பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் காட்டுப்புலம் என்னும் இடத்தில் பல நூற்றாண்டுப் பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்டதாக அரசடி ஸ்ரீ ஆதி வைரவர் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்திற்கும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆலயம் என்பது இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு ஆருள் பாலிக்கும் இடமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைந்துள்ள ஆலயங்கள் அப்பிரதேச மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும், சமூகம், கலைகள் சம்பந்தமான வாழ்வியல் வளர்ச்சிக்கும் தளமாக அமைந்துள்ளன. அவ்வகையில் ஆலயங்களின் வரலாற்றிலும் விருத்தியிலும் அப்பிரதேச மக்களின் வரலாறும் விருத்தியும் தங்கியிருந்ததுடன், அவற்றை வெளிக்காட்டும் இடமாகவும் விளங்கின, விளங்குகின்றன. இத்தகைய ஆலயங்களை சிறப்பாக புனராவர்த்தனம் செய்து கும்பாபிஷேகம் நடத்திப் பராமரித்தல் அவசியமானதாகும்.

அந்தவகையில் புங்குடுதீவு, காட்டுப்புலம் அரசடி ஸ்ரீ ஆதி வைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடத்தவுள்ள ஆச்சாரிய பெருமக்களுக்கும், இவ் அரிய பணியைச் செம்மையாக ஒழுங்கமைத்த ஆலய பரிபாலான சபையினருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

இவ்வுலகில் எல்லோரும் துன்பங்கள் நீங்கி இன்பமாக வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ ஆதி வைரவப்பெருமான் அருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி நாவுக்கரசன், பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
இல.248, 1/1, காலி வீதி, கொழும்பு - 04.


## கும்பாபிஷேகம் சிறப்புற உளமார்ந்த ஆசிகள்



*"திருக்கோவிலில்லாததிருவிலூரும்*
*திருவெண்ணீறணியாததிருவிலூரும்*
*அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே"*

என அப்பர்சுவாமிகள் ஊருக்குரிய இலக்கணத்திலே ஆலயத்தின் முக்கியத்துவத்தை மிகவும் சிறப்பாகக் கூறியுள்ளார். சப்ததீவுகளில் ஒன்றான புங்குடுதீவின் மத்திய பகுதியான 2 ஆம் வட்டாரத்தில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதிவைரவர்ஆலயத்தின் தோற்றமானது 250 ஆண்டுகள் பழமை வாய்ந்ததும் அருட்சக்தி வாய்ந்ததுமாகும். கடந்த காலங்களில் மிகவும் மக்கள் செறிவு நிறைந்த இடமாக விளங்கிய இப்பிரதேசம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் 2 தசாப்த காலமாக களையிழந்து காணப்பட்ட நிலையிலே இன்று அவ்வூர்வாழ் மக்களின் அயராத உழைப்பினாலே புதுப்பொலிவு பெற்று மஹாகும்பாபிஷேகம் காணவிளைகின்றமையானது மக்கள் மத்தியில் உள்ள சைவசமய உணர்வையும் தமது வைரவப் பெருமானின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றையும் நம்பிக்கையையும் காட்டுகின்றது என்றே கூறலாம். இறைவன் மீது பற்றுவைத்து நாம் இறைதொண்டில் பற்றுக் கொள்ளாவிடில் பௌதீக இயற்கைக் குணங்களிலிருந்து விடுபட முடியாது. நாம் இந்த உடலல்ல என்று உணர்வதே ஆன்மீகத்தின் முதல்படியாகும். பக்தி மயமான இவ்வாறான இறை தொண்டின் மூலமே நாம் பற்றற்றவர்களாக மாற முடியும். சைவசமய உணர்வும் இறைபக்தியும் நிறைந்த புங்குடுதீவு மக்களின் வாழ்வோடு மிகவும் பின்னிப்பிணைந்து மக்களுக்கு நல்வழிகாட்டும் வைரவப் பெருமானின் கும்பாபிஷேகம் சிறப்புற அமைய வாழ்த்தி ஆசி கூறுவதில் பெரும் மகிழ்வடைகின்றேன். பெரும் சாந்தி எனப் பெயர்பெறும் கும்பாபிஷேகம் பற்றி திருஞானசம்பந்தர்சுவாமிகள் பூம்பாவைத் திருப்பதிகத்தில் கூறியதாவது. கும்பாபிஷேகம் செய்தல், செய்வித்தல், துணைபுரிதல், கண்டுகளித்தல் ஆகியன மிக்க சிவபுண்ணியத்தை எமக்கு ஈட்டித்தருவதோடு கும்பாபிஷேகத்தைச் செய்பவர், செய்விப்பவர், காண்பவர்இருமை இன்பங்களையும் எய்தி இன்புறுவர் எனக் கூறியுள்ளார். எனவே இத்தகைய சிறப்புடைய மகாகும்பாபிஷேகம் சிறப்புப் பெறவும் அதனையொட்டி வெளியிடப்படவுள்ள சிறப்புமலர் சிறப்புற அமையவும் எனது உளமார்ந்த ஆசிகளைக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருமதி மஞ்சுளாதேவி-சதீஷன், பிரதேசசெயலர், தீவுகள் தெற்கு, வேலணை.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.



**இடபம்**: எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனபுத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**மிதுனம்**:சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.



**கடகம்**: சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி உண்டாகும்.



**சிங்கம்**: முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்க முடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**கன்னி**: கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். சிறுசிறு அவமானங்கள் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.



**துலாம்**: வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். அரசு காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் வரக்கூடும்.



**விருச்சிகம்**: மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆடம்பரச்செலவுகளைக் குறைப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.



**தனுசு**: சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குலதெய்வப் பிராத்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.



**மகரம்**: அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். ஆடம்பரச் செலவு களைக் குறைப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**கும்பம்**: எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து செல்லும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் வரும். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம்.



**மீனம்**: உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்புக் கிட்டும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிடைக்கும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

## நாளை

**பங்குனி-06 வியாழக்கிழமை | 20.03.2014**

திதி: சதுர்த்தி மு.இ.11.07 வரை
நட்சத்திரம்: சுவாதி
பி.ப.03.59 வரை

சுபநேரம்: 07.48-09.18 வரை
இராகுகாலம்:.01.48-03.18 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




## சொற்கள் மூலமும் அன்பின் மூலமும்

உடல் எனப்படுவது ஸ்தூல உருவத்தில் காட்சி தரும் மனமேயாகும். மனம் நுண்ணிய அடுக்குகள் கொண்டது. மனிதன் தனது உடலை முற்றும் அடக்கியாளும் சக்தி பெறும்போது, அவனுடைய மனத்தையும் அடக்கும் சக்தி பெறுவான். ஒவ்வொரு மனத்துக்கும் அதற்கென்றே விசேடமான ஓர் உடல் இருப்பது போல ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு தனிக்கருத்து இருக்கிறது.

கோபம் வரும்போது "அடிமுட்டாள், மடையன்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறோம். வருத்தமாக இருக்கும் போது "ஆ, ஐயோ" என்பன போன்றவற்றை மென்குரலில் சொல்கிறோம். இவை எல்லாம் அவ்வப்போது தோன்றி மறையும் உணர்ச்சிகள். ஆனால் அன்பு, அமைதி, சாந்தம், இன்பம், புனிதத் தன்மை போன்ற நிரந்தரமாக உள்ள உணர்ச்சிகள் வேறு இருக்கின்றன. இந்த உணர்ச்சிகளைக் குறிக்கும் சொற்கள் ஒவ்வொரு மதத்திலும் உள்ளன. சொற்களே மனிதனின் உயர் உணர்ச்சிகளின் சின்னம். கருத்துச் சொல்லைப் படைக்கிறது. அதே போலச் சொல்லானது சிந்தனை அல்லது உணர்ச்சியைப் படைக்கிறது. இந்த இடத்தில்தான் சொற்களின் உதவி நமக்குத் தேவை. இப்படிப்பட்ட சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு லட்சியத்தைக் குறிக்கும். இந்தச் சொற்கள் புனிதமானவை. வியக்கத்தக்க சக்தியுள்ளவை என்பதை நாம் அறிவோம். இவற்றைப் படிப்பதால் மட்டும் நமக்கு எவ்விதப் பயனும் ஏற்படாது. அவை பயன் அளிக்க வேண்டுமானால், அவற்றில் உயிர் ஊட்டப்பட வேண்டும். கடவுள் உணர்வு பெற்றவரும் தற்போது வாழ்ந்து கொண்டிருப்பவருமான ஒருவர் அதைப் பயன்படுத்தி இருக்க வேண்டும். அவரால் தான் இந்தச் சொற்களில் உள்ள சக்தியைத் தூண்டி விட முடியும். கிறிஸ்துவால் தூண்டி விடப்பட்ட சக்தியானது தொடர்ந்து செயலாற்றுமாறு செய்யவே அவர் கைகளை வைத்து ஆசீர்வதித்தார். இத்தகைய சக்தியை அளிக்கக் கூடியவர்தான் குரு எனப்படுவார். யேசுவைப் போன்ற மற்றப் பெரிய ஞானாசிரியர்களுக்குச் சொற்கள் அவசியமில்லை. ஆனால் இவர்களுக்கும் குறைந்த நிலையில் இருப்பவர்களுக்கே, சக்தியை வழங்குவதற்குச் சொற்கள் தேவைப்படுகின்றன.

# பொய் எழுதினால் மாட்டிக்கொள்வீர்கள் கண்டறிய புதிய மென்பொருள் உருவாக்கம்




பொய் எழுதினால் கண்டுபிடிக்கும் மென்பொருள் ஒன்று பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள எசெக்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மஸ்சிமோ போசியோ மற்றும் இத்தாலியின் டொமாசோ போர்னசியாரி ஆகிய இரு விஞ்ஞானிகள் இணைந்து பொய் எழுதினால் அதைக் கண்டுபிடிக்கும் மென்பொருளை உருவாக்கியுள்ளனர்.

ஒரு பந்தியில் ஒரு குறிப்பிட்ட வார்த்தை எத்தனை தடவை இடம்பெற்றுள்ளது என்பதைக் கண்டறியும் அதே தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, குறித்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருள் திறம்படச் செயற்படுகிறதா என்பதை அறிய இத்தாலி நீதிமன்றங் களில் சாட்சிகளும், குற்றஞ் சாட்டப்பட்டவர்களும் அளித்த வாக்குமூலங்களை படித்து சோதிக்கும்பணிநடைபெற்றுவருகின்றது. மேலும் இணையத்தளத்தில் இடம்பெறும் புத்தக விமர்ச னாங்கள், ஹோட்டல்கள் பற்றிய விவரங்களிலும் பொய்யைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுவதால் இணையத்தள புத்தக விமர்சனங்களை அதன் ஆய்வுக்கு உட்படுத்தும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 9 | 1 | 5 | 2 |
| | 8 | 1 | 6 | 2 | | | | 4 |
| | 9 | | | 1 | | | | |
| | 2 | | 9 | 6 | | 8 | | |
| | 3 | | | | | | 6 | |
| | | 5 | | 3 | 8 | | 7 | |
| | | | | 5 | | | 2 | |
| 8 | | | | 4 | 1 | 5 | 3 | |
| 2 | 5 | 6 | 8 | | | | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 9 | 6 | 2 | 7 | 1 | 5 | 8 |
| 6 | 2 | 1 | 8 | 3 | 5 | 4 | 7 | 9 |
| 7 | 5 | 8 | 4 | 1 | 9 | 2 | 3 | 6 |
| 2 | 7 | 4 | 3 | 9 | 1 | 6 | 8 | 5 |
| 8 | 1 | 3 | 7 | 5 | 6 | 9 | 2 | 4 |
| 9 | 6 | 5 | 2 | 4 | 8 | 7 | 1 | 3 |
| 5 | 9 | 7 | 1 | 6 | 3 | 8 | 4 | 2 |
| 3 | 8 | 2 | 9 | 7 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 4 | 6 | 5 | 8 | 2 | 3 | 9 | 7 |


## பொய் முறைப்பாட்டால் தபால் ஊழியர் கைது

வாக்காளர் அட்டைகள் அபகரிக்கப்பட்டன என்று பொய் முறைப் பாட்டைச்செய்த தபால் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அக்குரஸ்ஸ - வில்பிட்ட பகுதியில் தாம் வாக்காளர் அட்டைகள் விநி யோகித்துக் கொண்டிருந்த போது இனந்தெரியாத நபர்கள் 167 வாக் காளர் அட்டைகளை அபகரித்துச் சென்று விட்டனர் என்று தபால் ஊழியர் அக்குரஸ்ஸ பொலிஸில் முறைப்பாடு செய் திருந் தார். எனினும் குறித்த தபால் ஊழியரின் தாய் மனநிலை பாதிக் கப்பட்ட நிலையில் அவரே வாக்காளர் அட்டைகளை எரித் துள்ள தாக பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது. (ச)

## நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்துகிறார் ஹக்கீம்

### பொது பல சேனா குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 19
நாட்டுக்கு அவப்பெயரை ஏற் படுத்தும் வகையில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் செயற் பட்டு வருகிறார் என்று பொது பலசேனா அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.


கலகொட அத்தே ஞானசார தேரர்

அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபைக்கு வழங் கியுள்ள அறிக்கையில் இலங் கையில் மத சுதந்திரம் மறுக்கப் ப டுவதாக குறிப்பிட்டிருந்தார்.

இது அடிப்படையற்ற காட்டிக் கொடுக்கும் செயலாகும் என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரி வித்தார்.

அமைச்சர் ஹக்கீம் ஐக்கிய நாடு கள் சபைக்கு வழங்கி யுள்ள 50 பக்க அறிக்கையில், இலங்கை யில் பொதுபல சேனாவே மதப் பிரச்சினையைத் தூண்டிவிடு கிறது என்று குற்றஞ் சுமத்தி யுள்ளார்.

இது ஏற்றுக்கொள்ளத்தக்க குற்றச்சாட்டு அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.

பொதுபலசேனாவைப் பொறுத்த வரையில்ஹலாலை சிங்களவர் களிடம் நடைமுறைப்படுத்துவ தையே அது எதிர்க்கிறது.

முஸ்லிம்கள் ஹலால் பொருள் களை கொள்வனவு செய்வதை பொது பல சேனா எதிர்க்க வில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச)

# ஆட்சியாளர்கள் சாகும் வரை அதிகாரத்தில் இருக்க முயற்சி

### ஜனநாயகம் அழிந்து விட்டது என்கிறார் பொன்சேகா


சரத் பொன்சேகா

கொழும்பு,மார்ச் 19
ஆட்சியாளர்கள் சாகும் வரை யில் அதிகாரத்தில் இருக்க முயற்சிக்கின்றனர் என்று ஜன நாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குற்றம் சாட் டியுள்ளார்.

அவர்கள் சாகும் வரையில் ஆட்சியில் நீடிப்பதற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தைப் பயன்படுத்திக்கொண்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

நாட்டின் ஜனநாயகம் அழிக்கப் பட்டுள்ளது. நாட்டில் சர்வாதி கார ஆட்சியே நிலவி வரு கின்றது என்றும் அவர் குறிப் பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட் டியிட்டதால் எனக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

17 ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்து, தற்போதைய ஆட்சி யாளர் சாகும் வரை ஆட்சியில் நீடிக்க முயற்சிக் கின்றார் என்று அவர் குறிப் பிட்டார்.

நாட்டில் நீதிமன்றின் சுயாதீனத் தன்மை சீர்குலைந்துள்ளது. மனித உரிமைகள் மீறப்படு கின்றன என்று அவர் தெரிவித் தார்.

ஜெனிவா பிரச்சினைகள் ஏற் படக் காரணமானவர்களே அந்த சவால்களை தனித்து நின்று எதிர்நோக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

சர்வாதிகார ஆட்சி நிலவினால் அதனை முடிவுக்குக் கொண்டு வர உலக சமூகம் முன் வந்து செயற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## நாட்டுக்கு ஏற்படும் அழுத்தங்களுக்கு பொது பலசேனா அமைப்பே காரணம்

### சாடுகிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு,மார்ச் 19
சர்வதேச ரீதியாக இலங்கை, பிரச்சினைகளைச் சந்திப்ப தற்கு பொது பல சேனா அமைப்பே காரணம் என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய மதங்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதில் பொது பல சேனா அங்கீகரிக்கப்படாத


ரவூப் ஹக்கீம்

பொலிஸ் துறை போன்று செயற்படுகிறது.

பொது பல சேனா ஆரம்பிக் கப்பட்ட காலத்தில் இருந்தே இலங்கைக்கும் பிரச்சினைகள் ஆரம்பித்துள்ளன.

அரசுக்கு அவப்பெயரை ஏற்ப டுத்தும் வகையில் அந்த அமைப்பு ஏனைய மதத் தலங்கள் மீது நடத்தி வரும் தாக்குதல்களால் சர்வதேச ரீதியாக இலங்கை மீது அழுத் தங்கள் அதிகரித்துள்ளன- என்றார்.

இதேவேளை பள்ளிவாசல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் ஆதாரங்களுட னான அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் ஆணை யாளர் நவநீதம்பிள்ளையிடம் வழங்கியதற்காக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

## இலங்கைக்கு பல்வேறு வழிகளிலும் அழுத்தம்

### பிரதம நீதியரசர் கூறுகிறார்


மொஹான் பீரிஸ்

கொழும்பு,மார்ச் 19
இலங்கை மீது பல்வேறு வழி களில் அழுத்தங்கள் பிரயோ கிக்கப்படுகின்றன என்று பிர தம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

ஹந்தல பிரதேசத்தில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறி னார்.

நாட்டில் நல்லிணக்கம் இல்லை என்று பரப்புரை செய்ய சர்வ தேச சமூகமும் சில உள்நாட்டு சக்திகளும் முயற்சிக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

இலங்கை அளவுக்கு உலகின் வேறு எங்கும் மத மற்றும் இன நல்லிணக்கம் இல்லை என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## எமக்கு ஆதரவுகள் உள்ளவரை நாட்டை சீர்குலைக்க முடியாது

### ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு


மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,மார்ச் 19
நட்பு நாடுகளின் ஆதரவு எமது பக்கம் உள்ளவரை நாட்டைக் கட்டியெழுப்பும் எமது முன் னேற்ற நடவடிக்கைகளை எவ ராலும் சீர்குலைக்க முடியாது.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்துக்கு சென்ற ஜனாதிபதி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தபோதே இவ் வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது முன்னேற்றத் தைப்பொறாமையுடனும் குரோதத்துடனும் நோக் குபவர்களே எமக்கெ திரான சூழ்ச்சிகளிலும் விமர்சனங்களிலும் ஈடுபட்டு வருகின்ற னர்.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஜெனிவா மனித உரிமை சபையில் சீனா இலங்கைக்கு நேரடியாக ஆதரவு வழங்கவுள்ளது.

பாலங்கள், பாதைகள், போக்குவரத்துக்களை அமைக்கும்போது தான் நாடு அபிவிருத் தியடைகிறது. மக்கள் முன்னேற்றத்துக்கு அவை வழிவகுக்கின் றன. நட்பு நாடுகளின் ஆதரவு உள்ளவரை எம்மை எவரும் எதுவும் செய்துவிடமுடியாது- என்றார். (ச)

ஓராண்டு நினைவலைகள்



அமரர்
பரராஜசிங்கம்
சர்மிலன்

அன்னை மடியில்
28 . 09 . 1977

காலனின் பிடியில்
30 . 03 . 2013

ஆண்டொன்று சென்றாலும்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஆறாது எம் மனமே! கடல்கடந்து நீ
இருந்த போதும்
உம் நினைவாக வாழ்ந்தோம்—ஐயா
பாசமான உன் உருவம் நீறாகிப் போனதென்று
நினைக்க மனம் இல்லை ஐயா!
சாகாமல் இருப்ப தொன்றும் சாத்தியமில்லைதான்
ஆனால் நீ வாழாமல் பாதியில் போனதேனோ
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உன் உருவம் எந்நாளும் உயிர் வாழும் ஐயா
மண்விட்டு நீ மறைந்து விண்நோக்கிச் சென்றாலும்
எம் நெஞ்சம் விட்டு நீங்காமல் நெடுங்காலம் நிலைத்திருப்பாய்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(சி/12720)(3.6.4)
தினந்தோறும் உனக்காக ஏங்கும்.
குடும்பத்தினர்.

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
அம்பலவாணர்
கந்தையா
பாலசிங்கம்
(ஓய்வுபெற்ற ரயில் நிலைய அதிபர்)
அன்னையின் மடியில் சரண்
16.10.1925
கதிர்காமசுவாமி திருவடியில் சரண்
09.04.2012

அப்பா! நீங்கள் ஓடி மறைந்து ஆண்டுகள் இரண்டாச்சோ
பெற்று வளர்த்து எமக்குப் பெருமை எல்லாம் சேர்த்து வைத்து
உற்றவரும் உறவினரும் ஊரவரும் பாராட்ட கற்றபடி வாழக்
கைகொடுத்து நின்றவரே! எமைப் பெற்றவரும்
நாமும் உம் பிரிவுப் பெருந் துயரைத் தாங்காமல்
நீள நினைந்திருப்போம் எம் நினைவுகளில்
நீங்கள் இருந்து இறைவன் நிழலிலே வாழ்ந்திடுக.
'துவாரகா'
கதிர்காமசுவாமி கோயிலடி, காரைநகர்.

திதி: அபரபக்க
திருதியை
19.03.2014

குடும்பத்தினர்.
(45797)(3.6.4)

# பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி மட்டக்களப்பில்

மட்டக்களப்பு,மார்ச் 19
மட்டக்களப்பு மாவட்ட பாரம்பரிய உணவுகளின் கண்காட்சி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முதல் 23ஆம் திகதி வரை மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தக் கண்காட்சியில், தமிழ், முஸ்லிம், சிங்கள, பறங்கியர் ஆகிய சமூகங்களின் பாரம்பரிய உணவுகள் காட்சிப்படுத்தப்படுவதுடன், விற்பனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன் தெரிவித்தார்.
இன்றைய இளம் தலைமுறையினர் மத்தியில் பாரம்ப ரிய உணவுகள் தொடர்பில் தெளிவின்மை காணப்படுகிறது. அதனால் அவர்கள் பெரும்பாலும் மேற்கத்தேய உணவு வகைகளைப் பயன்படுத்துவதனால் பல்வேறு உடற் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. பாரம்பரிய உணவுகளைப் பயன்படுத்துவதில் உள்ள நன்மைகள், மேற்கத்தேய உணவுகளைப் பயன்படுத்துவதில் உள்ள பாதிப்புக்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# தமிழருக்கு எதிரான செயற்பாட்டை திட்டமிட்டு செய்து வருகிறது அரசு

## அவர்களின் துன்ப, துயரங்கள் தொடர்கின்றன என்கிறார் கிழக்கு மாகாண உறுப்பினர்

எருவில்,மார்ச் 19
அரசு தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றது. தமிழர்கள் காலாகாலமாக துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.



*நாவிதன்வெளியில் வறிய மாணவர்களுக்கு கற்றல் உப கரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் உரை நிகழ்த்தினார்.*

நாவிதன்வெளி, சொறிக்கல் முனை பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ் மக்களுக்கு எதிராக போர் பல ஆண்டுகளை மையப்படுத்தி நடைபெற்றுள்ளது.
அதிலும் குறிப்பாக 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிரான மாபெரும் போர் இலங்கையிலே நடைபெற்று பல இழப்புக்களை எமது இனம் சந்தித்து இருக்கின்றது.
அரசு தமிழ் மக்களை நன்கு திட்டமிட்டு நசுக்கிக் கொண்டு இருக்கின்றது. இந்தக் கால கட்டத்தில் தான் புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்கள் எவ்வளவோ தியாகங்களை செய்து கொண்டு இருக்கின்றனர்.
இதனை அவர்கள் ஏன் செய்கின்றார்கள்? இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எதிர் காலத்தில் நிரந்தர சுவாசக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் பாடுபடுகின்றனர்.-என்றார். (ச-31)


# University of Jaffna, Sri Lanka
# VACANCIES

Applications will be received by me up to 11th April 2014 from suitably qualified candidates for the following posts;

1. POST - TECHNICAL OFFICER GRADE.II SEG.A
(Vacancies exist at the Department of Physics and Computer Unit)

**Qualifications:**

National Diploma in Technology in the relevant field of specialization or its equivalent qualifications

Salary Scale : U-MT1(II) Rs.18,360-7x185;9x245-21,860 p.m
Selection : By Practical Test and Interview

2. AUDIO VISUAL TECHNICAL OFFICER GRADE.II

**Qualifications:**

a. Diploma in Technology of the Open University or Special Engineering Apprenticeship Certificate issued from 1975 or National Diploma for Engineering Technicians issued from 1989 by the national Apprentice Board or National Diploma in Technology or City Guilds Final Certificate in the fields of Electronics of Power, together with one year's experience in relevant video work.
-OR-
b. Diploma in Educational Technology or Diploma in Audio Visual Techniques of a recognized polytechnic or University provided that the courses for the Diploma in Educational Technology or the Diploma in Audio Visual Techniques are of two years duration, with 01 year experience in relevant video work.
-OR-
c. Pass 03 subjects at the G.C.E(A/L) Examination in Science one sitting and six years experience in Audio Visual work.

Salary Scale : U-MN4(II) Rs.22,240-20x320;1x465-29105 p.m
Selection : By Interview

**Age Limit for the above Posts** : Not more than 45 years
(*Note - Age limit is not applicable for applicants in the Government Departments/ State Corporation and statutory bodies.)

**Statutory Benefits:**
1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of " **Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna**" together with a self- addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 11.04.2014.**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

**Registrar**
14.03.2014


# பனை மரத்தில் இருந்து விழுந்தவர் உயிரிழப்பு

திருக்கோவில்,மார்ச் 19
திருக்கோவில், விநாயகபுரம் பிரதேசத்தில் பனைமரத்தில் இருந்து தவறிவீழ்ந்து ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்றது என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.
விநாயகபுரம்,பழைய தபாலக வீதியில் உள்ள வீடு ஒன்றில் உள்ள பனை மரத்தை கூலிக்கு தறித்து வீழ்த்தும் வகையில் சம்பவதினமான நேற்றுமுன்தினம் பனை மரத்தில் உச்சியில் ஏறியபோது தவறிக் கீழே விழுந்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கடற்கரையில் சிசுவின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,மார்ச் 19
மட்டக்களப்பு,காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனைக் கடற்கரையில் கரையொதுங்கிய சிசுவின் சடலமொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மீட்கப்பட்டது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.
கரையொதுங்கிய சடலத்தை கண்ட மீனவர்கள் சம்பவம் குறித்து பாலமுனை கிராம அலுவலருக்கும் பொலிஸாருக்கும் அறிவித்தனர்.
அதனையடுத்து குறித்த இடத்துக்குச் சென்று காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை மீட்டுள்ளனர். (ச)

# பத்திரகாளி அம்மனுக்கு ஏழு அடி உயரமான ஊதுபத்தி ஏற்றி வைப்பு




*7 அடி உயரமான ஊது பத்தி பத்திரகாளி அம்மன் ஆலய பெருந்திருவிழாவில் ஏற்றி வைக்கப்பட்ட போது...*

திருகோணமலை,மார்ச் 19
திருகோணமலை வரலாற்றில் முதன் முதலாக 7 அடி உயரமான ஊது பத்தியை ஒரு நிறுவனத்தினர் தயாரித்துள்ளனர்.
இந்த ஊதுபத்தி முதன்முதலாக கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய பெருந்திருவிழாவின் போது ஏற்றி வைக்கப்பட்டது.
இதனை ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்டுகளித்தமை குறிப்பிடத் தக்கது. (ச)

# எருமை மாடுகளுடன் மூன்று பேர் மாட்டினர்

மட்டக்களப்பு,மார்ச் 19
மட்டக்களப்பு, ஓட்டமாவடிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் எருமை மாடுகளை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் மூன்று பேரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இந்த மூவரையும் வாழைச்சேனை, ஓட்டமாவடி மாட்டுத் தொழுவத்தில் வைத்தே பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்களை வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## ஒளிப்பதிவாளர் கபூர் காலமானார்



இலங்கையின் முன்னணித்திரைப் பட ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான எம்.ஏ.கபூர் நேற்றுமுன் தினம் காலமானார்.

சிங்களக் கலைஞர்கள் உள்ளடங்கலாக பெரும்பாலானோரின் நன்மதிப்பை பெற்ற தமிழ் மொழி மூலமான இயக்குநராக பலராலும் அறியப்பட்ட எம்.ஏ.கபூர் மன்னாரைச் சொந்த இடமாகக் கொண்டவர். தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை திரைப் படத்துறையில் செலவிட்ட அவர் தமது 75ஆவது வயதில் காலமானார்.

திரைப்படத்துறையில் அவர் பல விருதுகளை பெற்றிருப்பதோடு இலங்கையை ஆட்சி செய்த நான்கு ஜனாதிபதிகளால் சிறப்பு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஒருவருமாவார்.

(வ-56)

## பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை 20 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி கோட்டக் கல்வி அலுவலர் அ.அமிர்தலிங்கம், ஆரம்பக் கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், முன்னாள் கிராம அலுவலர் க.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(க-18)

## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

♦ ♦ ♦

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவின் கலாசாரப் பேரவைக்கான வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலைஞர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபன் கேட்டுள்ளார். (ஒ)

## தமிழ்ச் சங்கத்தின் நிகழ்வுகள்

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் கரைச்சிக் கோட்டத்துக்கான தமிழ்ச் சான்றோர் விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

உருத்திரபுர மகாவித்தியாலயத்தில் பிற்பகல் ஒரு மணியளவில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் அறிவித்துள்ளது. (க-18)

## உறுதி பூசுதல் நிகழ்வு

குருநகர், மார்ச் 19

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குக்கு உட்பட்ட சிறார்களுக்கு உறுதி பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இந்த அருட்சாதனம் வழங்கும் திருப்பலியை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கவுள்ளார். (ஒ-51)

## சிவபூமி பாடசாலையில் மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நாளை மறுதினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன.

சிவபூமி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் பிற்பகல் 3 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இதில் முதன்மை விருந்தினராக பிரபல சட்டத்தரணி நீலகண்டன் சரவணன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக அமெரிக்க ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரி.ஷி.தொண்டுநாத சுவாமிகள் கலந்துகொள்வார்.

பரிசில்களை திருமதி துளசி சரவணன் வழங்குவார். (க)

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பட்டமளிப்பு விழா

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கான தமிழ் வாழ்த்தை செல்விகளான பிரிந்தியா ஜெயசீலன், விதுசிகா விமலசிங்கம், அபிநயா தனஞ்சயன் ஆகியோர் இசைப்பார்கள். வரவேற்புரையை கல்விக் குழுச் செயலாளர் மு.மனோகரனும், தொடக்கவுரையை தமிழ்ச் சங்கத் தலைவர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரனும் வழங்குவார்கள். பட்டமளிப்புப் பேருரையை பேராசிரியர் சி.தில்லைநாதன் நிகழ்த்துவார்.

"தமிழ் நிதி" சிறப்பு விருது "வாகரை வாணன்" சந்தியாப்பிள்ளை அரியரத்தினத்துக்கு வழங்கப்படவுள்ளது.

விருது அறிமுகவுரையை பேராசிரியர் செ.யோகராசா நிகழ்த்தவுள்ளார். பட்டயக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு வழங்கும் நிகழ்வைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் தம்பு சிவசுப்பிரமணியம் நன்றியுரையை வழங்குவார்.

(க)

## சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம்



புலோலி தெற்கு உபயகதிர்காமத்தைச் சேர்ந்த சதாசிவம் வல்லிபுரநாதன் சமாதான நீதிவானாக நியமனம் பெற்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதி பாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஓய்வு நிலை வங்கியாளரான இவர் புலோலி ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய உபயகதிர்காமம் பெரிய தேவன் சனசமூக நிலையம், முன்பள்ளியின் தலைவராகவும் உபய கதிர்காமம் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய செயலாளருமாவார்.

சிறந்த நாடகக் கலைஞரான இவர் நடிப்பு, நாடகத் தயாரிப்புகளில் பல பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

(வ-173)

♦ ♦ ♦



அல்வாயைச் சேர்ந்த சதானந்தன் செல்வாணந்தன் அகில இலங்கை சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை அதிபரான இவர் 25 வருடங்களுக்கு மேலாக கல்விச் சேவையில் இருந்து வருகின்றார்.

வடமராட்சி கிறிஸ்தவ வாலிபர் சங்க அங்கத்தவராகவும், அல்வாய் மனோகரா சனசமூக நிலைய நிர்வாக உத்தியோகத்தராகவும் பணியாற்றுகின்றார்.

சிறந்த விளையாட்டு வீரரும், சமூக சேவையாளருமான இவர் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். (வ-173)



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## சேவைநலன் பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்துக்களும்




**சுப்பிரமணியம் கணேசமூர்த்தி** (B.A.Dip-in Edu)

கல்விப் புலத்தில் **32** வருடங்கள் சேவையாற்றி இன்று **(19.03.2014)** ஓய்வு பெறுகின்ற எங்களது பாடசாலை அதிபர் அவர்களை உளமாரப் பாராட்டி அவரது ஓய்வுக் காலம் நோய்நொடியின்றி சிறப்பாக அமையவும் சமூக சேவையில் ஈடுபடவும் வாழ்த்துவதுடன் பிறந்த நாள் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்கள்
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்
காரைநகர்.

(45846)(7.6.3)

## டோஹா கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு

மேற்கத்தேய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் கிளைகளைக்கொண்டுள்ள பல்பொருள் அங்காடிக்கு (SUPER MARKET) தகுதியானவர்கள் தேவை.
உயர்ந்தசம்பளம் பெற்றுத்தரப்படும்.
நேர்முகத்தேர்வு 21.03.2014 வெள்ளிக்கிழமை கொழும்பில் எமது அலுவலகத்தில் நடைபெறும்.
சம்பளம்- 1200 QR+O.T
உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து இலவசம்.
தொடர்பு:077 395 7291 (43216)(3.6.4)

## விற்பனைக்குண்டு

லொறிக்குரிய பின் பெட்டி (தட்டு) கூட்டுடன் 9½அடி, 5½அடி மற்றும் கண்ணாடி குளிர்சாதன பெட்டி (Bottel Cooler) உயரம் 4 அடி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 760 1224 (30361)(3.6.4)

## வீடு வாடகைக்கு

இல.94, நல்லூர் குறுக்கு வீதி (பருத்தித்துறை வீதிக்கு அருகில்) புதிதாக கட்டப்பட்ட 2500 ச.அடி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வாகன தரிப்பிட வசதிஉண்டு.(நிறுவனங்கள், அலுவலகங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:077 668 1547 (45767)(3.6.4)

# INVITATION FOR BIDS
# University of Jaffna

**Provision of Cleaning and Maintenance Services for the University of Jaffna-2014**

1. The Chairperson, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to 2.00 p.m. on **04th April, 2014** from the eligible Firms.

| Contract No | Service |
|---|---|
| UJ/MB/2014/CS/01 | Provision of Cleaning and Maintenance Services for the Kanagasundram Male Hostel and Sivagnanasundram Female Hostel at Jaffna Town, University of Jaffna-2014 |
| UJ/MB/2014/CS/02 | Provision of Cleaning and Maintenance Services for the Buildings in various Locations in Jaffna, University of Jaffna-2014 |
| UJ/MB/2014/CS/03 | Provision of Cleaning and Maintenance Services for the Rented Hostels in Various Locations in Jaffna, University of Jaffna-2014 |
| UJ/MB/2014/CS/04 | Provision of Cleaning and Maintenance Services for the Male and Female Hostels of Siddha Medicine Unit at Kaithady, University of Jaffna- 2014 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   - 3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   - 3.2 Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than **Rs. 1.0 Million for contracts No 1&2 each and Rs. 0.6 Million for contract No 3 &4 each.**
   - 3.3 Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least **Rs. 1.5 Million for contracts No 1&2 each and Rs. 1.0 Million for contract No 3 &4 each**
   - 3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 10 employees for each Bid.
4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
   Contact numbers are: Phone. Tel: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, **from 19.03.2014 until 03.04.2014** from 9:00 hrs to 15:00 hrs upon payment of a **non refundable fee of Rupees one thousand five hundred (Rs.1,500/-) for each bid. Bid Security of Rs. 24,000.00 for contracts No 1&2 each,** and **Rs. 16,000.00 for contract No 3&4 each** in Cash or Bank Guarantee valid for 120 days from scheduled bid opening date obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.
6. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 28.03.2014 at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Chairperson, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on 04.04.2014 or** be deposited in the tender box kept in the Registrar's office on or before the above date and time. . Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

Chairperson,
Procurement Committee,
University of Jaffna, Thirunelvely, Jaffna.
17.03.2014

(C/12753)(10.6.3)

## யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர்சங்கம் பருத்தித்துறை

ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்-2014
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்
காலம் : 05.04.2014 (சனிக்கிழமை)
நேரம் : மு.ப.9.00 மணி

அனைத்து பழைய மாணவர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/12750)(3.6.4) செயலாளர்.

## எழுதுவினைஞர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது நிறுவனத்திற்கு கணினி தமிழ், ஆங்கில தட்டச்சு மற்றும் M.S. Office செய்யும் ஆற்றல் உள்ள பெண் பிள்ளை ஒருவர் தேவை.

தகுதியுள்ளோர் அலுவலக நாள்களில் காலை 9மணிதொடக்கம் பிற்பகல் 4மணிவரை நேரில் சமுகம் தரலாம்.

ருலின்ஸ் பிறைவேட் லிமிடெட்
114/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 222 5534

(30365)(3.6.4)

## வலி.தென்மேற்கு பிரதேசசபையின் முக்கிய அறிவித்தல்

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள நுணசை முருகன் ஆலயம், சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் ஆகிய ஆலயங்களின் மகோற்சவ காலங்களில் தற்காலிகமாக வியாபார நிலையங்களை அமைப்பவர்கள் வலி காமம் தென்மேற்கு பிரதேச சபையின் அலுவலகங்களில் வியாபார உரிமங்களைப் பெற்று வியாபாரத்தினை ஆரம்பிக்க வேண்டும். அனுமதியின்றி வியாபாரம் ஆரம் பிக்கப்படின் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

சண்முகம் சிவகுமாரன், தவிசாளர்,
வலி.தென்மேற்கு, பிரதேசசபை, மானிப்பாய்.

(சி/12740)(6.2)

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 05.04.2014.

**Unit of Siddha Medicine**

Temporary Lecturer / Temporary Demonstrator in Siddha Medicine

| Post | Salary scale |
|---|---|
| Temporary Lecturer | Rs.26,020 /-(fixed) p.m |
| Temporary Demonstrator | Rs.21,370/-(fixed) p.m |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

17.03.2014

(C/12752)(10.6.3)

## 8 ஆம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு 25 ★ 05 ★ 1955
உதிர்வு 19 ★ 03 ★ 2006

திருமதி செல்லக்கண்டு
சந்திரோதயம்

ஈரவிழிகளில் கலங்கி
நிற்கிறோம்- அம்மா
உன் நினைவுகள் தாங்கி
எட்டு ஆண்டுகள்
ஆனாலும் உன் நினைவுகள்
அழியாத மனங்களுடன்
வாடுகின்றோம்-அம்மா

நாவலம்பதி,
அச்சுவேலி தெற்கு.
குடும்பத்தினர்.
(45776)(3.6.4)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
10*03*1946
உதிர்வு
17*02*2014

திருமதி இராஜேஸ்வரி இராசேந்திரம்

திக்கெட்டும் தெகிட்டாத பாச வலை விரித்து
கொக்குவிற் பதிசிறக்க பயனான வாழ்வுகொண்டு
எக்கணமும் அன்புதந்த எம்பெரி யம்மா
நிற்குமோ இத்துயரம் நெஞ்சினில் சுமையற்று
அன்னையாய் எமைவளர்த்து அரவணைத்து என்றும்
வெண்மை யுளங்கொண்டு எமக்கு வாழ்வு தந்தீரம்மா
இராசேந்திரம் துணையிற்றூய வில்லறங்கண்ட இராஜேஸ்வரி
இறையாம் மஞ்சவனப்பதி முருகன் தாள்நிற்க வேண்டுகின்றோம்.

நாகலிங்கம் வீதி.
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
06.04.1940
மறைவு
19.02.2014

அமரர் அன்னபூரணம் சிவபாக்கியநாதன்

வானுறையும் இறைவனடியில் நிரந்தர அமைதியாகிய
எங்கள் குடும்பத்தின் அன்னையே!
பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
வேண்டியவர்களுக்கு வேண்டியதெல்லாம் வழங்கி
வாழவைத்த அன்னையே!
எம் நினைவில் அழியாமல் உங்கள் நினைவு
ஆற்றல் போல் என்றென்றும் எம்முடன் வாழ்வீர் நிரந்தரமாய்
கடந்த 19.02.2014 இறைவனடி சேர்ந்த எமது அன்னையின்
31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை
(20.03.2014) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற
விருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய
போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்தியசாலை அருகில்,
கோப்பாய்.
(C/12547)(2.6.3)
குடும்பத்தினர்.



## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
நாகலிங்கம் சிவபாதசுந்தரம்
(முன்னாள் முகாமையாளர் பெற்றோலியக்கூட்டுத்தாபனம்)

மண்ணில் 15.09.1943
விண்ணில் 11.02.2014

கடந்த 11.02.2014 இறைபதம் எய்திய
எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்தியம்
இன்று (19.03.2014) புதன்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில் எமது
இல்லத்தில் நடைபெறவுள்ளது.
இந்நிகழ்வில் பங்கு கொண்டு
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஈஸ்வரி பவனம், காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (30366)(2.6.3) குடும்பத்தினர்.


## மன்னாரில் மின்சாரத்தை துண்டிக்கும் நடவடிக்கையில் மின்சார சபையினர்

மன்னார்,மார்ச் 19

மன்னாரில் மின்சார நிலுவைகளைச் செலுத் தாதவர்களின் மின் இணைப்புக்கள் துண்டிக் கப்பட்டு வருகின்றன.

இங்குள்ள பலர் சிறிய தொகையிலிருந்து மிகப் பெரிய தொகை வரை மின்சாரக் கட்டண நிலுவை வைத்திருப்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மின்சார சபை வட் டாரங்கள் தெரிவித்தன.

மின்சார இணைப்புத் துண்டிக்கப்பட்டவர்கள் அதனை மீண்டும் பெறவேண்டுமானால் நிலு வைத் தொகை முழுவதையும் செலுத்துவ துடன் மீள மின் இணைப்புக் கட்டணமாக மேலதிகமாக ஆயிரம் ரூபாவைச் செலுத்த வேண்டுமென அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த நிலையில் மன்னாரில் அடிக்கடி மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-56)

## கிளிநொச்சி பொது நூலகத்தில் இடையூறு விளைவிக்கும் இளைஞர்கள்

கிளிநொச்சி,மார்ச் 19

கிளிநொச்சி பொது நூலகத்தின் வாசகர் பகு திக்கு வரும் இளைஞர்கள் சிலரின் செயற்பாடு களால் அங்கு வரும் வாசகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் பின்புறமாகவுள்ள சிறிய கட்டடத்தில் இந்த நூலகம் இயங்கி வருகின்றது.

இந்த நூலகத்தின் பத்திரிகை வாசிப்புப் பகுதி இடவசதியற்ற நிலையில் இயங்கி வருகின் றது.

இந்த நிலையில் இந்தப் பகுதியிலுள்ள கதிரைகளில் வந்து அமரும் சில இளைஞர்கள் தாம் எடுத்துவரும் கைத்தொலைபேசிகளில் இணையத் தளங்களைப் பார்வையிடுவதுடன் தமக்குள் பலத்த சத்தமாகக் கதைத்துக் கொண் டும் இருக்கின்றனர்.

இதன்போது இந்த இளைஞர்கள் பத்திரிகை களையும் எடுத்து வைத்துக் கொண்டு தாம் அவற்றை வாசிப்பது போன்று காட்டிக் கொள்கின்றனர். இந்த இளைஞர்கள் நீண்ட நேரமாகப் பத்திரிகை வாசிப்புப் பகுதியில் தங்கியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இதனால் பத்திரிகைகளை வாசிப்பதற்கென இங்கு வருபவர்கள் சிரமங்களை எதிர்கொள் கின்றனர். (க-426)

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

குடும்பத்தைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங் கிய நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தில் இடம்பெற்றுள் ளது. பொலிஸாரும் இறப்பு விசாரணை அதிகாரியும் விசார ணைகளை மேற் கொண்டதுடன் சட லத்தை உடற் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத் தியசாலைக்கும் அனுப்பி வைத்தனர்.

உயிரிழந்தவர், மட்டு வில் வடக்கு சந்திர புரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வல்லி செல்வராசா (வயது- 47) என்பவர் ஆவார். (வ-288)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி சித்திரா கருணாகரன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி சரஸ்வதி மயில்வாகனம்
17.03.2014 அன்று கொழும்பில் சிவபதம் அடைந்தார்.
அவர்களின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதுடன்
குடும்பத்தவரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.
கல்லூரிச் சமூகம்,
(சி12756)(12.3.6) கிளி/இந்துக்கல்லூரி.



## மரண அறிவித்தல்

திருமதி யூபிறேசியா சூசைப்பிள்ளை



நாரந்தனை மேற்கைப் பிறப்பிட மாகவும் யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை யூபிறேசியா நேற்று (18.03.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான செல்லையா-றோசமுத்து தம்பதியரின் அன்புமகளும், அந்தோனிப் பிள்ளை-மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனை வியும், காலஞ்சென்ற ஸ்ரனிஸ்லோஸ் மற்றும் பற்றீசியா (பூ), அலோசியஸ் (கிளிபேர்ட்), தேவராஜா(சந்திரன், முன்னாள் மாநகரசபை முகாமை உதவி யாளர்), றஞ்சினி, கலிஸ்ரா(விஜி), லெற்றீசியா(கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜோசப்பின்(மலர்), சவுந்தரநாயகம், புவனேஸ்வரி, ஜசிந்தா, விக்னராஜா ஆகியோரின் அன்புமாமியாரும், யூட்மேவின், ஜோயல்நரேஸ், நிராஜ், நீரஜா, ஜயந்தி, கீத்ஆகாஸ், நிகிலா, எட்மன் ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.03.2014) புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.1/14, பால்குளம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம். (30360)(3.6.4)
தகவல்:
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் ஆறுமுகம்
குமாரசாமி

கடந்த 17.02.2014
திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர் ஆறுமுகம்
குமாரசாமி அவர்களின்
வீட்டுக்கிருத்தியம் இன்று
(19.03.2014) புதன்கிழமை
மு.ப.10.00 மணியளவில்
அவரது கோப்பாய்
இல்லத்தில் நடைபெறும்.
தாங்களும் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய
போசனத்திலும் கலந்து கொண்டு
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கம்பாவத்தை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(30358)(3.6.4)
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் சின்னட்டி
வடிவேலு

தோற்றம்
08.09.1937
மறைவு
17.02.2014

கடந்த 17.02.2014 திங்கட்கிழமை சிவபதம் எய்திய எமது
குடும்பத்தெய்வம் அமரர் சின்னட்டி வடிவேலு
அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (19.03.2014) புதன்கிழமை ந.ப.12.00 மணியளவில்
அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(45391)(12.3.6)

அம்மன் கோயிலடி.
கோப்பாய் மத்தி.
கோப்பாய்.

சத்தியஈஸ்வரன் குடும்பம்,
தமிழ்செல்வம் குடும்பம், கமலதாசன்,
சதீஸ்வரன் குடும்பம்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வலி. தெற்கு பிரதேச சபை
19 MAR 2014
பொது சன நூலகம்



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கல்வி சாரா ஊழியர்
மேரியோசப் ரசிங்டன் அவர்களின் அன்புத் தந்தை
**எஸ்தாக்கி மேரி யோசப்** அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/கரம்பொன் சிறிய ம.ம.வி., கரம்பொன்,
ஊர்காவற்றுறை.
(30374)
(2.6)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி திருஞானசம்பந்தர்



திருநெல்வேலியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி திருஞானசம் பந்தர் 16.03.2014 ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திருஞான சம்பந்தரின் அன்பு மனைவியும், தயாநிதி (ஆசிரியர், யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாட சாலை, யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி யாசாலை), தயாபரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிறேமலினியின் (இத்தாலி) அன்பு மாமியாரும், தர்ஷன், தர்ஷிகா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22, சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
(30362)
(12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## ✝ இதய அஞ்சலி



யாழ்ப்பாணம், சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கின் மைந்தன் அருட்பணி
**அருளானந்தம் யாவிஸ்**
அவர்களின் பாசமிகு தாயாரும் எமது ஆலயத்தில் பல பக்திச்சபைகளில் பணியாற்றுகின்றவருமான
**பிலிப் அருளானந்தம்**
அவர்களின் அன்பு மனைவியுமாகிய
திருமதி **திரேசம்மா அருளானந்தம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பங்குத்தந்தை, பங்குமக்கள்,
யாழ்ப்பாணம், சுண்டுக்குளி புனித
திருமுழுக்கு யோவான் ஆலயம்.
(45247)
(12.3.6)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சுப்பிரமணியம்



திஸ்ஸமஹாரம திக்வெலயைப் பிறப்பிட மாகவும், கொழும்பு பண்டாரநாயக்க மாவத் தையை வசிப்பிடமாகவும், கனடாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராம லிங்கம் சுப்பிரமணியம் 16.03.2014 ஞாயிற் றுக்கிழமை கனடாவில் இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான இராம லிங்கம்-வள்ளியம்மாபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதம்- சீனிப்பிள்ளை (நயினா தீவு)தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மா (கனடா) அவர் களின் அன்புக் கணவரும், நிமால்ராஜ் (கனடா), சந்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகலா (கனடா), கனகசபை(சபா-கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம், சோமசுந்தரம், கனகரெத் தினம், குலசேகரம், மற்றும் மங்கையர்க்கரசி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், நாகமுத்து (பொன்னம்மா), கனகரெத்தினம், ஐயாசாமி, விசாலாட்சி, சிவக்கொழுந்து மற்றும் லக்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,அனோஜ்ராஜ், அனீஷா, அர்வின்ராஜ், ஹர்சன், நிரோசன், அஸ்வின் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(19.03.2014) புதன்கிழமை கனடாவில் பார்வைக்காக வைக்கப்பட்டு, நாளை (20.03.2014) வியாழக்கிழமை பி.ப.12.30 மணியளவில் Forest Lawn Mausolem Cremation Centre, 4570 Yonge St, North York, ON M2N 5L6 இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
நிமால் கனடா - +14168167994
சந்திரா கனடா - +14162825477
சபா கனடா - +16472733806
நந்தன் கனடா - +14167266595
ரமணா கனடா - +14168930514

(சி/12754)
(5.6.3)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்
கனடா.

## அனுமதியின்றி மணல் ஏற்றிய 14 பேருக்கு பிணை

தென்மராட்சி, மார்ச் 19

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற் பேலியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியதாக சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவின் பேரின் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 14 பேரையும் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அனுமதிக்கப்பட்டது.

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் விசேட பணிப்பின் பேரில் கடந்த 2 ஆம் திகதி அதிகாலை கெற்பேலிக்குச் சென்ற சாவகச் சேரிப் பொலிஸார் ஐந்து டிராக்டர்களையும் 14 பேரையும் கைது செய்தனர்.

அவர்களுக்கு எதிராக கடந்த 4 ஆம் திகதி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது 14 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக் கப்பட்ட போது 14 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் செல்லு மாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## பஸ் விற்பனைக்கு உண்டு

HJ-xxxx இலக்கம் கொண்ட அசோக் லேலண்ட் பஸ் விற்பனைக்குண்டு.

T.P: 077 305 3000

(30378)
(10.6)

## மரண அறிவித்தல்

### சின்னப்பொடி குமாரசாமி



பூநகரியைப் பிறப்பிடமாகவும், ஸ்கந்த புரத்தை வதிவிடமாகவும் கொண்ட சின் னப்பொடி குமாரசாமி நேற்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி-கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வள்ளிப் பிள்ளை யின் அன்புக் கணவரும், பராசக்தியின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற விக் னேஸ்வரன் மற்றும், விஜயரத்தினம், விவேகானந்தன், விஜயகுமார், விமலாதேவி, விமலேஸ்வரன், விநாயகமூர்த்தி, காலஞ்சென்றவர்களான விஜய மனோகரன், விமலநாதன் மற்றும், விக்கினராசா, விஜயகாந்தன் ஆகியோரின் அன் புத் தந்தையும், மதி, லலி, விஜி, விஜிதரன், வினோஜா, வினோ, மனோ, மது, விதுகுயில், மயூரன், மஜிதா, பயூ,கஜீவன், ரஜீவன், டிசாந், திவ்வியா, மனோ, பவி, துவி, தட்சா, அகிசா, பவிசன், திவிசன், துசாந், ஆர்த்தி ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2014) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஸ்கந்தபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

99, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.
(43414)
(10)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தொடர்பு கொள்ளவும்

உமி சாம்பல்
தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 772 2215

(45851)(2..6)

## காணி விற்பனை

கோண்டாவில் இராமகிருஷ்ண வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: ப.பாலகிருஷ்ணன்
021 222 4857

(45851)(3.6.4)

## துயர் பகிர்கின்றோம்



புன்னாலைக்கட்டுவன் ஆயாக் கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான ஸ்தாபக வழித்தோன்றலான பிரம்மஸ்ரீ த.சுப்பிரமணிய ஐயர் அவர்களின் அன்பு மனைவி
**கல்யாணி**(மைதிலி)
அவர்கள் இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினர் துயரில் பங்குகொள்வதுடன், அவரது ஆன்மா ஐங்கரனின் திருவடி சேர ஆயாக்கடவை ஐங்கரனைப் பிரார்த்திக்கின்றோம்.

த.சுப்பிரமணியஐயர்
(லண்டன்)
0044-2085182432

பா.சுந்தரராஜசர்மா ஸ்தானிக குரு,
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஆயாக்கடவை, புன்னாலைக்கட்டுவன்,
(ஆயாக்கடவை சார் அந்தணர்கள் சார்பாக)

(30371)(3.6.4)

## துயர் பகிர்கின்றோம்


எமது பாடசாலையின் அதிபர்
திருமதி **வசந்தாதேவி விமலேஸ்வரன்**
அவர்களின் அருமை மாமனார்

**சின்னப்பொடி குமாரசாமி**

அவர்கள் நேற்று (18.03.2014)
செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மாசாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
கிளி/ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க.பாடசாலை.
(43412) (3.6.4)

## துயர் பகிர்கின்றோம்



திருமதி
**திரேசம்மா அருளானந்தம்**
கரித்தாஸ் வன்னி
கியூடெக் நிறுவனத்தின்
இயக்குநர்
அருட்பணி யாவிஸ்
அடிகளாரின்
அன்புத் தாயாரின்
ஆத்மா சாந்தியடைய
இதயம் நெகிழ்ந்து
அஞ்சலிக்கின்றோம்.

இயக்குநர், பணியாளர்கள்
கரித்தாஸ் யாழ்ப்பாணம்- கியூடெக்
யாழ்ப்பாணம்.

(சி/12751)(7.6.3)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை அருட்பிரகாசம்



காரைநகர், பொன்னாவளை யைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி தங்கோடையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அருட் பிரகாசம் 17.03.2014 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப் பிள்ளை - தெய்வானை தம்பதிய ரின் அன்பு மகனும், இடைப்பிட் டியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமநாதன் (ஐயனிர்) - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடராசா மற்றும் பாலசிங்கம் (ஜேர்மனி), சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் தேவி (ஜேர்மனி), சேனாதிராசா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.03.2014) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் களபூமி தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
(C/12758) (2.6)

தொடர்புகளுக்கு: 077 4158619

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச

ஆணையாளர் அலுவலகத்தால் விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருத்து முரண்பாடு இவ்வாறான அதிகாரம் மனித உரிமைகள் ஆணையாளருக்கு இல்லையென்று இலங்கைக்கு ஆதரவான நாடுகள் கூறிவருகின்றன. இந்தநிலையில் கருத்துப் பகிர்வில் இலங்கை விடயம் தொடர்பாகக் கேள்வியெழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் "சர்வதேச மனித உரிமை சார் விடயங்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையின் அங்கீகாரத்துடன் விசாரணை செய்யும் அதிகாரம் எனக்கு உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நடைமுறைக்கு அமைய நாடுகளுக்கு சர்வதேசம் ஏற்கத்தக்க உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப் படுகிறது. அது சாத்தியப்படாத நிலையில்தான் சர்வதேச தளத்தில் விசாரணைக்கான முன்னெடுப்பு இடம்பெறுகிறது.

சர்வதேச மனிதஉரிமை விவகாரங்க ளில் மனித உரிமை சபையின் ஒப்புதலுக்கு அமைய சர்வதேச விசாரணைக்கான அதிகாரம் ஆணையாளருக்கு உள்ளது. அத்துடன் தென் சூடான் விவகாரத்தில் ஆபிரிக்க ஒன்றியத்தின் ஒப்புதலுக்கு அமைய, அங்கு விசாரணைகள் நடத்தப்பட்டன."- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### இலங்கை

ழர் பிரதிநிதிகளும் பங்கெடுத்திருந்தனர். மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறீதரன், மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணிகளான குருபரன், மணிவண்ணன், பிரதீப் எக்னலிகொடவின் மனைவி, நிமல்கா பெர்னான்டோ ஆகிய பிரதிநிதிகளுடன் இலங்கைத் தூதரக அதிகாரிகளும் பங்கெடுத்திருந்தனர்.

இரண்டு மணிநேரம் வரை நீடித்த இந்தக் கலந்தாய்வில் இலங்கையைக் காப்பாற்றும் முகமாக கியூபா, ரஷ்யா, எகிப்து, சீனா, வியட்நாம் ஆகிய நாடுகள் தீர்மானத்தினை பலவீனப்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக கருத்துக்களை முன்வைத்திருந்தனர். குறிப்பாக இலங்கையின் நல் லிணக்க ஆணைக்குழுவின் தேசிய மட்டத்திலான செயற் திட்டம் இருக்கும் நிலையில் அனைத்துலகத்தின் உள்நுழைவு அவசியமற்றது எனவும் அவை வாதிட்டன. இலங்கை மீது விசாரணையினை மேற்கொள்வதற்கான அதிகாரம் ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளருக்கே உண்டென்றும், அவரது அலுவலகத்திற்கு இல்லை என்றும் கியூபா கருத்துரைத்தது. இந்தியாவின் சார்பாக கீழ் நிலை அதிகாரி ஒருவர் பங்கெடுத்திருந்தார். அவர் கருத் துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

இக் கலந்துரையாடலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் நிமல்கா பெர்னான்டோ ஆகியோர் இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் தொடர்பில் இக் கலந்துரையாடலில் கருத்துரைத்தனர்.

குறித்த கலந்துரையாடல் இடம்பெற்ற போது இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பின்புறம் அமர்ந்திருந்து கலந்துரையாடல் முழுவதையும் அவதானித்ததுடன் சில வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் சந்தித்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (த-ற)

### வாடகை

சொகுசு கார்கள், ஹைஏஸ் வாகனங்கள், பிக்கப் வாகனங்கள் என்பவற்றையே வாடகைக்குக் கொடுத்து லட்சக்கணக்கில் பணம் பெற்றுக்கொண்ட பின்னர் குறித்த வாகனங்களின் உரிமையாளர்களை அனுப்பி அனைத்து வாகனங்களையும் பறித்து வந்தார் என்று குறித்த நபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வீதியில் பயணித்துக் கொண்டிருக்கும் போது கத்தி, வாள் போன்ற ஆயுதங்களைக் காட்டி பல வாகனங்கள் பறித்துச் செல்லப்பட்டிருந்தன என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் வாடகைக்கு வாகனத்தை எடுத்த ஒருவர், அந்த வாகனம் பறிக்கப் படுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை அடுத்து தனது வாகனத்தை மறைத்து வைத்திருந்துள்ளார். எனினும் செட்டியார் என்ற குறித்த நபர் பல தடவை வாகனத்தைக் கொண்டு வருமாறு கூறியபோதும் அவர் கொடுத்திருக்கவில்லை. எனினும் செட்டியாரின் தொடர் கண்காணிப்புக் காரணமாக காரை வெளியே எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அது தொடர்பில் யாழ்.பொலிஸாரிடம் முறையிட்டும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதையடுத்து பாதிக்கப்பட்டவர் சட்டத்தரணி வி.திருக்குமரன் மூலமாக யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அதன் தொடர்ச்சியாக காரை விலைக்குப் பெற்றதான ஒப்பந்தம் செய்யப்பட்டது. செட்டியாரும் தனது காரைத் தருமாறு நீதிமன்றில் கோரியிருந்தார். பணத்தைக் கொடுத்து விட்டு காரைப் பெற்றுச் செல்லுமாறு செட்டியாருக்கு நீதிமன்று அறிவித்ததோடு அது வரை காரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கவும் உத்தரவிட்டிருந்தது.

எனினும் வழக்கில் சில தவணைகள் செட்டியார் நீதிமன்றுக்குச் சமுகமளிக்காததனால் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமாரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரைப் பிணையில் விடுவிக்குமாறு அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கோரியிருந்தனர். அதையடுத்து 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கும் ஒத்திவைக்கப்பட்டது. (ற-4)

### நிபந்தனையற்ற

ளுடன் கலந்துரையாடி அவர்களின் மனங்களில் உள்ளவற்றுக்குச் செவிசாய்க்க வேண்டும். அவர்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். இன்று இலங்கையிலுள்ள எதிர்கால இளைஞர்கள் விரும்புவது ஒன்றும் நடக்கவில்லை.

ஒரு தீர்வைக் காண்பதற்குத் திறந்த மனதுடன் பேச விரும்பும் ஜனாதிபதி எமக்கு இருக்கின்றார். வேறு விதமான பாதையில் போய்க் கொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் உங்கள் செயற்பாடுகளையும் மீள பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்"

என்று தெரிவித்தார்.

இதனையடுத்து அங்கஜனின் உரைக்குப் பதிலளிக்கும் வகையில் வடமாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி .விக்னேஸ்வரன் தனது உரையில்,

"சர்வதேசத்தை நோக்கி நாம் செல்லவில்லை. கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நல்லெண்ணத்துடனே நான் சென்று சந்தித்தேன். அதன் போது அவர் சிரித்துக் கதைத்தார். பல்வேறு வாக்குறுதிகளையும் வழங்கினார். ஆனால் எதனையும் நிறைவேற்றவில்லையே?. இந்த நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்?" என்று கேள்வியெழுப்பினார்.

அவரைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்,

"நிபந்தனையற்ற பேச்சுக்கு ஜனாதிபதி தயார் எனில் நாங்களும் எங்கள் கட்சித் தலைமையும் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வரவேண்டும் என்ற விடயம் உட்பட எந்தவொரு முன் நிபந்தனையும் ஜனாதிபதி விதிக்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்.

அதன்பின்னர் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தனது உரையில்,

"இலங்கையின் 8 மாகாண சபைகளுக்கும் ஒரு சட்டம். வடக்கு மாகாணசபைக்கு மட்டும் இன்னொரு சட்டம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சை நிறுத்தியது நாங்களல்ல. சர்வதேசம் எங்கள் பிரச்சினையைப் புரிந்து கொண்டது என்பதுதான் உண்மை." என்று கூறினார்.

தொடர்ந்து வடமாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான க.சிவமோகன், க.சர்வேஸ்வரன், இ.ஆனல்ட், பிறிமுஸ் சிராய்வா, கஜதீபன் ஆகியோரும் உரையாற்றினர் க.சிவமோகன் இது குறித்துக் கூறுகையில், "சர்வதேச தலையீடற்ற பேச்சு மூலம் தீர்வு கிடைக்காது" என் றார்.

க.சர்வேஸ்வரன் கூறுகையில், "எமது பிரச்சினை 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட்டது. வட்டமேசை மாநாடு, நிபுணத்துவக் குழு என்று எல்லாத் தீர்மானங்களும் குப்பைக்குள் போடப்பட்டுள்ளன. ஜனாதிபதியே தமிழ் மக்களின் உறுதிக் காணிகளை வேறு யாருக்கோ மாற்றி வழங்கும்போது நாம் யாரிடம் சென்று முறையிட முடியும்?" என்று கேள்வி யெழுப்பினார்.

"தந்தை செல்வாவின் காலத்தில் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டபோது நாம் சர்வதேசத்தை நாடிச் செல்லவில்லையே. நாங்கள் தற்போது நிராயுதபாணிகளாக நிற்கின்றோம்"- என்று கூறினார் இ.ஆனல்ட்.

பிறிமுஸ் சிராய்வா கருத்துத் தெரிவிக்கும்போது, "அங்கஜனின் உரையில் மறைமுக நிகழ்ச்சித் திட்டம் இருக்கின்றதோ தெரியவில்லை. அவர் உரையாற்றிய சந்தர்ப்பம் அவ்வாறு எண்ணத் தோன்றுகின்றது. முதலில் எங்கள் வடக்கு மாகாணசபையைச் சுதந்திரமாகச் செயற்பட விடுமாறு உங்கள் தலைவரிடம் கூறுங்கள்" என்று தெரிவித்தார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த கஜதீபன், அங்கஜனின் உரையை கன்சாட்டிலிருந்தே நீக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். எனினும் அவைத் தலைவர் அதற்கு மறுத்துவிட்டார். (த-ற-5)

### கைதானோர்

டியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார் என்று கொழும்பு அரச ஆங்கில ஊடகமான டெய்லி நியூஸ் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தேடப்பட்டு வரும் கஜீபன் பொன்னையா செல்வநாயகம் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர். அவர் கடந்த 13 ஆம் திகதி கிளிநொச்சி தருமபுரத்தில் பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்று விட்டார். குறித்த சந்தேக நபருக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஜெயகுமாரி கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த தேடப்பட்டு வரும் கஜீபனுக்கும், ருக்ஷி பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் இருவருக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது. 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர், கோபி இடம்பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் இருந்து தப்பிச் சென்றார்.

மத்திய கிழக்கு நாடு ஒன்றில் பணியாற்றிய அவர் பின்னர், ஐரோப்பா சென்றார். அங்கிருந்து இலங்கையில் தீவிரவாத நடவடிக்கைகளை மீள மைக்கும் நோக்கிலேயே நாடு திரும்பியிருந்தார்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள பாலேந்திரன் ஜெயகுமாரியே கோபிக்கு, அடைக்கலம் கொடுத்தி ருந்தார். ஜெயகுமாரி எவ் 3 ரக கண்ணிவெடி கண்டுபிடிக்கும் கருவி ஒன்றை வைத்திருந்தார். முன்னர் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை மீட்பதற்கு கோபி இதனை பயன்படுத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம். ருக்ஷி பெர்ணாண்டோவும், அருட்தந்தை பிரவீன் மகேசனும், அடிக்கடி இந்த தீவிரவாத செயற் பாட்டாளர்களை சந்தித்துள்ளனர். தேசிய பாதுகாப்பு கவலைகள் தொடர்பாக இவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற-5)

### ஜெனிவா

சீனத் தூதுவர் றென் பங்கியாங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர வேண்டிய அவசியம் உள்ளது என்று சீனா கருதவில்லை. 30 ஆண்டு கால தீவிரவாதத்தை இலங்கை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதும், அமைதி உருவாக்கப்பட்டதும் மனித உரிமைகள் பாதுகாப்புக்கு மிகப் பெரிய பங்களிப்பாக அமைந்துள்ளது. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு மனித உரிமைகளை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை நாம் எதிர்க்கின்றோம். இலங்கை பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றங்களை அடைவதற்கு சீனா தொடர்ந்தும் ஆதரவு வழங்கும். மஹிந்த சிந்தனைக் கொள்கை இலக்கை அடைவதற்குச் சீனா உதவும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

### கைதுகளுக்கு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களால், மாகாண சபையின் முன்பாக ஏ-9 வீதியில் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. வடக்கில் அண்மைக்காலத்தில் கைது செய்யப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ருக்ஷி பெர்னான்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன், தருமபுரத்தில் திட்டமிட்டு கைது செய்தாகக் கூறப்படும் ஜெயகுமாரியின் விடுதலையை வலியுறுத்தியும், எலும்புக் கூடாக மீட்கப்பட்ட ஆசிரியர் நிரூபனின் மரணத்திற்கு நீதி கேட்டும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அவைத்தலைவரினால் போராட்டத்திற்கான அழைப்பு சபையில் பகிரங்கமாக விடுக்கப்பட்டது. இருப்பினும் ஆளுங் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மாத்திரமே கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்தனர். வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் போராட்டத்தை தொடக்கி வைத்து விட்டு இரண்டு நிமிடங்களிலேயே வெளியேறி விட்டார்.

அதன் பின்னர் ஆளுங்கட்சியின் அமைச்சர்கள், அவைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பங்களிப்புடன் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்தின்போது "மகனைக் கேட்டால் பூசா, அண்ணனைக் கேட்டால் அநாதை இல்லமா ?", "பதின்மூன்று வயதுச் சிறுமி உனக்கு பயங்கரவாதியா ?", "படையை நிலைநிறுத்த புலிப் பூச்சாண்டியா ?", "சிறுமியை சிறைப் பிடித்து எம் இனத்தைச் சீண்டாதே", "காவிஉடை கலகக்காரர்களுக்கு காவற்றுறை பாதுகாப்பு; மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு 4 ஆம் மாடியா ?" போன்ற சுலோகங்களைக் தாங்கிப்பிடித்தவாறும், கோஷம் எழுப்பியவாறும் சுமார் 20 நிமிடங்கள் வரையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில், வெளிநாட்டுத் தூதரகங்கள், ஐ.நாவுக்கு அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்ட மனுவை அவைத் தலைவர் வாசித்தார். அதில் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் தன்னிச்சையான கைதுகளைக் கண்டிப்பதுடன் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மகஜரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மாத்திரம் கையெழுத்திட்டிருந்தனர். (ற-5)

### முன்னாள்

றில் பணியாற்றிவரும் மயில்வாகனம் ஜசீகரன் (வயது 34) எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் அவரது வீட்டுக்கு வெள்ளைவானில் சென்ற ரி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் ஜசீகரன் வீட்டில் இல்லாததால் அவர் தொழில் புரியும் வெதுப்பகத்துக்கு சென்று அங்குவைத்து கைதுசெய்து கொண்டுசென்றுள்ளனர்.

வெதுப்பகத்தில் வாகன சாரதியாக கடமையாற்றிவரும் ஜசீகரன் முன்னாள் போராளி. இவர் போரின்போது காலில் படுகாயமடைந்து தற்போது மாற்றுத்திறனாளியாக உள்ளார்.

போரின் பின்னர் கைது செய்யப்பட்ட இவர் இரண்டு வருடங்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு பிற்பகுதியில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் ஜசீகரன் குடும்ப வறுமை காரணமாக வெதுப்பகம் ஒன்றில் வாகனச் சாரதியாகப் பணியாற்றி வருகிறார் எனவும் திடீர் என வீட்டுக்குவந்த ரி.ஐ.டி பொலிஸார் விசாரித்துவிட்டு கடையில் சென்று கைது செய்து சென்றுள்ளனர் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர். (ஜ-55)

### மனித

கையிலேயே கைதான மதகுருவும் மனிதஉரிமை செயற்பாட்டாளரும் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் நேற்றிரவு இருவரும் அவசரமாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இருவரும் பங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இரவோடிரவாக கொழும்புக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

தருமபுரம் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து இருவரும் தகவல் பெற முற்பட்ட சமயமே தாம் அவர்களை கைது செய்ததாகப் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்திருந் தனர்.

மதகுரு மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரது கைதுக்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளுடன் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் தமது கண்டனங்களைத் தெரிவித்திருந்தன. இந்த சம்பவம் குறித்து ஐ.நா. சபையும் கருத்தில் எடுத்திருந்தது.

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் இருவரையும் 3 மாதங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினால் நேற்றையதினம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-5)

# 'உதயன்'- ஐக்கியம் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி நேற்று ஆரம்பம்



ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட 'உதயன்' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனுக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றனர்.





நேற்று இடம்பெற்ற ஆட்டத்தின் காட்சிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 19

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை திக்கமுனை மைதானத்தில் ஆரம்பமாகின.

இதில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழக 'பி' அணி மோதிக் கொண்டது.

இதில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம் பெற்ற ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆரம்ப நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக 'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் நவநீதமணி, பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் தலைவர் இராசநாதன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (கு-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று புதன்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பிறைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது.

(கு-23)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 19

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (கு-23)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 19

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டியுத் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட் டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (கு-23)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 19

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கம் முனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆதி சக்தி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (கு-23)

## கனகராயன் குளம் ம.வியின் பெண்கள் அணி சம்பியன்

மாங்குளம்,மார்ச் 19

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி சம்பியனாகியது.

இதன் இறுதியாட்டம் கடந்த வாரம் பன்றிக் கெய்த குளம் அ.த.க.பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்துத் தரணிக்குளம் கணேஸ் வித்தியாலய அணி மோதியது.

முற்பாதியாட்டம் கனகராயன் குளம்மகா வித்தியாலயஅணிக்கு சாதகமாக அமைந்தபோதும் அவர்கள் கோல் போடும் பல சந்தர்ப்பங்களை நழுவ விட்டுக் கொண்டிருந்தனர். இதனைச் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தரணிக்குளம் அணியினர் தமது முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தினர். 9 ஆவது நிமிடத்தில் கனகராயன் குளம் அணியின் வீராங்கனை கிலானிகா தட்டிக் கொடுத்த பந்தை டிலானி கோலாக்க முற்பாதியாட்டம் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலைவகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது கனகராயன் குளம் அணியினர் தமது ஆட்ட வியூகங்களை மாற்றி அமைத்து களம் இறங்கினர்.

கனகராயன் குளம் அணியின் முன்கள வீராங்கனைகள் விரைவாக முன்னோக்கிப் பந்தைக் கொண்டு சென்ற போதும் தரணிக்குளம் அணியின் கோல் காப்பாளரினால் அவை தடுத்து நிறுத்தப்பட்டன. 13 ஆவது நிடமிடத்தில் கனகராயன் குளம் அணியின் வீராங்கனை நிஷாந்தினி தட்டிக் கொடுத்த பந்தை அவ்வணியின்வீராங்கனை டிலானி அற்புதமாகக் கோலாக்க இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் கனகராயன் குளம் மகா வித்தியாலய பெண்கள் அணி சம்பியனாகியது. (கு-422)

## சேந்தாங்குளம் இளைஞர் கரப்பந்தில் அசத்தியது

யாழ்ப்பாணம், மார்ச் 19

தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சேந்தாங்குளம் இளைஞர் கழக அணி சம்பியன் ஆனது.

கடந்த சனிக்கிழமை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் சேந்தாங்குளம் இளைஞர் கழக அணியை எதிர்த்து அளவெட்டி மத்தி இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. மூன்று செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் சேந்தாங்குளம் இளைஞர்கழகஅணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (கு-23)

# செல்சி முதலிடத்தில்

இங்கிலாந்து பிரீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் செல்சி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

இந்தவாரப் போட்டிகளில் செல்சி அணி அஸ்ரன் வில்லா அணியிடம் தோல்வியைச் சந்தித்தும் முதலிடத்தில் உள்ளது. இந்த நிலையில் இரண்டாம், மூன்றாமிடங்களில் உள்ள லிவர்பூல், ஆர்சனல் அணிகளிடம் இருந்து இப்போதைக்குச் சவால்கள் நேரடியாக இல்லாவிட்டாலும் நான்காமிடத்தில் உள்ள மன்செஸ்ரர் சிற்றி அணியிடம் இருந்து சவால்களை எதிர்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

30 போட்டிகளைப் பூர்த்தி செய்துள்ள செல்சி அணி 66 புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை மன்செஸ்ரர் சிற்றி அணி 27 போட்டிகளில் விளையாடி 60 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இரண்டு வெற்றிகள் அவர்களின் முதலிடத்துக்குப் போதும். எனவே முன்நோக்கி நகரும் இங்கிலாந்து பிரீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடர் இறுதிக்கட்ட விறுவிறுப்பான கட்டத்தை நோக்கி நகர்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (து)



# இலங்கை உலகக் கிண்ணம் கைப்பற்றி 18 வருடங்கள்

இலங்கை அணி உலகக்கிண்ணத்தைச் சுவீகரித்து நேற்று முன்தினம் 18 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

1996 ஆம் ஆண்டு இவ்வாறான ஒரு நாளில் பாகிஸ்தானின் லாஹூர் கடாபி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி போட்டியில் இலங்கை அணியுடன் ஆஸ்திரேலிய அணி பலப்பரீட்சை நடத்தியது.

இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியை இலங்கை அணி 7 இலக்குகளால் வெற்றிகொண்டு உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இலங்கை அணியை வெற்றிக்காக வழிவகுத்த அர்ஜீன ரணதுங்க அன்றைய தினம் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பிலீடுபட தீர்மானித்தவிடயம் அன்றைய வர்ணனையாளர்களின்கருத்துக்களுக்கு இலக்கானது.

வேகப்பந்து வீச்சாளர்களான சமிந்த வாஸ், பிரமோதய விக்ரமசிங்க மற்றும் சுழற்பந்து வீச்சாளர்களான முத்தையா முரளிதரன், அரவிந்த டி சில்வா ஆகியோரின் சிறந்த பந்துவீச்சு ஆஸ்திரேலிய அணியை 241 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்தியது. இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை 23ஆக இருக்கும் சந்தர்ப்பத்தில் தொடர் முழுவதும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய சனத் ஜயசூரிய மற்றும் ரொமேஷ் களுவிதாரண ஆகியோரை ஆஸ்திரேலியப் பந்து வீச்சாளர்கள் ஆட்டமிழக்கச் செய்தனர்.


அதனையடுத்து அணியின் நம்பிக்கை நட்சத்திரமாகத் துடுப்பாட்டத்தில் மைதானத்தை அலங்கரித்த அசங்க குருசிங்க மற்றும் அரவிந்த டி சில்வா ஆகியோர் இணைந்து125ஓட்டங்களைஇணைப்பாட்டமாகப் பகிர்ந்தனர்.

தனது சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய அரவிந்த டி சில்வா ஆட்டமிழக்காது 107 ஓட்டங்களை பெற்றார்.

அரவிந்தவுடன் இணைந்த அணித் தலைவர் அர்ஜீன ரணதுங்க 97 ஓட்டங் களை ஆட்டமிழக்காது இணைப்பாட்டமாகப் பெற்று வெற்றியிலக்கை கடந்து உலகக் கிண்ணத்தை இலங்கை அணி முதற் தடவையாக சுவீகரிக்க உதவினர். (து)



# நெதர்லாந்து வெற்றி



உலக 20/20 போட்டிகளின் தெரிவுப் போட்டி களில் ஐக்கிய அரபு இராச்சியம், நெதர்லாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் நெதர்லாந்து அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய ஐக்கிய அரபு இராச்சிய அணி 19.5 பந்துப்பரிமாற் றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில்ஷைமன் அன்வர் 32 ஓட்டங் களையும், குராம் கான் 31 ஓட்டங்களையும் பெற்றனர். அஷான் மாலிக் ஜமீல் பந்துவீச்சில் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குத் துடுப்பாடிய நெதர்லாந்து அணி 18.5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்கு களை இழந்து வெற்றியினைப் பெற்றது. இதில் ஸ்ரீபன் மைபே 55 ஓட்டங்களையும், டொம் கூப்பர் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கம்ரான் ஷசாட் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (து)

# இந்தியாவை 5 ஓட்டங்களால் வெற்றிகொண்டது இலங்கை



உலக்க் கிண்ண 20/20பயிற்சிப் போட்டியொன்றில் இலங்கை அணி இந்திய அணியை 5 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

மிர்பூரில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி களத்தடுப் பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்படுத்தாடிய இலங்கை அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில், 6 இலக்குகள் இழப்புக்கு 153 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ரவிச்சந்திரன் அஸ்வின் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

154 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது

இலங்கை அணி சார்பாக லசித் மலிங்க 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (து)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடக்கு

ஞர் சேவைகள் மன்றக் காணியின் ஒரு பகுதியை மாத்திரம் இளைஞர்கள் சேவை மன்றத்தை பயன்படுத்த அனுமதித்துக் கொண்டு பெரும்பான்மையான பகுதிகளை இராணுவத்தினர் பிடித்து வைத்துள்ளனர். அந்தக் காணித்துண்டுகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. மீளவும் ஆரம்பித்தால் சுண்ணக்கல் அகழ்வு, அதனால் ஏற்படும் சூழல் பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு அங்கு உற்பத்தி முயற்சிகளைக் கைவிட வேண்டும்.

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவில் பொன்னாவெளிக் கிராமத்தில் ரோக்கியோ சிமெந்து நிறுவனத்துக்கு சுண்ணாம்புக் கல் அகழ்வதற்கு 2 ஆயிரம் ஏக்கர் அளவீடு செய்து எல்லையிடப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை வழங்கக் கூடாது.

முத்தையன்கட்டுக்குளத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அதற்கு அருகில் சிநோட்ரோ நிறுவனம் கருங்கல் அகழ்வது குளத்துக்கு எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். குளத்தின் பாதுகாப்பு எல்லைக்கு வெளியே இந்தச் சுரங்கத்தை அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

மத்திய அரசின் அனுமதியுடன் வடக்கில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பெரும்பாலும் வடக்கு மாகாணசபையின் கவனத்துக்கு கொண்டுவராமலே செயற்படுத்தப்படுகின்றது. அவை உரிய மாகாணத் திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தி வடக்கு மாகாண சபையின் ஒத்திசைவுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கில் முதலீடு செய்ய விரும்பும் பெரும் நிறுவனங்கள் சமூக வேலைத் திட்டங்களை வடக்கில் முன்னெடுக்க வேண்டும். அதனை வடமாகாண சபையின் தெரிவின் அடிப் படையில் மேற்கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவில் இடைநிறுத்தப் பட்ட கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேசசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

முல்லைத்தீவின் உடையார் கட்டு பிரதேசத்தில் இலங்கை வங்கியின் பிராந்தியக் கிளையை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

வள்ளிபுனம் பகுதியில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக தும்புத் தொழிற் சாலையை அமைக்க வேண்டும்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையை வடக்கு மாகாண வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்குட்டபட்ட பாவற்குளம் யுனிற்றில் நூறு ஏக்கருக்கு மேலான காணியை கையகப்படுத்தி அவற்றில் படையினரின் குடும்பங்க ளையோ அல்லது வேறு எவரையுமோ குடியேற்றுவதை தடுக்க வேண்டும்.

கொக்கிளாய் கடல்நீரேரியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மீதான தடை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் சமூக சீர்கேடுகளைத் தடுக்க பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வழங்கப்பட்ட தேசிய உயர்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளுக்கான நியமனம், வடக்கு மாகாண பட்டதாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆய்வுகூட நூலகப் பணியாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் 2012 வைகாசி மாதம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளை வெளியிட ஆவண செய்ய வேண்டும்.

மண்ணியா குளம், குஞ்சுக் குளம் ஆகிய வயல் வெளிகளுள் கடல் நீர் உட்புகா வண்ணம் பூநகரி பத்தினாப்பாய்ப் பிள்ளையார் கோவிலடி மண்டக் கல்லாறு மன்னார் வீதி வரை தடுப்பணை போட வேண்டும்.

கச்சேரி புதிய இடத்திற்குச் சென்றதும் பழைய கச்சேரியின் பிரதான மண்டபத்தை கிளிநொச்சி மாவட்ட மத்திய நூல் நிலையத்திற்கு வழங்க வேண்டும்.

இரணை தீவிலிருந்து வெளியேறிய குடும்பங்களை மீண்டும் அங்கு குடியமர்த்தி சுதந்திரமாக அவர்கள் செய்த தொழில்களை செய்வதற்கு வழிவகை செய்து கொடுத்தல் வேண்டும்.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தை மாகாணசபை கையேற்று அதன் தொழிற்பாடுகளை செயல்படுத்த வேண்டும். கொக்கிளாய் பகுதியில் கரவலைப்பாடுகள் சட்டவிரோதமாக உழவு இயந்திரங்கள் பயன் படுத்தி இழுக்கப்படுகின் றன. அவை தடைசெய்யப்பட வேண் டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ந-5)

19 MAR 2014
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்





ஆட்டமிழப்பைக் கொண்டாடும் ஆப்கானிஸ்தான்

# ஆப்கானிஸ்தான் அபார வெற்றி

ஹொங்கொங் அணிக்கு எதிரான உலகக் கிண்ணத் தகுதிச் சுற்று ஆட்டத்தில் 7 இலக்குகள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் அணி வெற்றி பெற்றது.
பங்களாதேஷில் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் ஹொங்கொங் - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹொங்கொங் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.
இதனை அடுத்து துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறை வில் 8 இலக்குகளை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. அவ் வணி சார்பாக வாஹறாஸ் பர்கற் 32 ஓட்டங்களையும், அற்சின் கான் 31 ஓட்டங்களையும், எம் எஸ் ஷப்மன் 38 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் ஷபூர் சத்ரன், ஹம்ஷா ஹொராக் மற்றும் முகமட் நபி ஆகியோர் தலா 2 இலக்குகளையும், டவ்லற் சத்ரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இதன் பின்னர் 154 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி 18 பந்துப் பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளால் வெற்றி பெற்றது.
அவ்வணி சார்பாக அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய முகமட் ஷ்ஷ்ட் 6 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 68 ஓட்டங்களையும், ஷமிகுல்லா ஆட்டமிழக்காமல் 39 பந்துகளில் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் தன்வீர் அவ்ஷல் ஹஷீர், அம்ஜட் அஸஸ்ஹான் ஆகியோர் தலா ஓர் இலக்கை யும் கைப்பற்றினர்.
போட்டியின் ஆட்டநாயகனாக ஆப்கானிஸ்தான் அணியைச் சேர்ந்த முகமட் ஷ்ஷ்ட் தெரிவு செய்யப்பட்டார். (400)

# டெயார் டெவில்ஸ் அணிக்கு கெவின் பீற்றர்ஸன் தலைவர்

எதிர்வரும் ஐ.பி.எல் போட்டிகளில் டெல்லி டெயார்டெவில்ஸ் அணியின் தலைவராக இங்கிலாந்தின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்ஸன் நியமிக்கப்பட்டுள்ளார்.
உப தலைவராக இலக்குக் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான தினேஷ் கார்த்திக் நியமிக்கப்பட்டுள்ளார்.
டெல்லி டெயார்டெவில்ஸ் அணி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.
33 வயதாகும் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் கெவின் பீற்றர்ஸன், 2010ஆம் ஆண்டின் உலகக்கிண்ண 20/20 கிரிக்கெட் போட்டிகளில் போட்டி நாயகனாகத் தெரிவானார்.
2012ஆம் ஆண்டு டெல்லி டெயார்டெவில்ஸ் அணியில் இணைந்து கொண்ட இவர், 8 போட்டிகளில் பங்கேற்று 305 ஓட்டங்களைப் (சராசரி 61) பெற்றுக்கொடுத்தார்.
2013ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டிகளில் காயம் காரணமாக பங்கேற்றிராத இவர், தனது அணியின் இளம் போட்டியாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களை ஊக்கப்படுத்தினார். (கு)

**வீணை விற்பனைக்கு**

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள ஏகாந்த வீணை விற்பனைக்குண்டு.
தொடர்பு: K.P.பாலகிருஸ்ணன், K.K.S. வீதி, பூனாரிமடத்தடி, கொக்குவில். தொ.பே. 021222 2940

**பதவி வெற்றிடம்**

**Customer Relations Manager**
(வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்) (ஆண் / பெண்)
**கல்வித்தகைமை :**
ஆங்கில அறிவு மிக முக்கியம்
பட்டதாரி / டிப்ளோமாதாரிகளுக்கு முன்னுரிமை
**வேதனம் :**
மாதம் 20 000/= (EPF, ETF இதில் அடங்கும்)
2 வருட சேவை ஒப்பந்தம்
சனி, ஞாயிறு வேலைநாளாகும்
வார நாள்களில் ஒரு நாள் ஓய்வு வழங்கப்படும்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயணம் செய்யக்கூடியவர்கள் மாத்திரம் வரவும்

நேர்முகத்தேர்வு : 20.03.2014 மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.
Ms.v. இந்துஜா பொதுமுகாமையாளர்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற் 175, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

தமிழ்க்குழந்தைகளோ அல்லது ஆங்கிலக் குழந்தைகளோ மற்றவர்கள் பேசுவதை அவதானித்தே தத்தம் மொழியைப்பேசப்பழகுகின்றன. மாறாக இலக்கணம் கற்றுவிட்டல்ல!
SAAMSON இல் ஆங்கிலப்பயிற்சியானது இதுபோன்றே உரையாடற் பயிற்சி மூலம் வழங்கப்படுவதால் நீங்கள் யாராக இருந்தாலும் 3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 22.03.2014 சனிக்கிழமை
பிரிவு: 4 03.00-05.00
அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், தொழில் தேடுவோர் வெளிநாடு செல்வோர், இளைஞர், யுவதிகள் இணையமுடியும்.
குறிப்பு: வாரநாள் வகுப்புகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
SAAMSON LANGUAGE SCHOOL 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

# ரூ.100 கோடி நஷ்டஈடு கேட்டு டோனி வழக்கு

ஐ.பி.எல் சூதாட்ட விவகாரத்தில் தமக்கு தொடர்பு இருப்பதாகச் செய்தி வெளியிட்ட தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ரூபா 100 கோடி நஷ்டஈடு வழங்க வேண்டுமென கோரி இந்திய அணியின் அணித்தலைவர் டோனி வழக்கு தொடர்ந்துள்ளார்.
6ஆவது ஐ.பி.எல் தொடரில் சூதாட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது, இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நிர்வாகிகளில் ஒருவரான குருநாத் மெய்யப்பனும் சிக்கினார்.
இந்நிலையில் பிரபல தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், சூதாட்டத்தில்சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அணித்தலைவர் டோனிக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தியது.
இதனையடுத்துடோனி சென்னை உயர்நீதி மன்றில் மனுத் தாக்கல் செய்தார்.
இந்த மனுவில், சூதாட்டம் தொடர்பாக ஒரு குறிப்பிட்ட தொலைக்காட்சி தமக்கு எதிராக அவதூறுச்செய்திபரப்பி வருகிறது. எனவே இதற்குத்தடை விதிக்க வேண்டும் என்றும், இதனால் தமக்கு ரூபா 100 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள் ளது.
இதனை விசாரித்த நீதிமன்றம், அவதூறு செய்தி வெளியிடத் தடை விதித்து உத்தர விட்டுள்ளது. (கு)

**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -**
Only Official FRENCH Centre
af பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு af Alliance Française de Jaffna

FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITWZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில்...
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

**தென்னிந்திய யாத்திரை**
**ஆரம்பம் - 07.04.2014**
**நிறைவு - 18.04.2014**

திருச்சி, திருப்பதி, மதுரை, இராமேஸ் வரம், நவக்கிரக கோயில், மேல்மருவத்தூர், கும்பகோணம், தஞ்சாவூர், பஞ்சபூதத் தலங்கள் உட்பட 40 இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். மேல் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவுசெய்க.
தொடர்பு: கலாநிதி T.ஸ்ரீ ரெங்கநாதன்
077 7680102

**கணனி மலிவு விற்பனை**

(19" LED, 2GB Ram, 250GB HDD)
Full Set Core 2 Duo Hp கணனி



29,750/=
ஒரு வருட உத்தரவாதம்
Free: Pendrive/Headphone/Webcam
**ST. Antony's**
187, K.K.S. Road, Jaffna Town
0750698608/0212224865

**SRI VASANTHAM CONSTRUCTION**

நவீன தொழில்நுட்பத்துடன் வாஸ்துசாஸ்திர முறைப்படி உத்தரவாதத்துடன் கூடிய கட்டடங்களைக் குறித்த தவணையில் அமைத்துக் கொள்வதற்கு எம்மால் வழங்கப்படும் சேவைகள்...




- ✓ கட்டட வரைபடம்
- ✓ உத்தரவாதத்துடன் கூடிய கட்டட நிர்மாணப்பணி
- ✓ அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்களின் மேற்பார்வை
- ✓ தலைசிறந்த மேசன்மார்களின் உறுதியான கட்டுமானப்பணி
- ✓ நவீன வடிவமைப்புகளுடன் கூடிய தச்சுவேலைகள்
- ✓ கூரை வேலைகள்
- ✓ கட்டடங்களுக்கான மின்சார வேலைகள்
- ✓ தீந்தை பூசும் வேலை (Painting work)
- ✓ மாபிள் வேலை (Tile work)
- ✓ குழாய் பொருத்துதல்வேலை (Plumbing work)
- ✓ ஒட்டுதல் வேலை (Welding work)





தொடர்புகளுக்கு:
SRI VASANTHAM CONSTRUCTION
300, பலாலி வீதி (ஆலடிச்சந்தி அருகில்), கந்தர்மடம். யாழ்ப்பாணம்.
T:P: 076 6529677
(30370)(10.6.3)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் சாம்பசிவம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சாம்பசிவம் நேற்று (18.03.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் பார்வதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், குமாரசாமி, காலஞ்சென்ற அண் ணாமலை, சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், வசந்தினி (வவா, பிரான்ஸ்), சிவகுமார் (சிவம் - V.S.K. ஊழியர்), ஜெயக்குமார் (ஜெயா - லண்டன்), லதீஸ்குமார் (ரவி - பிரான்ஸ்), காலஞ்சென்ற சூரியகுமார் (சூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரூபதாஸ் (ரூபன்-பிரான்ஸ்), பேரின்பவதி, தர்ஷி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், பிரியந்தன், பிரியங்கன் (பிரான்ஸ்), திவேகா, டினோசன், யதுசன், விதுசன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



# சேமிப்போம்; செழித்து வாழ்வோம்



ராஜராஜன்

> அன்று வாழ்ந்த மனிதர்கள் தமது எதிர்காலத் தேவையின் பொருட்டுத் தாமாகவே முன்வந்து சேமிப்புப் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். தினமும் அரிசியைப் பயன்படுத்தும்போது அதில் ஒரு பிடியைக் கையால் எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டு வைப்பர். என்றோ ஒருநாள் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது அதனைப் பயன்படுத்துவார்கள்.

சேமிக்கும் பழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல பன்னெடுங் காலமாகவே எம்மத்தியில் இருந்து வரும் ஒரு சிறந்த பழக்கம் அது.

பணம் புழக்கத்துக்கு வருவதற்கு முன்னர் பொருள்கள் மூலமாகவே கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுவந்தன. இதனைப் பண்டமாற்று என்றும் அழைப்பார்கள். இன்று சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அன்று வாழ்ந்த மனிதர்கள் தமது எதிர்காலத் தேவையின் பொருட்டுத் தாமாகவே முன்வந்து சேமிப்புப் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். தினமும் அரிசியைப் பயன்படுத்தும்போது அதில் ஒரு பிடியைக் கையால் எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டு வைப்பர். என்றோ ஒருநாள் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது அதனைப் பயன்படுத்துவார்கள்.

இன்று பொருளுக்குப் பதிலாகப் பணத்தைச் சேமிக்கும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. வங்கிகள் சேமிப்பை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. சிறிது சிறிதாகச் சேமித்து வைக்கப்படும் பணம் எதிர்காலத்தில் ஏற்படும் தேவைகளுக்குக் கைகொடுக்கும்.

சேமிப்பு என்றதும் தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள் சிலரின் நினைவு ஞாபகத்துக்கு வருகின்றது. சந்திரபாபு என்றொரு நகைச்சுவை நடிகர் ஒருகாலத்தில் புகழ் ஏணியின் உச்சத்தில் இருந்தார். இவர் படத்தின் கதாநாயகனை விடவும் அதிக சம்பளம் பெற்றதாகக் கூறுவார்கள். இவர் தாம் சம்பாதித்த பணத்தை ஊதாரித் தனமாகச் செலவு செய்து வந்தார். எப்போதுமே வெளிநாட்டு உயர்தர மதுவில் மூழ்கிக் கிடந்தார். சொந்தமாகப் படம் எடுத்துப் பெரு நட்டமும் அடைந்தார். இறுதியில் வசித்த வீட்டையும் இழந்து நடுத்தெருவில் நின்றார். இவர் தனது எதிர்காலத்துக்கென ஒரு சதத்தையேனும் சேமித்து வைக்கவில்லை. இறுதியில் உணவுக்கே வழியில்லாத நிலையில் பரிதாபமாகத் தனது இறுதிக் காலத்தைக் கழித்தார்.

இதைப் போன்றுதான் பெரிய பெரிய திரைப்பட நட்சத்திரங்களின் இறுதி வாழ்க்கை அவல நிலைக்குத் தள்ளப்பட்டது. இவர்கள் ஓரளவாவது சேமிக்கும் வழக்கத்தைக் கடைப் பிடித்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது. எறும்புகள் கூட உணவு கிடைக்கும் போது அதில் ஒரு பகுதியைச் சேமித்து வைத்துப் பின்னர் பயன்படுத்துவதைக் காண்கின்றோம். சில நெல் வயல்களில் அறுவடையின் பின்னர் பார்க்கும் போது நிலத்தின் கீழ் நெல் மணிகள் சேமித்து வைக்கப்பட்டிருப்பதைக் காண முடியும். வயலில் உள்ள ஒரு வகை எலிகள் இவற்றைச் சேமித்து வைக்கின்றன. தேன் கூடும் இந்த வகையில் தேனைச் சேமிக்கும் இடமாகவே காணப்படுகின்றது. இவ்வாறு சிறு சிறு உயிரினங்கள் சேமிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கும்போது ஆறறிவு படைத்த மனிதன் இதனை உதாசீனம் செய்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

விதம் விதமான ஆடைகளை அதிக விலை கொடுத்து வாங்கி உடுத்துவதில் இன்று பலரும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆதி காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் ஆடைகளைப் பயன்படுத்தவில்லை. பின்னர் மானம் என்று ஒன்று இருப்பதை அவர்கள் புரிந்து கொண்ட போது மரவுரி தரித்துக் கொண்டனர். நீண்ட காலத்துக்குப் பின்னர் ஆடைகள் தோன்றின. தற்போது வெவ்வேறு விலைகளில் விதம் விதமான ஆடைகள் வந்துவிட்டன. இந்த நிலையில் உணவுக்கும் உடைக்கும் அதிக பணத்தைச் செலவழிக்கும் நிலையில் இன்றுள்ளவர்கள் காணப்படுகின்றனர். உடைக்குச் செலவழிக்கும் பணத்தில் ஒரு பகுதியைச் சேமிப்பதால் முழுக் குடும்பமுமே பயனடையும்.

மனிதர்கள் உயிர் வாழ்வதற்கு உணவு மிகவும் அவசியமானதாகும். உணவின்றி உயிர் தங்காது. ஆனால் விதம் விதமாக அதிக பணத்தைச் செலவிட்டு உண்டு கொண்டிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. சிலர் சுவையான உணவுக்கு அடிமையாக இருப்பார்கள். இதற்கு அதிக பணம் செலவழிகின்றதே என்ற கவலை இவர்களிடம் இருக்காது. கடன்பட்டாவது உண்ண வேண் டும் என்பதில் வெறியாகவே இருப்பார்கள். இதனால் பணத்தை இழப்ப தோடு உடல் நலத்தையும் இவர்கள் இழந்து நிற்பார்கள். உணவுக்காகச் செலவழிக்கும் பணத் தில் ஒரு பகுதியைத் தமது எதிர்காலத் தேவைக் கென இவர்கள் சேமித்து வைப்பார்களாயின் பண மும் சேமிக்கப்படும். உடல் நலமும் பேணப்படும்.

சேமிப்பின் அடையாளச் சின்னமாகப் பெண்களே விளங்குகின்றார்கள். ஏனென்றால் ஆண்களின் வருமானத்தில் செலவுகளை மேற்கொள்ளும் வாய்ப்பு பெண்களுக்கே அதிகளவில் கிட்டுகின்றது. ஒரு பெண் என்பவள் தனது கணவனின் வருமானத்தை எடை போட்டுத் தனது குடும்பத்தின் செலவுகளைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பது அவர்களின் மனதில் எப்போதுமே நிழலாட வேண்டும். இதன் பிரகாரம் வருமானத்துக்கு ஏற்ப அவர்கள் செலவுகளை மேற்கொள்ள வேண்டும். பணத்தைக் கண்டதும் அதிக செலவில் ஆடம்பரமாக உணவுகளைச் சமைக்க முற்படுவதும் ஆடைகளை வாங்கிக் குவிப்பதும் எதிர்காலத்தில சிக்கல்களையே தோற்றுவிக்கும். ஆகவே கிடைக்கும் வருமானத்தில் ஒரு சிறிய அளவையாவது சேமிக்கும் வழக்கத்தைப் பெண்கள் கொண்டிருக்க வேண்டும். வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவது சகஜமானது. கஷ்டங்கள் ஏற்படும் போது இந்தச் சேமிப்புப் பழக்கம் நிச்சயமாகக் கை கொடுக்கும் என்பதில் ஐயமே இல்லை. முன்னரெல்லாம் ஆறு மாதங்கள் மாரி காலமென அழைக்கப்பட்டது. அதற்கு ஏற்றவாறு வருடத்தின் கடைசி ஆறு மாதங்களும் தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டிருக்கும். இதனால் மாரி காலத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கோடை காலத்தில் சேமித்து வைத்துவிடுவார்கள். இதனால் மாரியின் போது ஏற்படக் கூடிய உணவு நெருக்கடி தவிர்க்கப்பட்டது. இப்போது அத்தகைய தொரு நிலை இல்லை என்றபோதிலும் உணவுகளைச் சேமிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிப்ப தால் குடும்பத்துக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

இன்னமும் சில நூறு வருடங்களில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பெறப்படும் எண் ணெய் வளம் இல்லாமல் போய்விடுமெனக் கூறப்படுகின்றது. எண்ணெய் வளம் தவிர வேறொரு வளங்களையும் கொண்டிராத இந்த நாடுகள் கடுமையான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்குமென்பதை எவரும் கூறத் தேவையில்லை. இதை உணர்ந்த அந்த நாடுகள் இப்போதே தமது வருவாயில் கணிசமான பங்கைச் சேமிப்பதோடு வேறு வழிகளிலும் முதலிடத் தொடங்கி விட்டன.

ஆகவே நாமும் எம்மால் இயன் றளவு சேமிக்கும் பழக்கத்தைப் பின்பற்றுவோம். இதன் மூலமாகவே எமது குடும்பம் மட்டுமல்ல முழு நாடே நன்மை அடையும். நாளைக்குப் பார்ப்போம் என அலட் சிய மாக இருப் பதை விடுத்து இன்றே இதனை மேற்கொள் வதற்கு நாம் துணி வோமானால் அதுவே எதிர்காலத்தில் எமக்குப் பெருமளவு கை கொடுக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமே இல்லை.



# மின்னல் மின்னினால் நிலநடுக்கம் ஏற்படுமா?

நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்பு வானில் தோன்றும் வெளிச்சக் கீற்றுகள், பூமியில் ஏற் படும் அசைவுகளால் இருக்கலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சமீபத்தில் சீனா மற்றும் இத்தாலியில் ஏற் பட்ட மாபெரும் நிலநடுக்கங்களுக்கு முன்பு வானில் வெளிச்சம் ஏற்பட்டது. பூமியில் இருக் கும் மண் படிமங்கள் நகர்வதால் மாபெரும் மின்சார சக்தி உருவாகி அதனால் இந்த வெளிச் சப் பொறிகள் உருவாகலாம் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பிளாஸ்ரிக் குவளை ஒன்றில் மைதா மாவை எடுத்து கொண்ட விஞ்ஞானிகள், அதனை முன்னும் பின்னுமாகத் தொடர்ந்து தள்ளி யுள்ளனர். அப்போது மாவில் பிளவு ஏற்பட்டு 200 வோல்ட் மின்சார சக்தி உருவாகியுள்ளது. முதலில் தாங்கள் முட்டாள் தனமாக ஏதோ செய்வதாகவே எண் ணியதாக ரட்கர்ஸ் பல்கலைக்கழகத் தின் பேராசிரியரான ட்ரார் ஷின்பிராட் கூறினார். இந்த விடயத்தை விளக்கக் கூடிய ஒரு




நுட்பம் இருப்பதாக தன்க்குத் தெரியவில்லை என்றும், இது ஒரு புதிய வகையான பௌதி கமாக தெரிவதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர்கள் கண்டதை டென்வரில் நடை பெற்ற அமெரிக்கன் பிசிக்கல் சொசைட்டி கூட்டத்தில் அறிவித்துள்ளனர்.

மைதா மாவு மட்டுமன்றி, வேறு தானிய மாவுகளோடு செய்யப்பட்ட ஆராய்ச்சியிலும் இதே போன்று மின்சார சக்தி உருவாகியுள்ளது. இதே விடயம் மண் படிமங்களில் ஏற்படும் போது லட்சக்கணக்கான வோல்ட் திறன் கொண்ட மின்சக்தி உருவாகும். இதுவே வானில் வெளிச்சமாக உருவாகி, நிலநடுக்கம் வரப்போவ தற்கான அறிகுறியாக காண்பிக்கிறது என்று கூறலாம் என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள்.


நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்பு வானில் வெளிச்சம் ஏற்படுகிறது என 300 ஆண்டு களாகவே சொல் லப்பட்டு வருகிறது. ஆனால் இதெல்லாம் கட்டுக் கதை என்றே விஞ்ஞானிகள் கூறி வந்தனர். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, குறிப் பாக யூ டியூப் போன்ற இணையத்தளங்கள் வந்த பின்னர், வானில் ஏற்பட்ட வெளிச்சங் கள் தெளிவாக படம்பிடிக்கப்பட்டு அவற்றை உலகத்தில் இருக்கும் விஞ்ஞானிகள் பார்ப் பதற்கான வசதிகள் ஏற்பட்டு விட்டன.

புகுஷிமா மற்றும் லாகிலாவில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்பு வானில் ஏற்பட்ட வெளிச் சங்கள் தெளிவாக படம்பிடிக்கப்பட்டு இணை யத்தில் ஏற்றப்பட்டன. அதேசமயம் எல்லா வெளிச் சத்திற்கு பின்பாகவும் நில நடுக்கம் வருவ தில்லை. அதுவும் ஒரு சில சமயங்களில் தான் நில நடுக்கம் ஏற்படுகிறது. இதனை ஆராய் வதற்காக, நில நடுக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ள பகுதிகளில் ஏற்படும் மின் சக்தியை அளவிடுவதற்காக கோபுரங்களை துருக்கி விஞ்ஞானிகள் நிறு வியுள்ளனர்.






உதயன்
19.03.2014



## அதிக நேரம் சைக்கிள் ஓட்டிச் சென்றால் இதயத்துக்குப் பாதிப்பு

உலகம் முழுவதும் வைத்தியர்கள் அதிகம் பரிந்துரைக்கும் உடற்பயிற்சிகளில் சைக்கிள் ஓட்டுவதும் ஒன்று. சைக்கிள் ஓட்டினால் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும், இதய நோய் அபாயத்தைக் குறைக்கும். இரவில் நல்ல உறக்கத்தைத் தரும். கொழுப்பைக் குறைக்கும், நோய் எதிர்ப்பு சக்தியையும் கூட்டும். இவ்வாறு சைக்கிள் ஓட்டுவதில் அதிகளவில் நன்மைகள் உள்ளன.


ஆனால், தினமும் அதிக நேரம் ஓடுவதும் சைக்கிள் ஓட்டுவதும் ஆபத்து என்று ஆய்வில் தெரியவந்துள்ளது என்று அமெரிக்க மருத்துவக் கழகம் குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சியான சைக்கிள் ஓட்டம் எமது இதயத் தசைகளை பலவீனமாக்கி விடக் கூடும்.

கடுமையான உடற்பயிற்சிகளால் பலவீனமடையும் இதயம் வழக்கத்தை விட வேகமாகவோ, மெதுவாகவோ துடிக்கத் தொடங்குகிறது.

இது, சில நேரங்களில் இதய செயலிழப்பிலும் கொண்டுபோய் விட்டு விடும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

“ கடுமையான உடற்பயிற்சிகளால் பலவீனமடையும் இதயம் வழக்கத்தை விட வேகமாகவோ, மெதுவாகவோ துடிக்கத் தொடங்குகிறது. இது, சில நேரங்களில் இதய செயலிழப்பிலும் கொண்டு போய் விட்டு விடும்.



“ நடுத்தர வயதில் உள்ளவர்களில் அதிகளவு புரதம் உள்ள உணவுகளான, இறைச்சி, பால் மற்றும் சீஸ் போன்ற உணவுகளை உட்கொள்பவர்களின் உடல் நலம் விரைவில் பாதிக்கப்படுகிறது.


## அசைவம் உட்கொண்டால் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புண்டு

அசைவ உணவு உண்பவர்களுக்கு புற்று நோயால் உயிரிழக்கும் ஆபத்து அதிகம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 50 வயதுக்கு மேற்பட்ட, 6,318 பேர்களிடம் ஆய்வுகளை நடத்தினர்.


அவர்கள் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், அசைவஉணவுகள் மற்றும் சீஸ் உணவு வகைகளை அதிகம் உண்டதால் புற்று நோயால் பாதிக்கப்பட்டு பலர் உயிரிழப்பின் விளிம்பில் உள்ளனர்.

நடுத்தர வயதில் உள்ளவர்களில் அதிகளவு புரதம் உள்ள உணவுகளான, இறைச்சி, பால் மற்றும் சீஸ் போன்ற உணவுகளை உட்கொள்பவர்களின் உடல் நலம் விரைவில் பாதிக்கப்படுகிறது.



குறைவான புரதச் சத்துள்ள உணவுகளை எடுத்துக்கொண்டால், புற்றுநோய் தாக்கும் அபாயம் குறைவு. தாவர உணவுகளில் இருந்து கிடைக்கும் புரதச் சத்துக்கள், மாமிச புரதத்தைப் போன்று அபாயகரமானவை அல்ல, நடுத்தர மற்றும் குறைவான புரதத்தை எடுத்துக் கொள்வதன் மூலம், இறப்பு விகிதத்தை 21 வீதத்துக்குக் குறைக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## பச்சை வாழைப்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டால் அல்சர் ஏற்படாது



உள் குடல்களில் சுரக்கும் அமிலங்களும் நச்சுப் பொருள்களும் அரிப்பதனால் குடல் புண் (அல்சர்) ஏற்படுகிறது. பச்சை வாழைப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இந்தப் பாதிப்பில் இருந்து விடுபடலாம்.

குடல்களில் பழுதுபட்ட மெல்லிய சவ்வுத் தோல்களை விரைவில் வளரச் செய்து புண்ணை ஆற்றும் சக்தி பச்சை வாழைப்பழத்துக்கு உள்ளது.

## பெண்களை விட ஆண்களுக்கு விரைவில் முதுமை

பெண்களை விட ஆண்கள் தான் விரைவில் முதுமைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதற்கு காரணம், பழக்கவழக்கங்கள். பழக்கவழக்கங்களில் கவனமாக இருந்தால், நீண்ட நாள்கள் இளமையுடன் இருக்கலாம்.

முதுமைத் தோற்றத்தை வெளிப்படுத்துவதில் முக்கியமானது சரும சுருக்கங்கள் தான்.

இவை பெண்களில் வெளிப்படையாகத் தெரியும். ஆனால், ஆண்களில் தெரிய சில காலம் எடுக்கும். இப்போது ஆண்கள் தங்கள் அழகைப் பராமரிக்க எளிய வழிகள் உள்ளன.

ஆண்கள் தினமும் முகச் சவரம் செய்வதால் சரு மம் மிகவும் கடினமாவ தோடு, வறட்சி மற்றும் ஒரு வித சுருக்கமும் ஏற்படும். அதனால் ஷேவிங் செய்யும் போது வெதுவெதுப்பான நீரைப் பயன் படுத்த வேண்டும்.

ஷேவிங் செய்த பின்னர் ஷேவிங் லோசனை உபயோகப்படுத்தலாம்.

தினமும் திராட்சைப் பழ பழச்சாறு குடித்து வந்தால், சருமத்தில் நெகிழ்வுத்தன்மை நீள்வதோடு, இளமைத் தோற்றத்தையும் தக்க வைக்கலாம். முதுமைத் தோற்றமானது முகத்தில் மட்டும் வெளிப்படுவதில்லை. தசைகளின் மூலம் வெளிப்படும். எனவே தினமும் உடற் பயிற்சியை செய்து வந்தால், தசைகளானது இறுக்கமடைந்து, இளமையான தோற்றத்தைத் தரும்.


உணவில் காய்கறிகளின் அளவை அதிகரிக்க வேண்டும். பசளிக் கீரையை உணவில் அதிகம் சேர்த்தால், சுருக்கங்கள் ஏற்படாமல் இருப்பதோடு, சருமமும் பொலிவோடும்



இளமையுடனும் காணப்படும். அதிகமாக வெயிலில் சுற்றக்கூடாது, ஏனெனில் சூரியக்கதிர்கள் சருமத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி, சுருக் கங்களை எளிதில் உண்டாக்கி விடும்.

தினமும் குறைந்தது 8 டம்ளர் அல்லது 2 லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். இதனால் உடல் வறட்சி நீங்கி, உடலும் ஆரோக்கியமாக இளமையுடன் க்காணப்படும்.

இவை எல்லாவற்றையும் தவறாமல் கடைப்பிடித்தால் நீடித்த இளமையோடு இருக்கலாம்.




## ரயில் எஞ்சினை உடலில் கட்டி இழுத்துச் சாதனை

லத்வியாவைச் சேர்ந்த இருவர், 254 தொன் எடையுள்ள ரயில் என்ஜினைத் தமது உடலில் கட்டி இழுத்துச் சாதனை படைத்துள்ளனர்.

ஐரோப்பாவின் மிகப் பலசாலி மனிதர்கள் என்ற சாதனையை படைப்பதற்காக, லத்வியாவின் ரிகா சிட்டி நகரில் அவர்கள் ரயில் என்ஜினை இழுத்தனர்.

1972 ஆம் ஆண்டு ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இந்த ரயில் என்ஜின் 120 கார்களுக்கு அல்லது 50 யானைகளின் எடைக்குச் சமமானதாகும்.

இவர்கள் ஏற்கெனவே லத்வியாவின் அதி பலசாலி மனிதர்கள் என்ற சாதனையாளராக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கைகளைத் தட்டுவதால், இதய நோய்கள் மற்றும் ஆஸ்துமா சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வு கிடைக்கும். நரம்புகள் சீராக செயற்படும். இதயம், மூளை, நுரையீரல், கல்லீரல் போன்ற உறுப்புகளுடன் நரம்புகள் இணைய இது பெரிதும் உதவும்.**



# ஆரோக்கியமாக வாழ கைகளை தட்டுங்கள்

கைகளைத் தட்டினால் ஆரோக்கியமாக இருக்கலாம் என்று சொல்லும் போது கேட்பதற்கு நகைச்சுவையாக இருக்கலாம். ஆனால் அது நூற்று நூறு உண்மை என்று அறியும் போது அது ஒரு நல்ல விடயமாக அமைகிறது. காலையில் இசையைக் கேட்பதை விட இரண்டு கைகளைத் தட்டும் போது எழும் ஓசையைக் கேட்பது சிறந்ததாகக் கருதப்படுகிறது. பொதுவாக யாரையாவது உற்சாகப்படுத்தத் தான் நாம் கைகளைத் தட்டுவோம். அதே போல் நாம் சந்தோஷத்துடன் இருக்கும்போதும் கைகளைத் தட்டுவோம். பல பேர் பாட்டுப் பாடும் போது கைகளைத் தட்டுவார்கள். கைகளைத் தட்டுவதே ஒரு தனி குஷி தான். அதனால்தான் பல குழந்தைகளுக்குக் கை தட்டுவதென்றால் கொள்ளைப் பிரியமாக இருக்கும். கைகளைத் தட்டுவதால் கிடைக்கும் உடல்நல பயன்களைப் பற்றிப் பார்க்கலாம்.

**இதய நோய்**

கைகளைத் தட்டுவதால், இதய நோய்கள் மற்றும் ஆஸ்துமா சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வு கிடைக்கும். நரம்புகள் சீராக செயற்படும். இதயம், மூளை, நுரையீரல், கல்லீ ரல் போன்ற உறுப்புகளுடன் நரம்புகள் இணைய இது பெரிதும் உதவும். கைகளைத் தட்டினால் நரம்புகள் சீராகச் செயற்படும். மன அமைதி கிடைக்கும்.

**நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்**

இது உங்கள் உடலில் உள்ள குருதி வெள்ளையணுக்களை திடப்படுத்துவதால், உங்கள் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். இதனால் எவ்வகையான நோய்களில் இருந்தும் உங்கள் உடலை இது பாதுகாக்கும்.

**ஆற்றல் திறன் அதிகரிக்கும்**

குழந்தைகளின் ஆற்றல் திறனை அதிகரித்து அவர்களின் கல்வி சார்ந்த செயல் திறனை மேம்படுத்தும். இரத்த ஓட்டம் அதிகரிக்கும். கைகளைத் தட்டும் போது இரத்த ஓட்டம் ஊக்குவிக்கப்படும். அதனால் தமனி மற்றும் அசுத்த இரத்தக்குழாய்களில் உள்ள அடைப்புகள் அனைத்தும் நீங்கும். இதில் கெட்ட கொலஸ்ட்ரால் நீங்குவதும் அடங்கும்.

**கையெழுத்து அழகாகும்**

குழந்தைகளுக்கு கைகளைத் தட்ட பயிற்சி அளித்தால், அவர்களின் இயக்க செயற்றிறன்கள் மேம்படும். அதனால் அவர்களின் கையெழுத்து அழகாகும், சிறப்பாக எழுத வரும், எழுத்துப்பிழையும் குறையும்.

**நன்கு வியர்க்கும்**


தினமும் சாப்பிட்டபின் ஒரு மணித்தியாலத்துக்கு கைகளைத் தட்டுங்கள். அது வெப்பத்தை ஏற்படுத்தி கைகளிலும் கால்களிலும் வியர்க்கச் செய்யும்.

**ஈரப்பசை அதிகரிக்கும்**

நல்ல பயனைப் பெற, கைகளைத் தட்டுவதற்கு முன் தேங்காய் எண்ணெய் அல்லது கடுகு எண்ணெயை உள்ளங்கையில் தடவிக் கொள்ளுங்கள். அதனால் அதனை உங்கள் உடல் உறிஞ்சி விடும்.

**இதர உடல்நல பிரச்சினைகள்**

இதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மன அழுத்தம், ஆஸ்துமா, சளி, குதி வாதம், தலைவலி, தூக்கமின்மை மற்றும் முடி கொட்டுதல் பிரச்சினைகளை கைகளை தட்டுவதால் சரி செய்யலாம்.



# 'குருஷேத்திரம்' முள்ளியவளையில்

கீழைத்தேய ஆடல்கதை வடிவம் என்பது மற்றைய ஆடல்வகைகள் போன்று தனித்துவமான வரைவிலக்கணத்துடன் கூடிய கற்கை நெறிக்குட்பட்ட ஆற்றுகை வடிவமாகும். நம் நாட்டில் தென்னிலங்கையர் மத்தியில் இந்த ஆற்றுகை வடிவம், அவர்கள் மயப்பட்டிருப்பது போல் நம்மவர்கள் மத்தியில் இது முகிழ்விடும் நிலையில் தன்னும் இன்றுவரை இல்லை என்பது கசப்பான உண்மையாகும். ஆனால் இந்த அரங்கச் செயற்பாடு பற்றிய ஆரம்பநிலை அறிமுறை, செயல்முறை அம்சங்களை யேனும் நம்மவர்கள் மத்தியில் முகிழ்விடச் செய்யவும் குறிப்பாக ஆடல்கலை பயிலும் மாணவர்களுக்கு இத்தகைய ஆற்றுகை வடிவம் பயன்தரும் என்பதாலும், தனித்த ஆடல் துணுக்குகள் ஊடாக வெளிப்படுத்த முடியாத சமூகமயப்பட்ட செய்திகளை, அதிலும் குறிப்பாக, இனத்துவ அடையாளங்களுடன் இணைந்த வரலாற்று சான்றுகளையும் இதனூடாகத் துல்லியப்படுத்த முடியும் என்ற யதார்த்தமான எண்ணக்கருவின் வெளிப்பாடாக இந்தச் செயற்றிட்டம் அமையும் என்பதால் அதன் பெறுபேறுகள் பெறுமானம் மிக்கதாக அமையும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

இந்த இலக்கினை நோக்கியதாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மேலான அனுசரணையுடன் 2012 ஆம் ஆண்டு இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல் முயற்சியாக யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய ஆடலணியின் அரங்காற்றுகையாக "தாண்வ உதயம்" கீழைத்தேய ஆடல்கதை (நடன நாடகம்) யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் அரங்குக்கு வந்தவுடன் ஊடகங்களினதும் பார்வையாளர்களினதும் பரவலான அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது.

இந்தத் தொடரில் இந்தச் செயற்றிட்டத்தை அகலப்படுத்தும் முகமாக 2013 ஆம் ஆண்டு வவுனியாவைத் தளமாகக் கொண்ட ஆடலணி ஆரம்பிக்கப்பட்டு இரண்டரை மாத காலமளவு மேற்கொள்ளப்பட்ட செயலமர்வின் பெறுபேறாக "குரு ஷேத்திரம்" கீழைத்தேய ஆடல்கதை (நடன நாடகம்) உருவாகியது. பெறுமானம் மிக்க இந்த அரங்க வடிவம் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நகரங்களில் இடம் பெற்ற ஆற்றுகைகளைத் தொடர்ந்து எதிர் வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அரங்கில் ஆற்றுகைக்கு வருகிறது. இதில் 36 கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

இனத்துவ அடையாளங்களுடன் இணைந்த வரலாற்று சான்றுகளையும் இதனூடாகத் துல்லியப்படுத்த முடியும் என்ற யதார்த்தமான எண்ணக்கருவின் வெளிப்பாடாக இந்தச் செயற்றிட்டம் அமையும் என்பதால் அதன் பெறுபேறுகள் பெறுமானம் மிக்கதாக அமையும் என்பதே எதிர்பார்ப்பாகும்.


மேலும் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளின் க.பொ.த.சா/த உயர் தரங்களில் ஆடல்கல்வி பயிலும் மாணவ மாணவிகளதும், அதே தரங்களில், நாடகமும் அரங்கியல் பயிலும் மாணவ மாணவிகளுக்கும், அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமுரியதான "முன்னோடி மாதிரி" அரங்க வடிவமாக இது அமையும் என்ற இலக்கை நோக்கியதாகவே அங்கு அரங்காற்றுகை செய்யப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டின் முதுநிலை ஆடல் கலை ஆற்றுகையாளரும் ஓய்வுநிலை, அழகியற் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கலைஞர் வேல் ஆனந்தனின் நெறியாள்கையில் வவுனியா ஆடல்கல்வி ஆசிரிய ஆலோசகரும், இந்த ஆடலணியின் முக்கிய தொடர்பாளருமான திருமதி சூரியயாழினி வீரசிங்கத்தில் நட்டுவாங்கத்துடன் அரங்குக்கு வரும் "குருஷேத்திரம்" கீழைத்தேய ஆடல்கதை அரங்காற்றுகைக்கு, வடமாகாண கலாசார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி உஷாசுபலிங்கம் முன்னிலை வகிக்க வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் முதன்மை விருந்தினராகவும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் கௌரவ விருந்தினராகவும் வருகைதந்து சிறப்பிப்பார்கள். (ஓ)


# மின் தடங்களில் இருந்து வரும் ஒளியால் பாதிக்கப்படும் விலங்குகள்

உயர் சக்தி மின் தடங்களிலிருந்து வரும் அதி ஊதா நிற ஒளி உமிழ்வுகள் விலங்குகளை அச்சுறுத்தி விலகி ஓடச் செய்கின்றன என்று புதிய ஆய்வு ஒன்று கூறுகிறது. கன்சர்வேஷன் பையாலஜி என்ற சஞ்சிகையில் எழுதும் ஆய்வாளர்கள், இந்த மின்சார கம்பிகளிலிருந்து வரும் மின் உமிழ்வுகள் மனிதக் கண்களுக்குப் புலப்படாதவை, ஆனால் அவை விலங்குகளால் பார்க்கமுடியும் என்று கூறுகிறார்கள்.

இந்த மின்சார ஒளி உமிழ்வுகள் விலங்குகளின் உறை விடங்களைப் பிரிப்பதுடன், அவை புதிய இடங்களுக்கு செல்லும் பாதைகளையும் குலைக்கின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள். மின்சார நிறுவனங்கள் இது போல விலங்குகளை அச்சுறுத்துவதைத் தவிர்க்கும் வண்ணம் மின் தடங்களை அமைப்பது குறித்த வழிமுறைகளைப் பரிசீலிக்க உதவ, அவர்களுடன் இந்த ஆய்வு முடிவுகளை விவாதிக்க இருப்பதாகவும் ஆய்வாளர்கள் கூறினர்.



# அவசரகாரனுக்கு புத்தி மட்டு




காட்டுப்புதூர் என்ற ஊரில் தோட்டக்காரர் ஒருவர் இருந்தார். அவர் வீட்டின் பின்புறம் ஏராளமான காய்கறிச் செடிகளைப் பயிரிட்டு வந்தார். வெண்டை, கத்தரி, முட்டைக்கோஸ், கரட், முள்ளங்கி என்று ஏராளமான காய்கறிகள் அவரால் பயிரிடப் பட்டிருந்தன. அந்தத் தோட்டத்தில் ஒரு முயலும் அலைந்து திரிந்தது.

அது தினமும் இரவிலும், பகலிலும் வந்து காய்கறிகளை உண்ண ஆரம்பித்தது. இதனால் தோட்டக்காரர் நிறையவே சங்கடப்பட்டார். தனது தோட்டம் முழுவதும் அந்த குட்டி முயலால் நாசப்படுத்தப்படுவதாக எல்லோரிடமும் கூறி வருத்தப்பட்டார். எவ் வளவோ முயன்றும் அவரால் அந்த முயலைப் பிடிக்க முடியவில்லை. பிறகு வனத்துறையினரிடம் அவர் புகார் கொடுக்க வேண்டும் என்று உறுதி செய்தார். அதன்படி உடனே புறப்பட்டார். முயலின் தொல்லை தொடர்பாகப் புகார் கொடுத்துவிட்டு வந்தார்.

ஒரு முயலுக்காக நீங்கள் இத்தனை தூரம் சிரமப்படுவது கூடாது, இனி அந்த முயலை விரட்டுவது எங்கள் பொறுப்பு, கவலையை விடுங்கள், நாளை வந்து அந்த முயலைப் பிடித்து விடுகிறோம் என்று கூறினார் வனத்துறை அதிகாரி. சொன்னபடியே... வனத்துறை அதிகாரி மறுநாள் காலையில் தோட்டக்காரர் வீட்டுக்குச் சென்றார். தோட்டக்காரர் வீட்டுக்கு வனத்துறை அதிகாரி செல்லும் போது தனியாகச் செல்ல முடியுமா? அவரோடு பத்து பதினைந்து வேலைக்காரர்களும் உடன் சென்றனர். அனைவரும் முயலைப் பிடிப்பதற்காகக் கம்பி வலைகளையும், தடிகளையும் தூக்கிக் கொண்டு சென்றனர். தோட்டக்காரர் அனைவரையும் வரவேற்றார். அனைவருக்கும் நல்ல மோர் கரைத்துக் கொடுத்தார்.

பின்பு வனத்துறை அதிகாரி தோட்டத்தினுள் சென்று பார்த்தார். ஒரு சிறிய புதருக்குப் பின்னால் அந்த குட்டி முயல் அமர்ந்திருந்தது. அத்துடன் முட்டைக்கோசின் இலைகளைத் தின்று கொண்டிருந்தது. வனத்துறை அதிகாரி அதனை பிடிக்க முயன்றார். அது ஒரே தாவாகத் தாவியது. வேலிக்கு அருகில் சென்று ஒளிந்து கொண்டது. அதைக் கண்ட வனத்துறை அதிகாரியும், அவரது வேலைக்காரர்களும் அங்குமிங்கும் ஓடினர். தடிகளால் நிலத்தில் தட்டி முயலைப் பயமுறுத்தினர். பயங்கரச் கூச்சலுடன் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்தனர். ஆனால், முயல் அவர்கள் கையில் மாட்டாமல் தப்பிவிட்டது. சோர்ந்து போன வனத்துறை அதிகாரியும் அவரது வேலைக்காரர்களும் பெருமூச்சுடன் திரும்பினர்.

அப்போதுதான் அவர்கள் கண்ணில் தோட்டக்காரன் நிலத்தில் விளைந்து இருந்த முட்டைக்கோசும், கரட்டும் பட்டன. மறு நொடியில் அவர்கள் ஆவலுடன் கைக்குக் கிடைத்த காய்கறிகளை ஆளுக்கொன்றாகப் பறித்துக் கொண்டனர். வனத்துறை அதிகாரியின் செயலை தோட்டக்காரர் தடுக்க முடியுமா? எனவே, அவர் அமைதியாக இருந்தார்.

சிறிது நேரத்தில் அவர்கள் எல்லாரும் சென்று விட்டனர். தோட்டக்காரர் சுற்று முற்றும் பார்த்தார். அவரது தோட்டம் வனத்துறை அதிகாரியும், அவரது வேலைக் காரர்களும் ஓடியாடியதில் மிதிபட்டு நாசமாகி இருந்தது. எஞ்சியிருந்த ஒரு சில காய்கறி களையும் அவர்களே பறித்து கொண்டு சென்று விட்டனர். தோட்டக்காரர் தனது முட்டாள்த் தனத்தை எண்ணினார். ஆயிரம் முயல்கள் ஒன்றாய் வந்து தனது தோட்டத்தில் காய்கறிகளை உண்டால் கூட இத்தனை நாசம் ஏற்பட்டிராது என்று அவருக்குப் புரிந்தது. சாதாரணமான சின்ன விடயத்தைப் பெரிது படுத்தியதால் தனக்கு நஷ்டம் ஏற் பட்டதை அவர் புரிந்து கொண்டார், தலைகுனிந்தார். கண்ணீர் விட்டபடி அங்கிருந்து சென்றார்.

சிறுவர்களே சிறு நஷ்டம் வருகிறதே என்று பெரிய பெரிய தடுப்பு முயற்சிகளை திடீரென்று நாம் செய்வதால் பெரும் நஷ்டம் கூட சில நேரங்களில் ஏற்படலாம். புரிகிறதா? எனவே, எதையும் பொறுமையாக யோசித்துச் செய்ய வேண்டும். செய்வீர்களா?

## அசைவத் தாவரங்கள்

சில வரண்ட பிரதேசங்களில் வளரும் தாவரங்கள் அசைவத்தாவரங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றுக்கு உணவு கிடைக்காத நிலையில் சிறு பூச்சிகளை இலைகளைக் கொண்டு மடக்கி அவற்றில் இருந்து தமக்குத் தேவையான முக்கிய சத்துக்களை உறிஞ்சி எடுக்கின்றன. இந்தத் தாவரங்கள் இது போன்ற வேலைகளைச் செய்வதற்கு ஏற்ற வகையில் இலைகளையும் மற்றும் பை போன்ற வடிவ இலைகளையும், ஒட்டிக் கொள்ளும் பசைகளையும் கொண்டுள்ளன.





ஜென்லிசியா என்ற தாவரம், விலங்குகளின் ஜீரண உறுப்புப் போன்றே காணப்படுகிறது. டிராகன் பிளை, சண்டி ஆகிய தாவரங்களும் பூச்சிகளைப் பிடித்து விடுகின்றன்.

இதை விட கார்னிவோரஸ் பிளாண்ட்ஸ், லார்ட் அன்ட் லேடீஸ் ஆகிய தாவரங்கள் சிறு பூச்சிகளைக் கவர்வதற்காகவே மாமிச வாசனையை வீசுகின்றன.

*சிந்து சிவதாஸ்,*
*ஐங்கரன் வீதி, சுதுமலை.*

## தெரிந்து கொள்ளுங்கள்

1.உலகின் இரண்டாவது உயர்ந்த மலைச் சிகரம் காட்லின் - ஆஸ்டின்
2.எந்திர மனிதர்களின் தீவு என்று அழைக்கப்படும் நாடு - ஜப்பான்
3.சூரிய மண்டலத்தில் உள்ள மிகக் குளிர்ந்த கிரகம் - புளுட்டோ
4.ஒட்டகத்துக்கு நீந்தத் தெரியாது.
5.குரைக்கத் தெரியாத நாய் டிங்கோ என்ற நாயாகும்.
6.வெள்ளைத் தங்கம் என அழைக்கப்படுவது பருத்தி
7.மிருதங்கம் செய்ய பயன்படும் மரம் பலா.
8.இரவில் பூக்கும் பூக்களில் ஒன்று பன்னீர்ப்பூ.
9.சுயிங்கம் தயாரிக்கப் பயன்படுவது சப்போட்டா மரத்தின் பால்
10.பெண் வண்ணத்துப் பூச்சி முட்டை இட்டதும் இறந்துவிடும்.

சு.ஹரிபிரசாத், தரம் 4D,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.




ஆந்தை, ஸ்ட்றைஜி போர்மெஸ் இனத்தைச் சார்ந்த பறவை. இது பெரும்பாலும் தனித்தே காணப்படும். ஆந்தை இனத்தில் மொத்தம் 133 வகைகள் உள்ளன. அவற்றுள் மிகவும் அதிகமாகக் காணப்படும் வகை பார்ன் (Barn Owls) ஆந்தைகள் ஆகும். ஆந்தைகள் முன்னோக்கும் பெரிய கண்களையும், காதுகளையும், அலகையும் கொண்டவை. இதனால் பார்க்கும் திசையை மாற்றுவதற்கு முழுத்தலையையும் திருப்பவேண்டியுள்ளது. இது தனது தலையை இரு திசைகளிலும் 270 பாகைகள் வரை திருப்பவல்லது.

ஆந்தைகள் தூரப்பார்வை கொண்டவை. அவற்றின் கண்களுக்குச் சில அங்குல தூரத்திலுள்ளவற்றைக் கூட தெளிவாகப் பார்க்க முடியாது. எனினும், அவற்றின் பார்வை, மங்கலான வெளிச்சத்தில் மிகவும் சிறப்பாக இருக்கும். ஆந்தைகள் முழு இருட்டிலும் கூட ஒலியைப் பின்தொடர்ந்து வேட்டையாடக் கூடியவை. இவை காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், வயல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த இடங்களில் மரங்களின்மேல் அல்லது நிலத்தின்கீழ் உள்ள வளைகள், குகைகள், பாழடைந்த கட்டடங்கள், பாறை இடுக்குகள் போன்றவற்றில் வாழ்கின்றன. ஆந்தைகள் அவற்றின் இனத்தைப் பொறுத்து 6 அங்குலத்திலிருந்து 28 அங்குலம் வரை காணப்படுவதோடு ஒரு கிலோ முதல் நான்கு கிலோ எடை வரையும் உள்ளன. பெண் ஆந்தைகள் ஆண் ஆந்தைகளைவிடப் பெரியதாக இருக்கும். இவற்றின் இறகுகள் மிக மென்மையானவை. எனவே, இவை பறக்கும்போது சத்தம் கேட்பது இல்லை.

ஆந்தையின் முட்டைகள் கிட்டத்தட்ட கோளவடிவம் கொண்டவை. ஆந்தைகள் அவற்றின் வகையைப் பொறுத்து பன்னிரெண்டு வ்ரையிலான முட்டைகளை இடுகின்றன. பாறைகளின் விளிம்பிலோ, மரங்களில் வெறும் உதிர்ந்த இலைகள் மற்றும் இறக்கைகளின் மேலேயோ முட்டையிடும். இவை அடை காக்க ஆரம்பித்து 15 முதல் 35 நாள்களில் குஞ்சுகள் பொரிக்க ஆரம்பிக்கின்றன.

## பொது அறிவு

1.உலகில் இறப்பு வீதம் மிகக்குறைவான நாடு-குவைத்
2.கப்பல்களின் மயானம் என அழைக் கப்படும் இடம் - ஸர்காசோ கடல்.
3.பெண்களுக்கு முதன் முதலில் வாக் குரிமை வழங்கிய நாடு - நியூஸிலாந்து
4.சந்திரனில் மிக அதிகமாகக் காணப் படும் தனிமம் - ஹீலியம்
5.சாக்கடல் உள்ள நாடு - இஸ்ரேல்
6.கணிதத்தின் தந்தை - பிளாட்டோ
7.பாலைவனம் இல்லாத கண்டம் - ஐரோப்பா
8.இந்தியா, சீனாவைப் பிரிக்கும் எல் லைக்கோடு - மக்மோகன் கோடு
9.ஆசியாவின் ஒரேயொரு ரோமன் கத்தோ லிக்க நாடு - பிலிப்பைன்ஸ்
10.இந்தியாவின் ஷேக்ஸ்பியர் எனப்படு பவர் - மகாகவி காளிதாஸர்.


ச.திவாகர், தரம் -4ஏ,
ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.


## தெய்வங்கள்

*என்மீது அன்பு செலுத்தும்*
*தெய்வங்களே உங்களுக்கு நன்றி.*
*அன்புள்ள அம்மா, அப்பா*
*பாசமுள்ள அம்மம்மா, அம்மப்பா*
*என்னைத் தூக்கி வளர்க்கும்*
*அன்ரா, குட்டி அன்ரா*
*என்மீது அன்பு செலுத்தும்*
*சித்தி , சித்தா ஆகியோர்*
*என்றென்றும் எனது தெய்வங்களே.*
*கல்வி கற்பிக்கும் ஆசிரியை,*
*பேணிக் காக்கும் தலைமை ஆசிரியை,*
*ஆகியோரும் எனது தெய்வங்கள் தான்.*
*என்மீது அன்பு செலுத்தும்*
*ஏனைய உறவுகளே, பெரியோர்களே,*
*நீங்களும் எனது தெய்வங்கள் தான்.*

சு.ரிசானிகா,
திருஞானசம்பந்தர் முன்பள்ளி, சுன்னாகம்.

# மனிதக் குரலைக் கேட்டு அந்தக் குரலுக்குரிய இனக் குழுமத்தை கண்டுபிடிக்குமாம் யானை





மனிதர்களின் குரலை வைத்தே அவர்கள் ஆணா, பெண்ணா, வயதானவர்களா, சிறுவர்களா என்பதையும், அந்தக் குரலுக்குச் சொந்தமானவர்களின் இனக்குழுமத்தையும்கூட அடையாளம் காணும் திறமை யானைகளுக்கு இருப்பதாக ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

ஆபிரிக்கக் காட்டு யானைகள் மத்தியில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள், Proceedings of the National Academy of Sciences என்கிற அறிவியல் சஞ்சிகையில் வெளியாகியுள்ளன.

இந்த ஆய்வுகளை சசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கேரன் மெக்கம்ப் மற்றும் முனைவர் கிரேமி ஷானன் ஆகிய இருவர் தலைமையேற்று நடத்தினார்கள்.

ஆபிரிக்கக் காட்டு யானைகளுக்கும் அந்தநாட்டில் இருக்கும் மாடுமேய்க்கும் மாசாய் இன மக்களுக்கும் இடையில் அடிக்கடி மோதல்கள் நடப்பது வழமை. மாசாய் இன மக்கள் யானைகளை வன்முறையாக அடித்து விரட்டுவார்கள் அல்லது கொல்வார்கள். ஆனால் அதே ஆபிரிக்காவைச் சேர்ந்த கம்பா இன மக்கள் விவசாயிகள். அவர்களுக்கும் காட்டு யானைகளுக்கும் மோதல்கள் வந்தாலும், இந்தக் கம்பா இன மக்கள் பெரும்பாலும் காட்டு யானைகளைக் கொல்லுவதில்லை.

இந்தப் பின்னணியில், பரிசோதனையில் இறங்கிய சசெக்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மாசாய் மற்றும் கம்பா இனங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் குரல்களை தனித்தனியாக பதிவு செய்தார்கள். அதோ பாரு, அங்க பாரு யானைகள் கூட்டம் ஒன்று வருது பாரு என்று இவர்கள் சொல்லுவதைத் தனித்தனியாக ஒலிப்பதிவு செய்தார்கள் விஞ்ஞானிகள்.

**குரலைவைத்து ஒருவரின் இனத்தை அடையாளம் கண்டன**

அந்தக் குரல்களைப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்தி ஆபிரிக்கக் காட்டு யானைகள் இருக்கும் இடத்தில் அவற்றின் காதில் விழும் விதமாக அவர்கள் ஒலிபரப்பினார்கள். இதில் மாசாய் இன ஆண்களின் குரல்களைக் கேட்டமாத்திரத்தில் இந்த காட்டு யானைகள் எல்லாம் விரைவாக தத்தம் குடும்பக் குழுக்களாக ஒன்றுகூடி தம்மைத் தாக்கவரும் எதிரியிடம் இருந்து தங்களைத் தற்காத்துக்கொள்ளும் விதமான செயற்பாட்டை, சமிக்ஞைகளை வெளிப்படுத்தின.

ஆனால் கம்பா இன ஆண்களின் குரலைக் கேட்கும்போது இந்த யானைகள் அந்த மாதிரியான அவசரத்தையோ, அச்சத்தையோ தமது செயலில் வெளிப்படுத்தவில்லை. அதைவிட முக்கியமாக, இந்த மாசாய் இன ஆணின் குரலை விசேட ஒலிப்பதிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மாசாய் இனப் பெண்ணின் குரலைப்போல மாற்றி ஒலிபரப்பினார்கள்.


ஆனால் அப்போதும் கூட இந்த யானைகள் அது மாசாய் இன ஆணின் குரல் என்று அடையாளம் கண்டுகொண்டதுடன், அதிகபட்ச அச்சத்தை வெளிக்காட்டின.

இதன்மூலம், யானைகளின் காதுகேள் திறன் என்பது மனிதர்களின் காதுகேள் திறனை விட முற்றிலும் மாறுபட்டிருப்பதாகவும், யானைகள் மனிதர்களின் குரலைப் புரிந்து கொள்ளும் விதமே மனிதர்களிடமிருந்து வேறுபட்டதாக இருக்கிறது என்றும் கூறுகிறார் முனைவர் மொக்கொம்ப்.

அதுமட்டுமல்லாமல், யானைகளின் இந்த நுணுக்கமான கேள் திறன் அடிப்படையில் அவை மிக விரைவாக முடிவெடுப்பதைப் பார்க்கும்போது, யானைகள் தமது வாழும் சூழலுக்கு ஏற்ப தொடர்ந்து தம்மை தகவமைத்துக் கொள்வதில் மிகச்சிறப்பாக இருப்பதையும் இந்த பரிசோதனை முடிவுகள் உணர்த்துவதாகவும் இந்த ஆய்வை மேற்கொண்டவர்கள் கூறியிருக்கிறார்கள்.

காரணம் யானைகளின் பார்வையில், அவை சந்திக்கும் பன்முகத் திறன் கொண்ட வேட்டையாடிக் கொல்லும் விலங்கு மனிதனே என்னும்போது அந்தத் திறமை வாய்ந்த வேட்டைக்காரனிடமிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்ள யானைகள் அதிகபட்ச விழிப்புடன் இருப்பதையே அவற்றின் இந்த சிறப்புமிக்க பிரத்தியேக கேள் திறன் காட்டுவதாகத் தெரிவிக்கிறார் பேராசிரியர் மெக்கொம்ப்.

இது போன்ற ஆய்வின் முடிவுகள் யானைகளை மேலதிகமாகப் புரிந்து கொள்ள உதவும் என்பதையும் தாண்டி, யானைகளைப் பாதுகாப்பதற்கும் உதவும் என்கிறார் அவர்.




# மாமியார் மாமனாருடன் நட்புறவு ஏற்பட வழிகள்

நாம் அனைவருமே பெரியோர்களை மதிக்கத் தெரிந்தவர்கள். ஆனால் ஒருசில நடவடிக்கைகளால் மட்டுமே எமது மாமியார், மாமனாரிடம் வெறுப்பு ஏற்படுகிறது. அவர்களுடன் நல்லுறவு ஏற்பட சில வழிமுறைகளைப் பின்பற்றுங்கள். எப்பொழுதும் அமைதியாக மரியாதையுடனும் உறவுக்கான உரிமை கொண்டு அவர்களை அழைப்பதும், பேசுவதும் அவசியம். முதன்மையாக உங்கள் மாமியார், மாமனாரைப் பார்க்கச் செல்லும்போது சேலை அல்லது சுடிதார் அணிந்து கொண்டும், அவர்கள் மகிழ்ச்சி கொள்ளும்படியாகவும், பெருமை கொள்ளும்படியாகவும் இருக்க வேண்டும். மேலும் அதிகமாக அலங்கரித்துக் கொள்ளாமல், மென்மையான இயற்கைத் தோற்றத்துடன், சாதாரணமான பாணியில் செல்லுதல் அவர்களை ஈர்க்கும். முக்கியமாக அவர்களைப் பார்க்கும்போது, அவர்களைக் கவரும் வகையில் உடையும், பாவனையும் நன்றாக இருத்தல் மிகவும் அவசியம்.

பெரியோர்கள் என்பதால் அவர்கள் சொல்லை ஏற்றுக் கொள்வது நல்லது. எமது பெற்றோர்களிடம் எப்படி அன்பாக அவர்களின் பேச்சைக் கேட்டு நடந்து கொண்டோமோ, அதேபோல் அவர்களும் எமது தாய், தந்தையரே என்று எண்ணி நடந்தால் பிரச்சினைக்கு இடம் இல்லை. அவர்களை நண்பர்கள் போல் கருதி, வீட்டில் அவர்கள் முன்னிலையிலேயே அனைத்தையும் செய்தல் அவர்களுக்கு சந்தோசத்தைக் கொடுக்கும். ஏதேனும் தவறு செய்துவிட்டால், அவர்களிடம் மறக்காமல் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவர்களுடன் சிறுவயதில் இடம்பெற்ற நகைச்சுவை நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மூலம், அவர்கள் ஆனந்தம் கொள்வதோடு, நல்ல நட்புறவு வளரும். மிக முக்கியமாக, நீங்கள் எங்கேனும் வெளியே செல்வதாக இருந்தால், அவர்களிடம் சொல்லிச் செல்ல வேண்டும்.

மேலும் எப்போதும் முகத்தில் ஒரு புன்னகை மற்றும் நட்பு உள்ளத்துடன் அவர்களிடத்தில் நடந்து கொள்ளவும். எமது துணைவரின் தாய், தந்தையரை ஏன் விரோதியாக எண்ண வேண்டும். நட்புடன் நடந்து கொண்டால் உறவுகள் சுமுகமாக, சண்டையின்றி, சந்தோசமாக இருக்கும். அதனால் புன்னகையுடனும், பணிவுடனும் நடந்து கொண்டு அழகாகக் காட்சி அளியுங்கள்.



# வாக்குவாதம் குடும்பத்துக்கு ஆகாது

எப்போது பார்த்தாலும் சண்டைதான்; எதற்கெடுத்தாலும் வாக்குவாதம். வீட்டில் நிம்மதியே இல்லை என்று புலம்புபவரா நீங்கள். தம்பதியரிடையே இணக்கம் ஏற்படவும், குடும்பத்தில் அமைதி நிலவவும் எதற்கெடுத்தாலும் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்கின்றனர் உளவியலாளர்கள்.

### அவமதிப்பது ஆபத்து

பேச்சுவார்த்தை ஓரளவில் ஆரம்பிக்கும் போதே அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வழியைத் தேடவேண்டும். அதை விடுத்து ஒருவருக்கு ஒருவர் எதிர்ப்பேச்சுப் பேசி அவமதிக்கும் வகையில் பேசுவது மிகச்பெரிய பிரச்சினைக்கு வழி வகுக்கும். எனவே பேசிய பின்னர் இப்படிப் பேசி விட்டோமே என்று நினைத்து வருந்துவதை விட, எதையுமே பேசும் முன்பு யோசித்துப் பேசுவது இருவருக்குமே நல்லது.

### உண்மையைக் கண்டறியுங்கள்

கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய். எனவே உங்கள் துணைவரைப் பற்றி உங்களுக்குத்தான் முழுதாக தெரிந்திருக்க வேண்டும். உங்கள் வீட்டுக்காரரை அங்கே பார்த்தேனே; பக்கத்தில் ஒரு பெண் இருந்தாரே என்று யாராவது கொளுத்திப் போட்டால் அதையே சாக்காக வைத்து கணவர் வீட்டுக்கு வந்த உடன் குடையக் கூடாது. அவராக ஏதாவது சொல்கிறாரா என்று அமைதி காக்கவும். இல்லையா? வேறு விடயத்தில் ஏதாவது பேசிவிட்டு அதோடு சேர்த்து மெதுவாகக் கேட்கவும். அப்புறம் சண்டைக்கு ஏது வழி? எது உண்மை என்று தெரிந்து கொண்டால் மகிழ்ச்சியான ஆரோக்கியமான வாழ்க்கை உங்களுடையதுதான்.



### முயலுக்கு மூன்று கால்

எப்பொழுதுமே நீங்கள் சொல்வதுதான் சரி என்று நினைக்காதீர்கள். உங்கள் பக்கம் தவறு நேரவும் வாய்ப்பு உள்ளது. எனவே வாழ்க்கைத் துணையானவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைக் காது கொடுத்துக் கேளுங்கள்.

ஈகோ என்பது குடும்பத்துக்குள் எட்டிப்பார்க்க ஆரம்பித்தால் மகிழ்ச்சி என்பது காணாமற் போய்விடும். அப்புறம் யார் பெரியவர், யார் சொல்வது சரி என்று எப்போதும் வாதம் செய்ய வேண்டியதுதான். நம்முடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு வேடிக்கையாகிவிடும்.

### தினமும் எழுதுங்கள்

அன்றாடம் நடந்தவைகளை தினமும் எழுதுங்கள். அலுவலகமோ, வீடோ, எங்கே என்ன நடந்தது என்பதை எழுதி துணையின் பார்வைக்கு வைக்க லாம். அவர் அணிந்திருந்த உடை அழகா யிருந்தால் அதையும் கவிதையாகக் குறிப் பிடலாம். தேவையற்ற பேச்சுக்கள் குறையும். உங்கள் செயல் யோசிக்க வைக்கும். சிறிய தவறென்றாலும் விட்டுக்கொடுத்துப் போங்கள். அப்புறமென்ன நீங்கள் தான் ஆதர்ச தம்பதிகள்.

# இவர்கள் செய்த பாவம் தான் என்ன?







வியட்நாம் போரின்போது பயன்படுத்தப்பட்ட இரசாயன ஆயுதங்களின் தாக்கம், 55 ஆண்டுகள் ஆகியும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

வியட்நாமில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில், 1960 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா Orange என்ற இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்தியது.

காடுகளில் பதுங்கியிருந்த தீவிரவாதிகளை அழிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட இந்த இரசாயனம், அருகிலிருந்த நகரங்களுக்கும் பரவியது.

இதனால் மில்லியன் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன், 1,55,000 குழந்தைகள் பாதிக்கப்பட்டனர். மேலும் புற்றுநோய், நீரிழிவு நோய்கள் குழந்தைகளை வாட்டி வதைத்தன, உடல் ஊனமுற்றவர்களாக பிறந்தன. அவர்கள் அனைவரையும் காப்பகத்தில் பெற்றோர்கள் கொண்டுபோய் சேர்த்தாலும், போதிய நிதியில்லாமல் குழந்தை களைக்கவனிப்பது என்பது பெரும்திண்டாட்டமாய் இருந்து வருகிறது.இந்த அவலம் 55 ஆண்டுகள் ஆகியும் முடி யாமல் இன்னமும் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றது.







RE
World's No.1

# விசேடம்சங்கள் 20 உடன்

புரட்சிக்குரிய மாற்றத்தை கொண்டு வந்த பஜாஜ் RE முச்சக்கர வண்டி



**என்ஜினின் விசேடம்சங்கள்**
- ஸ்பார்க் பிளக் இரண்டுடனான, முழுமையான எரிபொருள் தகனத்தைக் கொண்ட சூழலுக்கு உகந்த என்ஜின்
- TPS (Throttle Position Sensor) உடனான டிஜிடல் இக்னீஷன்
- நவீனமயப்படுத்தப்பட்ட என்ஜினை குளிரூட்டும் தொகுதி
- மேம்படுத்தப்பட்ட என்ஜின் சிலின்டர் பிலோக் மற்றும் பிஸ்டன்
- மேம்படுத்தப்பட்ட கிரங்கேஷ்

**இயந்திரங்களின் விசேடம்சங்கள்**
- மேம்படுத்தப்பட்ட பிற்பக்கம் செலுத்தக்கூடிய கியர் தொழில்நுட்பம் (Reverse Gear)
- இரட்டை எரிபொருள் பில்டர்
- இலகு தொழிற்பாடுடைய கிலச்
- மேம்படுத்தப்பட்ட கியர் தொகுதி
- மேம்படுத்தப்பட்ட என்ஜின் கவர் மற்றும் எரிபொருள் தாங்கி

**உடலமைப்பின் விசேடம்சங்கள்**
- அதிக பலமுடைய செசி
- மேம்படுத்தப்பட்ட செசி பம்பர்
- மேம்படுத்தப்பட்ட பலமான முகத்தோற்றம்
- நவீனமயப்படுத்தப்பட்ட திருப்பல் சமிக்ஞை விளக்குகள் மற்றும் பிற்பக்க விளக்குகள்
- மழை நீர் உட்புகாதவாறு மேம்படுத்தப்பட்ட கூரை

**உட்பக்க விசேடம்சங்கள்**
- நவீனமயப்படுத்தப்பட்ட, அதிக இடவசதியுடைய சாரதி கூடத்தின் அடிப்பகுதி
- சீரான வின்ட்சீல்
- மேம்படுத்தப்பட்ட உட்கூடம்
- சீரான பக்கத்தோற்றம் மற்றும் சொகுசான ஆசனம்
- மேலதிக உபகரண தொகுதி



விசேட அறிமுக விலை ரூ. 429,500/- இவ்விலையில் VAT உள்ளடக்கப்படாததோடு, முன்னறிவித்தலின்றி மாற்றமடையலாம். நிபந்தனைகளுக்கு உட்பட்டது.




DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
சென் மார்டின் டிரேட் சென்டர், பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 7700600 - 1 பெக்ஸ்: 021 2221177 உடனடி அழைப்பு : வசந்தன் - 077 3441833
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

# ஆவி உலக ஆராய்ச்சிகள்



ஆவி உலகம் பற்றி உலகெங்கிலும் ஆராய்ச்சிகள் நடந்த வண்ணம் உள்ளன. சில சமயம் ஆய்வாளர்களது கருத்துக்கள் சில ஒன்றுக்கொன்று மாறுபட்டும் உள்ளன. உதாரணமாக ஆவி உலகம் பற்றி ஆராய்ந்த வெளிநாட்டவர் ஒருவருக்கு ஆவி கூறியதாகச் சொல்லப்படும் தகவல்கள்:

ஆவியுலகத்தில் ஏ, பி, சி, டி என்று நான்கு பகுதிகள் உள்ளன. ஏ, பி பகுதியில் இருப்பவர்கள் எல்லா உல்கத்தையும் பார்க்க முடியும். நினைத்த நேரத்தில் எங்கும் செல்ல முடியும். அவர்க்ள் புண்ணியம் செய்தவர்கள். பி - பகுதியிலிருந்து ஏ பகுதிக்குச் செல்ல முடியும். பி பகுதியில் வாழ்பவர்கள் தங்களது நல்ல எண்ணங்கள் மூலம் ஏ நிலைக்கு உயர முடியும். இருள் பகுதியில் இருப்பவர்கள் பேய்கள், தீய ஆவிகள் என அழைக்கப் படுகின்றனர்.

எதிர்காலத்தைப் பற்றி சரியாக கணித்துச் சொல்கிற சக்தி ஏ, பி பகுதியில் உள்ளவர்களுக்கு உண்டு. ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள் சொல்வது சரியாக இருக்காது. சில சமயங்களில் சில தீய ஆவிகள் வந்தும் உண்மைபோல் பேசிக் குழப்பி விடுவதும் உண்டு. ஆவி உலகிலும் சட்ட திட்டங்கள் உள்ளன. அங்கு பிறர், ஒருவருக்கு கெடுதல் செய்தால் தண்டனை உண்டு. கடவுளின் ஆணைப்படி பரிசுத்த ஆன்மாக்கள் ஆவி உலகைப் பொறுப்பேற்று நடத்துகின்றன. ஆவி உலகில் உள்ள ஆவிக்கு வளர்ச்சி உண்டு. குழந்தையாக இருக்கும் ஆவி, நீண்ட காலத்துக்குக் குழந்தை மன நிலையிலேயே இருப்பதில்லை. தனது அனுபவம், ஆர்வத்திற்கேற்ப அவை வளர்ச்சி அடையும். ஆவிகளுக்கு நினைத்த மாத்திரத்தில், நினைத்த இடத்துக்கு அதிவேகமாகச் செல்லக்கூடிய சக்தி உண்டு. பிராணிகளுக்கு என தனி உலகம் உண்டு. தனியான சட்ட திட்டங்களும் உண்டு. காலையும் மாலையும் 5-7 வரை பூசை நேரம் பின்பற்றப் படுகிறது. இவையே ஆய் வாளருக்கு ஆவி கூறிய தகவல்கள்.

ஆவிகள் பற்றியும், தேவதைகள் பற்றியும் கண்ணதாசன் தனது 'அர்த்தமுள்ள இந்து மதம்' நூலில் குறிப்பிட்டிருக்கிறார். வாழ் வாங்கு வாழ்ந்த பலர், தேவதைகளாகக் கருதப்பட்டனர். முத்தன், முனியப்பன், காடன், மதுரை வீரன் என்பன போன்ற ஆண் தெய்வங்களும்; ஆலையம்மன், எல்லை யம்மன், படவேட்டம்மன் போன்ற பெண் தேவதைகளும், ஏதோ ஒரு காலத்தில் வாழ்ந்து மடிந்தவர்களாக இருக்க வேண்டும். என் கிறார் அவர்.

மேலும், அதுபோல் ஆண் தெய்வங்களிலும் கோபத் தெய்வங்களாகக் காட்சியளிப்போர் ஒருகாலத்தில் வீரர்களாக வாழ்ந்திருக்க வேண்டும். ஒருவேளை பயங்கரமான குணம் படைத்தவர்களாகவும் வாழ்ந்திருக்கலாம். அவர்களது ஆவியை அமைதிப் படுத்துவதற்கே பலி கொடுக்கும் பழக்கமும் வந்திருக்கலாம். பெண் தேவதைகளில் சில ருத்ர தேவதைகள் பயங்கரமான குணம் படைத்தவர்களாக இருந்து வாழ்ந்து சாந்தி இல்லாமல் இறந்து போனவர்களாக இருக்கலாம். அவர்களையும் அமைதிப்படுத்தவே பலி கொடுக்கும் பழ்க்கம் வந்திருக்கலாம்.

அவரவர்களுடைய சுற்றத்தினர், தங்கள் குலத்தில் வாழ்ந்த ஒருவனுக்கோ ஒருத்திக்கோ எழுப்பிய இந்தச் சிறு ஆலயங்கள், நாளடைவில் ஊராரின் நம்பிக்கைக்கு உரியனவாகி தெய்வங்களாகி இருக்க வேண்டும்' என்று அவர் தெரிவிப்பது தமிழர்களின் தொன்மையான சிறு தெய்வ வழிபாட்டுக்கும், ஆவி வழிபாட்டுக்கும் வலு சேர்ப்பதாய் அமைந்துள்ளது.

கண்ணதாசன் கூறும் ஆவிகள் உலக அனுபவமும் வியக்கத்தக்கது. அவர், இறந்து போனவர்களுடைய ஆவி தங்களுக்குப் பிரியமானவர்கள் உடலில் புகுந்து பேசுவதும் உண்டு. வேறு உடல்களைத் தன்னுடையதாகக்கொண்டு பேசுவதும் உண்டு. எனக்கே இதில் அனுபவம் உண்டு. 1941 ஆம் ஆண்டு என்னுடன் பிறந்த நாலாவது சகோதரி இறந்து போனார். அவருக்கு இரண்டு பெண்களும், ஒரு மகனும் உண்டு. அந்தப் பெண்களில் மூத்த பெண் மீது, என் சகோதரியின் ஆவி வந்து பேசுவது உண்டு. ஏதாவது முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது என் சகோதரி யின் ஆவி தன் மகள் உடம்பில் வந்து பேசும். அந்தப் பெண்ணுக்கு நான் மாமன்! சாதாரண நேரங்களில் மாமா' என்றழைக்கின்ற அந்தப்



பெண், ஆவி வந்து அழைக்கும் போது, தம்பி' என்றழைக்கும். ஏனைய உறவினரையும் என் சகோதரி எப்படி அழைப்பாரோ அப்படியே அழைக்கும். மேலும் குரலும் என் சகோதரியின் குரலாகவே இருக்கும். இதைநான் பலமுறை கண்டிருக்கிறேன். ஆவி வந்து சொன்ன விடயங்களெல்லாம் நடந்திருக்கின்றன என்று அவர் கூறியிருப்பது எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

பிரபல விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் ஆவியுலக ஆராய்ச்சியில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். அது பற்றி அவர் ஒரு கரு வியைக் கண்டுபிடித்திருந்ததாகவும் அதன் மூலம் ஆவிகளின் உதவிகளைப் பெற்று பல்வேறு கண்டுபிடிப்புகளை அவர் உல குக்கு வழங்கிய > V ï i Electronic voice phenomenon என்ற கருவி மூலம் ஆவிகளின் குரல்களை ஆராய்ச் சியாளர்கள் பதிவு செய்துள்ளனர். சிலர் புதிய பல கருவிகள் மூலம் ஆவிகளைப் புகைப் படம் எடுத்தும் உள்ளனர்.

மாத்யூ மானிங் என்ற ஆய்வாளர் ஹிட்லரின் ஆவியுடன் பேச முயற்சி செய்து அதில் வெற்றி பெற்றுள்ளார். அதுபோன்று ராவ்டிவ் என்ற ஆய்வாளரின் நண்பரான ரேமாண்ட் கேஸ் என்பவரும் ஆவி உலக ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

ஒருநாள் அவர் ஆவிகளின் குரலைப் பதிவு செய்ய முனைந்திருந்தார். அவர் காதுகளுக்கு ஒன்றுமே கேட்கவில்லை. பின் பிளேயரில் போட்டுக் கேட்ட போது அதில் ஆவிகளின் குரல் பதிவாகியிருப்பதை உணர்ந்தார். திரும்பத் திரும்பப் போட்டுக் கேட்டவர் அதிர்ச்சியடைந்தார். காரணம், அதில் 'ராவ்டிவ் தன் இறப்பை நெருங்கிக் கொண்டிருக்கிறார்' என்ற ஒலி பதிவாகி இருந்தது. அப்போது ராவ்டிவ் நல்ல உடல்நிலையில் இருந்தார்.

இறப்புக்கான எந்த அறிகுறியும் இல்லை. அதனால் ரேமாண்ட் அதைப் பெரிதாக எண்ணவில்லை ஆனால் அனைவரும் அதிர்ச்சியடையும் படி திடீரென ஒருநாள் ராவ்டிவ் திடீரென சாவடைந்தார். அது ஆவியின் குரல் தான் என்றும் அது முன்னெச்சரிக்கை செய்யவே வந்ததும் என்றும் பின்னர் அவர் உணர்ந்து கொண்டார். இது ஆய்வாளர்களால் ஆச்சரியமான ஒன்றாகக் கருதப்படு கிறது. இது போன்று பல அனுபவங்கள் பல ருக்கு ஏற்பட்டுள்ளன. ஆனாலும் ஆவியுலக மர்மங்கள் இன்னமும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

